# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 29 புதன்கிழமை (15.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 019


# மஹிந்தவுக்கு எதிரான லண்டன் ஆர்ப்பாட்டம்; நடவடிக்கை எடுக்க பிரிட்டிஷ் அரசு கைவிரிப்பு

## அது லண்டன் பொலிஸாரின் பொறுப்பு எனவும் தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 15

லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியது பிரிட்டிஷ் பொலிஸாரது பொறுப்பு. அந்த விடயத்தில் தலையிட முடியாது என்று கைவிரித்துள்ளது பிரிட்டிஷ் அரசு.

விடுதலைப் புலிகள் இயக்கம் பிரிட்டனில் தடை செய்யப்பட்டிருந்த போதும், அந்த இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இலங்கைக்கு எதிரான போராட்டம் தொடர்பில் பிரிட்டிஷ் அரசும் அதன் சட்டக் காவலர்களும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றனர் என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த, கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் லண்டன் விஜயம் தொடர்பாக ''டெய்லி மிரர்'' பத்திரிகையின் செய்தியாளர் சந்துன் ஏ.ஜெயசேகர 'ஈ மெயில்' மூலம் பிரிட்டிஷ் தூதரகத்திடம் எழுப்பிய கேள்விகளுக்கே மேற்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது.

அந்தச் செவ்வியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு :-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்குச் சென்றிருந்த வேளை உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அவருடைய பாதுகாப்புக்கு அங்கு எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் 2001ஆம் ஆண்டு பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டது. இதன்படி, அந்த இயக்கத்துக்கு ஆதரவாக கூட்டங்களை நடத்துவதோ, அந்த இயக்கத்துக்கு ஆதரவான பிரசாரங்களில் ஈடுபடுவதோ அல்லது அந்த இயக்கத்தின் சின்னங்களை வைத்திருப்பதோ குற்றமாகும்.

இதுதொடர்பில் ஏதாவது குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் பிரிட்டன் பொலிஸார் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பர்.

பிரிட்டனில் சட்டமுறையின்படி பொலிஸாரின் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடமுடியாது என குறிப்பிட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் ஒக்ஸ்போட் (28ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே...

உள்நாடு 2 — வடக்கில் ஜனவரியில் தேர்தல்

குடாநாடு 7 — குறுந்தூர கதிர்வீச்சுப் பிரிவு தெல்லிப்பழையில்

விளையாட்டு 25 — உலகக் கிண்ண அணியில் சனத்


# வெளிநாடுகளிலுள்ள புலிகளின் சொத்துக்களை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை

## சர்வதேச நாணய நிதியம் உதவும் எனத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

உலகின் பல நாடுகளில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின்சொத்துக்களை மீளப் பெற்று அரசுடைமையாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு அமைவாக புலிகளின் சொத்துகளை அரசுடைமையாக்க இலங்கை அரசுக்கு சர்வதேச நாணய நிதியம் உதவ முன்வந்துள்ளது என்றும் -

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் 1267ஆம் மற்றும் 1373ஆம் பிரகடனங்களுக்கு அமைய சொத்துக்களை சுவீகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்கவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரகடனங்களை அமுல்படுத்துவதில் இலங்கை அரசு எதிர்நோக்கக்கூடிய சிக்கல்களுக்கு சர்வதேச நாணயம் நிதியம் தீர்வுகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் 1267ஆம் பிரகடனத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகள், பயங்கரவாதிகள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சொத்துகளை முடக்குதல், பயணக் கட்டுப்பாடு விதித்தல், ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களைத் தடைசெய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என இந்தப் பிரகடனத்தில் (28ஆம் பக்கம் பார்க்க)

# 'விக்கி லீக்ஸ்' நிறுவுனர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 15

லண்டன் பொலிஸாரால் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தின் நிறுவுனரான ஜூலியன் அசேஞ்ச் பிணையில் செல்ல லண்டன் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

அடுத்த மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள விசாரணை வரை அசேஞ்ச், 240,000 இஸ்ரேலிங் பவுண் ரொக்கப் பிணையில் செல்லவே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, இவரது நடமாட்டங்கள் குறித்துக் கண் (28ஆம் பக்கம் பார்க்க)

# தமிழில் தேசிய கீதம் பாடுவதை தடுப்பது அரசமைப்புக்கு முரண்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 15

பொது வைபவங்களில் தமிழில் தேசிய கீதம் பாடுவதைத் தடை செய்வது அரசமைப்புக்கு முரணானதாகும். அரசமைப்பில் தேசிய கீதம் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உலகின் ஏனைய நாடுகளில் பெரும்பான்மையினரின் மொழிகளிலேயே தேசிய கீதம் இசைக்கப்படுவதாக சில அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். இது அவர்களது அறியாமையைக் காட்டுகின்றது.

இந்தியாவில் பெரும்பான்மையினரது மொழி இந்தி. ஆனால், இந்தியாவின் தேசிய கீதம் ஒன்பது சதவீத மக்கள் பேசும் மொழியான வங்காள மொழியிலேயே பாடப்படுகின்றது.

சிங்கப்பூரில் 14 சதவீத மக்களின் (28ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பொருளாதாரம் 7.5 சத வீதத்தை எட்டும் நிலை

## சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

கொழும்பு, டிசெ. 15

இலங்கையின் பொருளாதாரம் மிகவும் பலமாக உள்ளது என்றும் இந்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் 7.5 சதவீதத்தை எட்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நாணய நிதியம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் பொருளாதார நிலைமை பலமாக உள்ளது. இந்த வருடம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதத்தை எட்டக்கூடிய நிலையில் உள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் பல சவால்கள் இருக்கின்றபோதிலும் இலங்கை அதிகாரிகள் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (28ஆம் பக்கம் பார்க்க)


தலைநகரில் மக்களின் அபிமானம் பெற்ற முன்னணி நிறுவனம்

நவீன் செரமிக்

தற்பொழுது யாழ் நகரிலும்...

Naveen Ceramic PVT LTD.

# 212, Palaly Road, Jaffna.

Tel: 212220033, 212220044


# கிழக்கு மாகாண பதில் முதல்வர் உதுமாலெப்பை

கொழும்பு, டிசெ. 15

கிழக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் வெளிநாடு சென்றுள்ளதாலேயே கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை பதில் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடு திரும்பும் வரை நிதி திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, உள்ளூராட்சி, பிராந்திய நிர்வாகம், மனித வலு, புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல், கிராமிய அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அமைச்சராகவும் உதுமாலெப்பை செயற்படுவார். (ஒ-சி)


புத்தம் புதிய பலவர்ண டிசைன்களில் திருமண அழைப்பிதழ்களின் தெரிவுகளுக்கு..

திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

போஸ்கோ

உங்கள் மணவாழ்வின் இனிய தொடக்கம் இங்கேயே ஆரம்பிக்கட்டும்!

இல. 252, பருத்தித்துறை வீதி, நல்லூர். (நல்லூர் கந்தசுவாமிகோவில் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணத்தில் ஜனவரி முதல் மாற்றம்

கொழும்பு, டிசெ.15

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார வரி அதிகரிக்கப்படும் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுக் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த வரிமுறைமை தொடர்பாக மக்களின் கருத்துகளைத் திரட்டுவதற்காக இன்று இலங்கை மன்றக் கல்லூரியில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

இதில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

90சதவீதத்துக்கு மேல் பாவிக்கப்படும் மின்சாரத்துக்கு 8சதவீத மின்சார வரி அறவிடப்படும் என்று 2011ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், சமயத்தலங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றுக்கு இவ்வரியில் இருந்து விதிவிலக்களிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-சி)

# தேசிய கீதத்துக்கு ஐ.தே.க. உரிமை கோருகிறது

கொழும்பு, டிசெ.15

இலங்கையின் தேசிய கீதத்தை உருவாக்கியது ஐக்கிய தேசியக் கட்சியே. இது தொடர்பாக ஏதாவது முடிவெடுப்பதென்றால், நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி தனது கருத்துகளை முன்வைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாடு எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தேசிய கீதம் சிங்களத்தில் மாத்திரம் இசைக்கப்பட வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ஒ-சி)

## அரங்கத்துடன் இணைந்து செயற்பட கூட்டமைப்பு மூவரை நியமித்தது

கொழும்பு, டிசெ.15

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்க் கட்சிகள் அரங்கமும் ஒருமித்து செயற்படுவது எனவும் 6 பேர் கொண்ட உப குழுவை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 3 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் அரங்கத்தின் சார்பில் 3 உறுப்பினர்கள் இவ்வாரத்துக்குள் நியமிக்கப்படவுள்ளனர் என தமிழ்க் கட்சிகள் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்க் கட்சிகள் அரங்கத்திற்கும் இடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 3 பேர் கொண்ட உறுப்பினர்களும், தமிழ்க் கட்சிகள் அரங்கத்தின் சார்பில் 3 பேர் கொண்ட உறுப்பினர்களும் கொண்ட உப குழுவொன்றை நியமித்து, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒருமித்து செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கெஸ்பேவ தொகுதி அங்கத்தவர்கள் 21 பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று இணைந்துகொண்டனர். இவர்களுக்கான அங்கத்துவத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வழங்கினார். இந்த நிகழ்வில் ஐ.தே.கவின் கெஸ்பேவ தொகுதி அமைப்பாளர் நிரோஷன் பாதுக்கையும் கலந்துகொண்டார்.

## 348 இலங்கையர்கள் வெளிநாடுகளில் மரணம்

கொழும்பு, டிசெ.15

இந்த ஆண்டு மாத்திரம் 348 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவில் 94 பேரும், குவைத்தில் 55 பேரும், கட்டார் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் தலா 32 பேரும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

15 லட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர் என வெளிவிவகார அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(ஒ-சி)

## கூட்டுறவுத்துறை நேர்காணலில் சில கருத்துப் பிறழ்வுகள்

கடந்த திங்கட்கிழமை உதயனில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனின் நேர்காணலில் சில விடயங்கள் தவறான புரிதல்களுக்கு உள்ளாகக் கூடிய வசன அமைப்புக்களுடன் இடம்பெற்றுவிட்டன.

இது தொடர்பில் உதவி ஆணையாளர் அனுப்பியுள்ள விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த 13ஆம் திகதி வெளியான உதயன் பத்திரிகையில் எனது நேர்காணல் வெளியாகி இருந்தது. அதில் சில வசனங்கள் வேறு விதமாக அர்த்தம் கொள்ளத்தக்க வகையில் வெளியிடப்பட் டுள்ளன.

அந்த நேர்காணலில் நான் அழுத்திக்கூறி தெளிவுபடுத்த விரும்பிய விடயம், கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெறும் மோசடிகளில் ஈடுபட்ட எவராக இருப்பினும், எனக்கு உரித்தான சட்டங்களுக்கு அமைய பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதேயாகும்.

நேர்காணலின் இரண்டாவது நிரையில் உள்ள முதலாவது பந்தி தொடக்கம் இரண்டாவது பந்தி இறுதி வரை குறிப்பிட்டுள்ள விடயங்கள் என்னால் அந்த அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. குறிப்பாக சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிதி மோசடி தொடர்பாக நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருப்பது தவறானதாகும். அதேபோல் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின் கிராமிய வங்கியில் சுமார் 2 கோடி ரூபா மக்கள் பணம் சூறையாடப்பட்டுள்ளது என்ற வார்த்தையும் என்னால் பயன்படுத்தப்படவில்லை.

சங்கத்தின் நிதிப்பற்றாக்குறைக்கான காரணங்களை மட்டுமே நான் வெளிப்படுத்தினேன். எனது கருத்துக்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மாறுபட்டுப் பொருள் கொள்ளத்தக்க வகையில் நேர் காணலின் சில பகுதிகள் பிரசுரமாகியதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும் கஷ்டங்களுக்கும் உதயன் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

# ஒரே நாளில் 2 செய்தியாளர் மாநாடுகள் ஏன்? ஊடகவியலாளர்கள் சரமாரியாகக் கேள்வி

**ஐ.தே. கட்சி ஊடகப் பேச்சாளர் கயந்த மழுப்பல் பதில்**



கொழும்பு,டிசெ. 15

ஐக்கிய தேசியக் கட்சியின் இரு தரப்பினரும் நேற்றுமுன் தினம் இரு வேறு செய்தியாளர் மாநாடுகளை நடத்தியது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக மழுப்பல் போக்கிலேயே நேற்றுப் பதிலளித்தார்.

தேசிய மாநாட்டின் பின் ஐ.தே. கட்சி எம்.பிக்கள், முக் கியஸ்தர்கள் கருத்தொருமைப்பாட்டுடன் செயற்படுவர் என்றால் நேற்றுமுன்தினம் (13 ஆம் திகதி), ஏன் இரண்டு செய்தியாளர் மாநாடுகள் நடத்தப்பட்டன? அனைவரும் ஒன்றிணைந்து ஒரே செய்தியாளர் மாநாட்டை நடத்தியிருக்கலாமே! - இப்படி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அங்கு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு கயந்த கருணாதிலக பதிலளித்தார்.

செய்தியாளர்:- ஐ.தே.கட்சி நேற்று இருவேறு இடங்களில் செய்தியாளர் மாநாடுகளை நடத்தியது ஏன்?

பதில்:- கட்சியினர் மத்தியில் பல்வேறு கருத்துகள் இருக்கலாம். ஆனால் இரண்டு செய்தியாளர் மாநாடுகளும் ஐ.தே.க. தேசிய மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே நடத்தப்பட்டன.

செய்தியாளர்:- வெள்ளவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் புத்திக பத்திரண எம்.பி. கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை தற்போது அரசில நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஒப்பிட்டுப் பேசினார். இது குறித்து உங்கள் கருத்து என்ன? ரணில் விக்கிரமசிங்க போன்ற சிரேஷ்ட தலைவர்கள் சிரேஷ்ட அமைச்சர்களைப் போல் ஒதுக்கப்படு வார்களா?

பதில்:- புத்திக பத்திரண எம்.பி. அவரது சொந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கலாம். நாங்கள் சிரேஷ்ட தலைவர்களை ஒதுக்கி வைக்கமாட்டோம்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறியவை வருமாறு:-

அமைச்சர்களுக்கும் அரச எம்.பிக்களுக்கும் அபரிமிதமான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், வாக்களித்த மக்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. 1975 ஆம் ஆண்டு அப்போதைய அரசு தேசிய பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பதாகக் கூறி மக்களை சிரமப்படுத்தியது. 1977 இல் ஐ.தே.கட்சி தனது தேசிய மாநாட்டை நடத்தியது. அதன்மூலம் எழுச்சி கண்ட ஐ.தே.கட்சி 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. அதேபோல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டின் பின்னரும் ஐ.தே.கட்சி எழுச்சிபெற்று ஆட்சியைக் கைப்பற்றும்.

இப்போது அதற்கான சமிக்ஞைகள் வெளிவரத் தொடங்கி விட்டன. ஐ.ம.சு. கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளின் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## இறுதி யுத்தத்தில் வன்னியில் பணியாற்றிய இரு டாக்டர்கள் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலிகளுடன் கடைசி வரை தங்கியிருந்த மருத்துவர்கள் இருவரும் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியின் முன்னாள் சுகாதாரப் பணிப்பாளர் ரி. சத்தியமூர்த்தி மற்றும் கந்தசாமி துரை கேதீஸ் ஆகிய மருத்துவர்களே அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

புலிகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2009ஆம் வருடம் மே மாதம் 16ஆம் திகதி அவர்கள் இரகசியப் புலனாய்வுத்துறையால் கைது செய்யப்பட்டிருந்தனர். அரசாங்கத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட மருந்து வகைகளைப் புலிகளுக்கு வழங்கியமை, மோதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரை அபகீர்த்திக்குள்ளாக்கும் கருத்துக்களைச் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுகளும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன. அதன்பின் அதே வருடம் ஓகஸ்ட் 24ம் திகதி அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் அவர்களுக்கெதிரான வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வந்தது.

ஆயினும் அவர்களுக்கெதிரான வழக்கை தொடர்ந்து முன்னெடுக்கப் போதுமான சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் இன்று நீதிமன்றத்துக்கு அறிவித்ததையடுத்து மருத்துவர்கள் இருவரும் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு வழக்கு த் தள்ளுபடி செய்யப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கை மேலும் கட்டியெழுப்புவதற்காக ஜனவரியில் அங்கு உள்ளூராட்சித் தேர்தல்

## வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அமைச்சர் பீரிஸ் எடுத்துரைப்பு

கொழும்பு, டிசெ. 15

வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி, மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்தி, தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றை மேலும் கட்டி வளர்ப்பதற்கு, அங்குள்ள தேர்தல் கட்டமைப்புக்களை உயிர்ப்பிக்க வேண்டிய தேவை உள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு அடுத்த மாதம் வடக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தவுள்ளோம்.

இவ்வாறு கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்திய சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்துவதன் மூலம், அப் பிரதேசத்தின் பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் மீள் வளர்ச்சி காண முடியும் என்றும் அமைச்சர் பீரிஸ் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் விவரித்திருக்கிறார்.

பொருளாதார, அரசியல் கட்டமைப்பின் வளர்ச்சி ஊடாக நீண்ட காலத் தேசிய நல்லிணக்கத்தை எய்த முடியும் என்பதையும் அமைச்சர் ராஜதந்திரிகளுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே வேளையில், நீண்டகால அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றையும் காணும் பொருட்டு கட்டமைப்பான முறையில், தமிழ் அரசியல் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்திவருகிறார்.

எனினும் தமிழ் அரசியல் தலைவர்களு டன் மட்டும் பேச்சு நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியாது. எல்லா இன மக்களுக்கும் ஏற்புடைய தான தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கள முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினால் மட்டுமே சகல இன மக்களும் ஏற்கும் தீர்வு ஒன்றைக் காண முடியும் என்றும் அமைச்சர் பீரிஸ் வெளி நாட்டு இராஜதந்திரிகளுக்கு எடுத்து விளக்கியுள்ளார். (த)

# கைதடி வடக்கில் பட்டப்பகல் வேளைகளில் தொடரும் திருட்டுக்களால் மக்கள் அச்சம்

## நேற்றும் வீடுடைத்து நகைகள் அபகரிப்பு

நாவற்குழி, டிசெ. 15

கைதடி வடக்கில் நேற்றும் பட்டப் பகலில் வீடுடைத்து 11 பவுண் தங்க நகைகள் திருடப் பட்டுள்ளன. பட்டப்பகலில் தொடரும் திருட்டுக்களால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:

வன்னியில் இருந்து திரும்பி மீளக்குடியமர்ந்த குடும்பம் ஒன்று வீட்டைப் பூட்டி விட்டு வருமானம் ஈட்டுவதற்காக தோட்ட வேலைக்குச் சென்றிருந்தது.

தோட்ட வேலை முடிந்ததும் மாலை 6 மணிக்கு வீடு திரும்பிய போது முன்கதவு திறந்திருந்ததைக் கண்ட வீட்டார் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

உள்ளே சென்று பார்த்த போது வீட்டின் கூரை ஓட்டைப் பிரித்துக்கொண்டு திருடர்கள் உள்ளே நுழைந்திருந்தனர் என்பது தெரியவந்தது.

திருடர்கள் வீட்டில் தேடுதல் நடத்தி 11 பவுண் நகைகளைத் திருடிச் சென்றதும் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் குறித்து நேற்று சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த மாதம் 23 ஆம் திகதியும் பிரஸ்தாப வீட்டுக்கு வடக்கே உள்ள அரச ஊழியர் ஒருவரின் வீடும் உடைக் கப்பட்டு 26 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன.

கைதடி வடக்கில் தொடரும் பகல் நேரத் திருட்டுக்களால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (ஒ-ஐ-121-288)

# இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 50,000 பேர் மறைந்து வாழ்கின்றனர்

கொழும்பு, டிசெ. 15

இராணுவத்தை விட்டு தப்பியோடிய 50,000 பேர் இன்னமும் மறைந்து வாழ்ந்து வருவதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த முன்னாள் படைவீரர்களை கைது செய்யும் நோக்கில் பெரும் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுரைக்கு அமைய இராணுவ பொலிஸார் இந்தத் தேடுதலை ஆரம்பிக்கவுள்ளனர்.

50,000 பேர் வரையில் இராணுவத்தை விட்டு தப்பியோடிச் சென்றுள்ளதாகவும், இதில் பலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் உயர் இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

தப்பிச் சென்றவர்கள் பற்றிய விவரங்கள் இராணுவத் தலைமையகத்தில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (த)

# மீண்டும் இன்புளுவென்ஸா காய்ச்சல் எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, டிசெ. 15

நாடெங்கும் மீண்டும் புதிய இன்புளுவென்ஸா தீவிரமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கின்றது.

புதிய இன்புளுவென்ஸா ஏ(எச்1என்1) வைரஸ் காய்ச்சல் நாடெங்கிலும் தீவிரமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சின் நோய் பரவல் தடுப்புப் பிரிவின் பிரதம மருத்துவ நிபுணர் சுதத் பீரிஸ் தெரிவித்தார்.

தடிமன், இருமல் மற்றும் கடும் காய்ச்சல் உடல் வலி போன்றவாறான அறிகுறிகள் தென்பட்டால் தாமதியாது அரச மருத்துவ நிபுணரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர்மேலும்குறிப்பிடுகையில்.

புதிய இன்புளுவென்ஸா ஏ (எச் 1 என் 1) வைரஸ் நோய் நாட்டின் பல பிரதேசங்களிலும் பரவியுள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி வரையும் 242 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது நாடெங்கிலும் பரவியுள்ள இந்நோய்க்கு 1-10 வயதுக்கும் 21-30 வயதுக்கும் இடைப்பட்டோரே பெரிதும் உள்ளாகியுள்ளனர். இந்நோய் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை உட்பட சகல மாவட்டங்களிலும் பரவி இருந்தாலும் கொழும்பு மாவட்டத்திலேயே இந்நோய்க்கு அதிகளவிலானோர் இலக்காகி உள்ளனர் - என்றார். (த)

# சங்கானையில் ரி56 துப்பாக்கியுடன் கொள்ளையர் 20 நிமிடங்கள் வரையில் நடத்திய வெறியாட்டம்

ஊரின் சத்தம் சந்தடி மெல்ல மெல்ல ஓய்ந்து கொண்டிருந்த நேரம் சங்கானை இலுப்பைத்தாழ் முருகன் ஆலயத்தில் தொண்டுப்பணிகளில் ஈடுபட்டுவிட்டு அருகிலுள்ள தமது வீட்டினை நோக்கி செல்பேசியில் கதைத்தவாறு வந்துகொண்டிருக்கிறார் ஜெகா னந்த சர்மா. அப்போது சற்றுமே எதிர்பார்க்காத வகையில் நான்கு பேர் அவ ரைச் சுற்றி வளைத்து ரி56 ரக துப்பாக்கி யினை நெற்றியில் வைத்துக் கொண்டு.

'' சத்தம் எதுவும் போடாமல் உன்னட்ட இருக்கிற நகையெல்லாத்தையும் யும் கழற்று'' என்று சுத்தத் தமிழில் கேட்டிருக்கின்றனர்.

காரிருள் வேளையில் நான்கு பேருக்கு நடுவில் அதுவும் துப்பாக்கி முனையில் ஜெகானந்த சர்மா என்ன செய் வது ஏது செய்வதென்று - தெரியாமல் ஐயோ. என்று குளறினார்.

ஜெகானந்த சர்மாவின் குரல் கேட்டு கோயிலடியில் இருந்து பதறியடித்து ஓடி வந்த அவரது தந்தையான நித்தியானந்தக் குருக்களின் கழுத்துப் பகுதியில் வாளால் வெட்டியும், துப்பாக்கியாலும் சுட்டனர்.

நித்தியானந்தக் குருக்கள் சுருண்டு நிலத்திலே விழுந்தார். அடுத்து ஜெகானந்த சர்மாவிற்கும் வயிற்றுப் பகுதியிலும் காலிலும் சுட்டுவிட்டு அவர்கள் இருவரும் அணிந்திருந்த நகைகளையும் அபகரித்துக் கொண்டு அருகில் அவர்களது வீட்டுக்குள் நுழைய முற்பட்டனர் ஆயுததாரிகள். அப்போது வீட்டு முற்றத்தில் நின்ற சிவானந்த சர்மா.

'' அப்பாவையும், தம்பியையும் சுட்டுப் போட்டு கள்ளர் இப்ப வீட்டுக்கு



வாறாங்கள்'' என்று அலறினார்.

அந்தச் சமயம் வீட்டுக்கேற்றடியில் நின்ற ஆயுததாரிகள் முற்றத்தில் நின்று

## பீதியில் உறைந்து போயிருக்கும் குடாநாட்டு மக்கள்

கொண்டிருந்த சிவானந்த சர்மாவையும் நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

தந்தையாரையும்,இரண்டு சகோதரர்களையும் சுட்டுப்போட்டாங்கள் இனி எங்களையும் சுடப்போகிறார்கள் என்று நினைத்துக் கொண்ட நித்தியானந்தக் குருக்களின் இன்னொரு மகனான பவானந்த சர்மா தானும் தனது தாயாரையும் வீட்டிலிருந்த அண்ணியையும் வீட்டுக் குள் பூட்டிவிட்டு உள்ளே இருந்தனர்.

வீட்டுக்குள் இருந்தவாறு 119 என்ற இலக்கத்தினை அழுத்தி அவசர பொலிஸ் சேவைக்காகத் தகவல் கொடுத்தனர்.

வெளியிலே நின்று கொண்டிருந்த ஆயுததாரிகள் ''டேய் கதவைத்திறவுங்கடா பொலிஸிற்குப் போன் பண்ணாதீங்க குடும்பத்தோட சுட்டுப் போடுவம்'' என்று மிரட்டிக் கொண்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் முன்பக்கக் கதவை உடைத்துத் தள்ளி உள்ளே நுழைந்து விட்டனர்.

அப்போது அங்கிருந்த சீ.டி.எம்.ஏ தொலைபேசிக்கு பொலிஸாரின் அழைப்பு வந்தது பொலிஸாரும் இராணுவமும் உடனடியாக வந்து கொண்டிருக்கிறது என்று தொலைபேசி பீறிட்டு அலறியதைச் செவிமடுத்த கொள்ளையர்கள்.

'' டேய் மச்சான் பொலிஸ் தாண்டா போன் பண்ணுகிறான். வாங்கோடா போவம் என்று கூறிக்கொண்டு அந்த வீட்டு முற்றத்தில் நின்றிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை எடுத்துக் கொண்டு போக முயற்சித்துள்ளனர். அது பூட்டியிருந்ததால் அதனைத் தள்ளிவிழுத்தி விட்டு வீட்டின் இன்னொரு அறைக்குள் நின்ற 125 ரக மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றார்கள்.

சுமார் 20 நிமிடம் வரைக்கும் அங்கு அட்டகாசம் புரிந்த கொள்ளையர்கள் முகமூடியணிந்தவாறு மழைக்கவசம் அணிந்திருந்தனர் என்றும் ரி56 ரக துப்பாக்கிகளையும் வைத்திருந்தனர் என்றும் நித்தியானந்தக் குருக்களின் மனைவி தெரிவித்தார்.

கொள்ளையர்கள் அங்கிருந்து வெளியேறிய பின்னர் வீட்டுக் கதவினைத் திறந்து கொண்டு வெளியே வந்த பவானந்த சர்மா சுடப்பட்டும், வெட்டப்பட்டும் குற்றுயிராய் ஆங்காங்கே இரத்த வெள்ளத்தில் கிடந்த தனது தந்தையாரையும் , இரு சகோதரர்களையும் அம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

கவிநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு இ.போ.ச. சேவைக்கு 2 'என்ஜின்கள்' கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

இ.போ.ச. பஸ்களுக்கான மறுசீரமைக்கப்பட்ட ஐந்து இயந்திரங்கள் (என்ஜின்கள்) போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம வினால் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மத்துகம டிப்போவில் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின்போதே இவை கையளிக்கப்பட்டுள்ளன.

மறுசீரமைக்கப்பட்ட இந்த என்ஜின்கள் ஐந்து பஸ்களுக்குப் பொருத்தப்பட்டு அவை விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் இந்த பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவின் முயற்சியின் விளைவாகவே இந்த என்ஜின்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-14)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

கொழும்பு, டிசெ.15

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் அதேவேளை சமுர்த்தி உதவி பெறுவோர் அணியில் இணைய இடமளிக்கப்பட மாட்டா தென ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தொவித்தார்

சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 11 ஆவது வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்-

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அதற்கான ஆவணங்களை நிதியமைச்சுக்குக் கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வாறாயினும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஓய்வூயம் பெற்றதும் அவர்களை சமுர்த்தி உதவி பெறுவோர் அணியில் இணைய இடமளிக்க மாட்டோம். - என்றார்

இந்நிகழ்வில் மேற்படி தொழிற்சங்க ஊழியர்கள் சிலருக்கு கடன் உதவிகளும் சிறந்த சேவைக்கான விருதும் வழங்கப்பட்டன.

## புதையல் தோண்டிய இருவருக்கு ரூ.5 லட்சம் அபராதம்

மதவாச்சி, உடுபிம்புகலப் பிரதேசத்தில் புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட இருவருக்கு தலா இரண்டரை லட்சம் ரூபா அபராதம் விதித்து மதவாச்சி நீதிவான் சந்திம எதிரிமான்ன தீர்ப்பளித்தார்.

மாவாச்சி, உடுபிம்புகலப் பிரதேசத்தில் புதையல் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த ஐவர் மதவாச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது ஐவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது முதலாம், இரண்டாம் சந்தேக நபர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் இருவரும் இரண்டுவருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என நீதிவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

ஏனைய மூவரையும் அடுத்த வருடம் ஜனவரி 18ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-5)

## மனிதாபிமானப் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் விருது வழங்கிக் கௌரவிப்பு



கொழும்பு, டிசெ. 15

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கிய பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு பதக்கம் அளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது.

மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவ, கடற்படை, விமானப்படை, பொலிஸார் ஆகியோருக்கும் அதற்குப் பங்களிப்பு வழங்கிய சிலருக்கும் இதன்போது பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது 680 இராணுவத்தினருக்கும், 170 கடற்படையினருக்கும், 85 விமானப் படையினருக்கும், 65 பொலிஸாருக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பிரதமர் டி.எம்.ஜயரத்ன, பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கடலில் விஷ ஐந்து தீண்டி மீனவர் காயம்

தென்மராட்சி, டிசெ.15

கடலில் விஷ ஜந்து தீண்டியதில் கடற்றொழிலாளி காயமடைந்தார்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிக் கடலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ரி.சௌந்தரராஜா (வயது 42) என்பவரே பளைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-207)

## சைக்கிளில் சமாந்தரமாகச் சென்றவர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, டிசெ.15

வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்றவர்களை கொடிகாமம் பொலிஸார கைது செய்தனர்.

கைது செய்த 7 பேரையும் பொலிஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் தலா 500 ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரணச்சிறைத்தண்டனைஅனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.


## நாகபூஷணி அம்பாள் ஆலயம்



அம்பிகை அடியார்களே!

இராஜகோபுரம் அமைப்பதற்கான நிதி திரட்டல்

வடமாகாணத்தில் மிகவும் பிரபல்யமானதும் பழமை வாய்ந்ததுமான நாகபூஷணி அம்பாள் ஆலயங்கள் மூன்று உள்ளன. அவையாவன நையினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயம், காரைநகர் தங்கோடை நாகபூஷணி அம்பாள் ஆலயம்

அவ்வாறான பழமைவாய்ந்ததும் அற்புதங்களைக்கொண்ட ஆலயமான காரைநகர் தங்கோடை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் பெரியோரினதும் அடியார் களினதும் ஆசீர்வாதத்துடன் நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி (12.11.2010) வெள்ளிக்கிழமை அன்று காலை 07 மணி தொடக்கம் 09 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் அம்பாளின் திருவருளால் சிறப்புற நடைபெற்றது. அன்று தொடக்கம் கோபுரத்துக்கான அடித்தள கட்டட வேலைகள் (அத்திபாரம்) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அன்பர்கள், அடியார்கள், அனைவரும் வருகை தந்து அதனைப் பார்வையிடலாம். இராஜ கோபுரத்தைத் தொடர்ந்து செவ்வனே கட்டி முடிப்பதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. ஆகவே, தங்களால் இயன்றளவு கல், மணல், சிமெந்து, கம்பி போன்றவற்றைத்தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இவற்றை மேற்பார்வை செய்வதற்கும் பொருள்களைச் சேகரிப்பதற்கும் பின்வருவோர் செயற்படுவார்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

கணக்கு இல.: 71036419
இலங்கை வங்கி,காரைநகர்.
தங்கோடை, காரைநகர்.

சி.கந்தசாமி
ஆலயக் கணக்காளர், வேம்படி, காரைநகர்.
ஆலய பரிபாலன சபையினர்

## புதிய ஆரம்பம்

* O/L.ல் 100% உயர் அடைவு
* A/L. கணித விஞ்ஞான பிரிவுக்கான சிறந்த அடித்தளம்
* சிறந்த விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு

என்பவற்றை இலக்காகக் கொண்டு A/L. கணித விஞ்ஞான பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலுடன்.

செம்முறைப் பரிசோதனைகளினூடாக அனுபவம் மிக்க ஆசிரியர்களின் சேவை

தரம் 10, 11 கணித விஞ்ஞான வகுப்புகள் (ஆங்கிலம், தமிழ் மொழி மூலம்)

கலந்துரையாடல் 18.12.2010 (சனி) 2.00 PM

NEW EDUCATION WORLD

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

(107391)


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சுந்தரலிங்கம்

(J/ 66, J/ 67 கிராம சேவையாளர்)



இல.94, ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரலிங்கம் நேற்று (14.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் லலிதாவின் அன்புக் கணவரும் சிந்துஜன் (யாழ். பல்கலைக்கழகம்),யதுசன், நிருஜன் (மட்டக்களப்புப் பல்கலைக்கழகம்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7075

தகவல்:
குடும்பத்தினர்.

# சங்கானையில் ரி56 துப்பாக்கியுடன் கொள்ளையர்....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''இரத்த வெள்ளத்தில் வீதியில் கிடந்த எனது தந்தையாரையும் சகோதரர்களையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதில் எவ்வளவோ அல்லற்பட்டோம். வீட்டில் பெரியளவிலான வெடிச்சத்தங்கள் கேட்டதால் அயலிலுள்ளவர்கள் கூட உதவிக்கு வரவில்லை. ஒரு கணம் எங்களது குடும்பம் எதுவுமே தெரியாது திகைத்து விறைத்துப் போய் நின்றது.'' என்று மனக்குமுறலுடன் பவானந்த சர்மா தெரிவித்தார்.

சம்பவம் நடந்துமுடிந்து காயப்பட்ட எல்லோரையும் அம்புலன்ஸில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதன் பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸார், உடுவில் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, மானிப்பாய் பொலிஸார் அங்கு விரைந்து சென்றனர். அத்துடன் இராணுவப் புலனாய்வுப்பிரிவினரும்அங்குசென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இப்பொழுதெல்லாம் ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லை. இந்த வேளையில் இரவு 10மணிமுதல் 11 மணிவரையும் மக்கள் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது.

நிலைமை இப்படியிருக்கையில் இரவு 8.10 மணியளவில் ரி- 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தக் கொடூரச் சம்பவம் நடந்திருக்கிறதென்கிறபோது எல்லோரது மனங்களிலும் அச்ச அலைகளை உண்டு பண்ணியுள்ளது.

கடந்த 2006 ,2007 ஆம் ஆண்டுகளில் குடும்பத்தோடு பச்சிலம் பாலகனுடன் படுத்த படுக்கையில் சுட்டுக்கொன்ற தான கொடூரமான சம்பவங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. குடாநாட்டில் நாளொன்றுக்கு இரண்டு சுட்டுப்படுகொலை செய்திகளை மக்கள் பார்க்கத் தவறுவதில்லை. அந்தளவிற்கு அநியாயமான அவலங்கள் இடம் பெற்றதை யாரும் எளிதில் மறந்து விடமுடியாது. இன்னும் சொல்லப்போனால் எங்கள் உதடுகள் இறுக்கி மூடப்பட்டு மௌனங்களால் ஊரடங்கில் எங்கள் மனங்கள் உறைந்து போன காலமது. ஆனால் யுத்தம் முடிவடைந்து மக்கள் தற்போது அமைதியான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றபோது - மீண்டும் துப்பாக்கிகள் தங்கள் முனைகளை நீட்டி நிற்பது என்பது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதங்களில் அளவெட்டியில் இவ்வாறான இரண்டு சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒன்று வீட்டில் நின்ற நாயைச் சுட்டுக்கொன்று விட்டு அங்கிருந்தவர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்தி கொள்ளையடித்துச் சென்ற சம்பவம்.

இன்னொன்று ஆலயத்தில் தவில் வாசித்து விட்டு வீடு திரும்பியவரைச் சுட்டு படுகாயப்படுத்தியமை. இந்த இரண்டு சம்பவங்களிலும் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்பட்டார்களா? அல்லது விசாரிக்கப்பட்டார்களா? எதுவுமே இதுவரை நடந்ததில்லை. சட்டம் ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்ட வேண்டியவர்கள் என்ன? [illegible] *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஆறு பெருகுமுன் அணைகட்ட...

வடக்கு மகாணத்தின் பொருளாதார வளர்ச்சி, மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்தி, தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றை மேலும் கட்டி வளர்ப்பதற்கு, அங்குள்ள தேர்தல் கட்டமைப்புகளை உயிர்ப்பிக்க வேண்டிய தேவை உண்டு. அதனைக் கருத்திற் கொண்டு அடுத்த மாதத்தில் வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவுள்ளோம்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் நடத்திய சந்திப்பின்போது இவ்வாறு விவரித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதன் மூலம், அப்பிரதேசத்தின் பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் மீள் வளர்ச்சி காணமுடியும் என்றும் அமைச்சர் பீரிஸ் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

பொருளாதார, அரசியல் கட்டமைப்புக்களின் வளர்ச்சி ஊடாக நீண்டகால தேசிய நல்லிணக்கத்தை எய்தமுடியும் என்பதனையும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் அவர்.

மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளையில், நீண்டகால அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான, இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு கட்டமைப்பான முறையில், தமிழ் அரசியல் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் -

எனினும் தமிழ் அரசியல் தலைவர்களுடன் மட்டும் பேச்சு நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காண முடியாது. எல்லா இன மக்களுக்கும் ஏற்புடையதான ஒரு தீர்வை - நிரந்தரத் தீர்வை - எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தினால் மட்டுமே சகல இன மக்களுக்கும் ஏற்புடைய தீர்வு ஒன்றைக் காணமுடியும் - என்றும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு அமைச்சர் பீரிஸ் ''பிரசங்கம்'' செய்திருக்கிறார்.

அவரது அந்தப் பிரசங்கத்தில் உட்கருத்துக்கள் இரண்டு உள்ளன. தமிழர் தரப்பு அவசரப்படுவதால் இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாணும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பது ஒன்று. தமிழ் அரசியல் தலைவர்களுடன் மட்டும் பேச்சு நடத்தி தீர்வுகாணும் கருத்தும் அரசுக்கு இல்லை என்பது இரண்டாவது அம்சம்.

மொத்தத்தில்-

இது விடயத்தில் வெளிநாட்டு அழுத்தம் எதுவும் இல்லை என்று ஆகிவிட்டதால், ஆற அமர, காலத்தை இழுத்தடித்து, தமிழர்தரப்பைச் சோதித்துச் சோரவைத்து, நோஞ்சான் தீர்வு ஒன்றை திணிக்கும் கண்ணுக்குத் தெரியாத சூழ்ச்சி ஒன்று கருக்கொண்டிருக்கிறது.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, தமிழ் மக்களிடையே அரசியல் போட்டிகளையும் பேதங்களையும் ஏற்படுத்தி, மோதல்களைத் தோற்றுவித்து அவர்களுக்கு இடையே பாரிய பிளவுகளை உருவாக்கி, பலவீனமுறச் செய்து -

தான் கருத்தில் வைத்துள்ள உப்புச் சப்பில்லாத ஒருதிட்டத்தைத் "தீர்வு" என்று பெயரிட்டுத் திணிப்பது தான் அரசாங்கத்தின் உள்நோக்கம் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றைத் தூக்கிப்பிடித்துக் காட்டி, அதன் பின்னரே அரசியல் தீர்வு குறித்துச் சிந்திக்க முடியும் என்ற தனக்கு வசதியான சித்தாந்தம் ஒன்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. அது சரியானது என்ற தோற்றப்பாட்டை இப்போதிருந்தே கட்டி வளர்த்து, வெளிநாடுகளைத் தன்வழி இழுக்க, அத்திபாரம் இடுகிறது இலங்கை அரசு. உலக நாடுகளின் இராஜதந்திரிகளை அடிக்கடி சந்தித்து அவர்களை மூளைச் சலவைசெய்யும் யுக்தியின் முதலாவது அத்தியாயத்தை ஆரம்பித்திருக்கிறது அது.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது பழமொழி. அதனைக் கைக்கொண்டு தமிழர் பிரச்சினைக்கான தீர்வை நீண்ட காலத்துக்கு இழுத்தடித்து, நியாயமற்ற ஒன்றை உருவாக்கி தமிழ் மக்கள் மீது திணிக்கும் போது சர்வதேச சமூகம், அது நீதியானது நியாயமானது என்று ஒப்புதல் அளிக்க வைக்கும் முயற்சியை இப்போதே ஆரம்பித்து விட்டது அரசாங்கம்!

தமிழ் அரசியல் தலைவர்களே! இதனை முளையில் கிள்ளி எறிய உங்களிடம் ஏதாவது திட்டம் உண்டா? அல்லது வழமைபோல் இறுதிநேரத்தில் பதகளிக்கும் நிலைக்கு காத்திருப்பீர்களா? ஆறு பெருகுமுன் அணைகட்டச் சிந்தியுங்கள்.

# பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சால் சுகாதாரப் பரிந்துரையுடன் பாடநூல் பை அறிமுகம்

அச்சுவேலி, டிசெ.15

கல்வி அமைச்சு பாடசாலை மாணவர்களுக்கு சுகாதாரப் பரிந்துரையுடன் கூடிய பாடநூல் 'பை'யை வடிவமைத்து அறிமுகம் செய்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துகின்ற தற்போதைய பாடநூல் பைகள் சுகாதார ரீதியாகப் பொருத்தமான தரத்தில் காணப்படாமை, சரியான முறையில் பயன்படுத்தாமை மற்றும் சுமக்க முடியாத அளவு பாரமாய் இருந்தல் போன்றவற்றால் மாணவர்கள் சுகாதாரப் பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. எனவே இதனை அடுத்து சுகாதாரப் பரிந்துரையுடனான புதிய பாடநூல் பையை அறிவூட்டல் செய்துள்ளது.

''சுகாதார பரிந்துரையுடனான பாடசாலை பாடநூல் பை தொடர்பான அறிவூட்டல்'' என்ற தலைப்புடன் கூடிய சுற்று நிருபத்தின் மூலம் பாடநூல் பையின் அளவுத்திட்டங்கள் மற்றும் அமைப்பு முறைகள், வசதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பரிந்துரைக்கப்படாத பழைய பாடநூல் பைகளை மாணவர்கள் பயன்படுத்துவதன் மூலம் தசைகளிலும், மூட்டுக்களிலும் வலி உண்டாதல், விரைவாகக் களைப்படைதல், முள்ளந்தண்டில் வளைவு ஏற்படல், தோள்கள் கீழ் நோக்கி வளைதல், விபத்துக்கு உள்ளாதல், உளப் பிரச்சினைகளுக்கு உள்ளதால், உடலில் வெவ்வேறு இடங்களில் விறைப்பு மற்றும் பலசிரமங்கள் ஏற்படல் போன்றனவற்றை குறைத்துக் கொள்வதே இந்தப் பாடசாலைப் பையை அறிமுகப்படுத்துவதன் நோக்கமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பாடநூல் பைகள் நீள் சதுரமாக இருப்பதோடு அதன் மூலைகள் மடியாதவையாகவும் இரு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் உணவுப் பொதி மற்றும் தண்ணீர்ப் போத்தல்களை வைக்கத் தகுந்த இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இடுப்புப்பட்டி மற்றும் தோள் பட்டிகள் உடையதாக் இருத்தல் போன்ற வசதிகள் கொண்டதாக இருக்கும் எனவும் சுற்று நிருபத்தில் அறிவுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பரிந்துரையுடன் கூடிய பாடசாலை பாடநூல் பை அடுத்த ஆண்டில் மாணவர்களின் பாவனைக்கு வரக்கூடியதாக அறிவுறுத்தப்பட்டிப்பதோடு உரிய அமைப்பு முறையில் தயாரித்து விற்பனை செய்வதற்கு 170 தயாரிப்பாளர்கள் கல்வி அமைச்சால் பதிவு செய்யப்பட்டு அனுமதியுடன், பைகளை தயாரிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடசாலை நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு கொள்வனவு செய்ய முடியும்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையுடன் பதிவு செய்யப்பட்ட 170 தயாரிப்பாளர்களின் பெயர் விவரம், தொலைபேசி இலக்கம் உள்ளடங்கிய பட்டியலும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைகப்பட்டுள்ளன. (201-11)

# கோப்பாய் மத்தியில் வீட்டுக்காரர் நித்திரையில் இருந்தபோது திருட்டு

கோப்பாய், டிசெ.15

கோப்பாய் மத்தி, பிள்ளையார் கோயிலடியில் சமாதான நீதிவான் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் 4 பவுண் எடையுடைய தங்க ஆபரணம் மற்றும் 27 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்

குறித்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது ஓட்டைப் பிரிந்து உள் இறங்கிய திருடர்கள் அங்கு நீண்ட நேரம் தேடுதல் நடத்தி வீட்டில் உள்ள பொருள்களைச் சிதறி ஆராய்ந்துள்ளனர்.

குறித்த பொருள்களைக் களவாடிய பின்பு உறக்கத்தில் இருந்தவர்கள் மீது 'ரோச்' ஒளியைப் பாய்ச்சியுள்ளனர்.

வீட்டுக்காரர் உறக்கம் கலைந்து ஏனைய உறவினர் என நினைத்து உரையாடியபோது திருடர்கள் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே வீட்டில் உள்ளவர்களுக்குக் களவு போன விடயம் தெரியவந்தது.

இது குறித்து கோப்பாய்ப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்களால் பொதுமக்கள் மத்தியில் பீதி நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கப் பிரதேசம் தோறும் விழிப்புக் குழு அமைக்கச் சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வர வேண்டும் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(ம-72)

# அச்சுவேலி கூ.சங்கப் பணியாளருக்கு உலர் உணவு பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து பெய்த மழையால் பாதிக்கப்பட்ட அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சங்கத்தில் பணிபுரியும் உறுப்பினர்கள், பணியாளர்கள் உட்பட 200 பேருக்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன

இந்தச் சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அரிசி 20 கிலோ கிராம், மா 10 கிலோகிராம், சீனி 3 கிலோ கிராம், பருப்புஒரு கிலோ கிராம், பால்மா ஒன்று, தேயிலை 200 கிராம் ஆகிய பொருள்களே வழங்கப்பட்டன.

(204)

## நாளை

மார்கழி 01 16.12.2010
வியாழக்கிழமை
திதி: : தசமி
பி.ப. 12.19 வரை
நட்சத்திரம் : ரேவதி
பி.ப. 12.22 வரை
சுபநேரம் : 07.52-09.22 வரை
இராகுகாலம் : 01.52-03.22 வரை

# ஊடகவியலாளருடன் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.15

குடாநாட்டு நிலைமை தொடர்பாக விளக்கம் அளிக்கும் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூட்டியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறும்.

(ஒ-ஐ)


# கண் பரிசோதனை செய்த மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், டிசெ.15

வலிகாமம் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கு நேற்று நடத்தப்பட்ட கண் வைத்திய முகாமில் வழங்கப்பட்ட மருந்துச் சிட்டையைத் தாம் வசிக்கும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்க வேண்டும் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இவ்வாறு ஒப்படைப்பதன் மூலமே இலவசமாக மூக்குக் கண்ணாடியைப் பெறமுடியும் என்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஒ-ஐ)

# மூத்த பத்திரிகையாளர் டேவிட் ராஜு காலமானார்



கொழும்பு, டிசெ.15

இலங்கையின் முதுநிலைத் தமிழ்ப் பத்திரிகையாளரும் வீரகேசரிப் பத்திரிகையின் முன்னாள் பதில் பிரதம ஆசிரியரும் பிற்காலத்தில் தினக்குரல் ஆலோசகரும் வணிகப் பிரிவு ஆசிரியராக இருந்தவருமான ஈ.வி.டேவிட் ராஜு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட டேவிட் ராஜு கொழும்பு, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். கடந்த சில வாரங்களாகவே சுகவீனமுற்றிருந்த டேவிட் ராஜு டேடன்ஸ் தனியார் மருத்துவமனையில் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டில் வீரகேசரிப் பத்திரிகையில் சேர்ந்து முதலில் கண்டியில் மலையக வதிவிட நிருபராகவும் பின்னர் கொழும்பில் ஆசிரியர் பகுதியிலும் பணிபுரிந்தார். அங்கு பலபடிநிலைகளில் உயர்ந்து சிரேஷ்ட பத்திரிகையாளராக விளங்கினார்.

செய்தி ஆசிரியர் மற்றும் பதில் பிரதம ஆசிரியர் பதவியில் இருந்த போது வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைத்து சவூதி அரேபியாவில் பல ஆண்டுகள் இருந்துவிட்டுப் பின் நாடு திரும்பினார். தினக்குரல் பத்திரிகையில் ஊடக ஆலோசகராகவும், வணிகப் பிரிவு ஆசிரியராகவும் பணியாற்றினார். ஊடகத்துறையினர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந்த அவருக்கு இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்தது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொடிடோன் BODYTONE

Protein Tablets

உடற்சோர்வையும், களைப்பையும் போக்கி சுறுசுறுப்பையும், புத்துணர்ச்சியையும் மேலதிக சக்தியையும் தரவல்ல தரமான பொடிடோன் வில்லைகள்

19 வயதிற்கு மேற்பட்ட இருபாலாருக்கும் ஒரு நாளைக்கு சாப்பாட்டிற்கு முன் ஒரு வில்லை வீதம் இரண்டு முறை உட்கொள்ளவும்

கார்கில்ஸ் புட்சிற்றி மற்றும் சூப்பர் மார்க்கெட், பிரபல பார்மஸிகளிலும் கிடைக்கும்

யாழ்ப்பாணத்தில் Wesco Pharmacy ஆஸ்பத்திரிவீதி

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

**K.S.P.International Pharmacy**

14,1st Floor,Gentral Bus Stand,Colombo 11.Telephone : 2449766


## கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்களுக்கான அறிவித்தல்

யாழ். குடாநாடு முழுவதும் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்களை தாங்கள் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான கேபிள் விநியோகங்களை எமது இலங்கை மின்சார சபையின் மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின்விநியோகத் தூண்களிலேயே தொலைக்காட்சிக் கேபிள்களைப் பொருத்தி விநியோகம் செய்து வருகிறீர்கள். இதனால் எமது மின்விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகளுக்கு இவை பெரிதும் இடையூறாக இருப்பதால் தங்களுடைய இத்தொலைக்காட்சிக் கேபிள்களை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அப்புறப்படுத்தி எமது பராமரிப்பு வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். தவறும் பட்சத்தில் அவற்றை அகற்றுவதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
14.12.2010

(டு/573523)

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்.


# ஜயோதா

அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 707 திகதி 13-12-2010

வெற்றி எண்கள்

01 18 34 37 D

ஜக்பொட் பரிசு ரூ. 17,059,630/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 17,059,630/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 425 | 1,000/= | 425,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 701 | 1,000/= | 701,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17082 | 60/= | 1,024,920/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8122 | 40/= | 324,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 201624 | 20/= | 4,032,480/= |
| | | மொத்தம் ரூ. 7,340,280/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

| | |
|---|---|
| அநுராதபுரம் | 600626855-4-44 |
| அம்பாந்தோட்டை | 600622306-7-17 |
| பதுளை | 600630030-0-00 |
| அம்பாறை | 600630655-9-39 |
| இரத்தினபுரி | 600629817-7-37 |
| யாழ்ப்பாணம் | 600623501-0-30 |
| கொழும்பு | 600624642-4-44 |
| குருநாகல் | 600620317-7-47 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,740,280/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 17,604,820/=

2010 டிசம்பர் 16 ஆம் திகதி வியாழக்கிழமை

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொலைபேசி 2335546/7


## அகதி முகாம் மக்களுக்கு நுளம்பு வலைகள்

தென்மராட்சி, டிசெ.15

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டன. அண்மையில் பெய்த தொடர் மழையையடுத்து நுளம்புகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஔ-207)

### பளை, இயக்கச்சிப் பகுதியில் காணி தேவை

மேற்படி பகுதியில் காணி விற்பனை செய்ய விரும்புபவர்கள் அல்லது காணித் தரகர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0777487555

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொய்லர் இறைச்சி சுத்தம் செய்யப்பட்டது. 1 kg 430/= வியாபாரிகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். காலை 6 மணி முதல் மாலை 8 மணிவரை வியாபாரம் இடம் பெறும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முடிசேர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 021-2226944.

### கோழிக் குஞ்சு விநியோகம்

BAIRAHA NO.1

புறொய்லர் குஞ்சுகள் 15.12.2010 விநியோகிக் கப்படும்.

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

ராஜீவ்,
நாவலர் வீதி, T.P.:- 0776090926,
ஆனைக்கோட்டை. 021-2222867

### விற்பனைக்கு

பாண்போறணை, மேசைகள் மற்றும் பேக்கரி தளபாடங்கள் விற்பனைக் குண்டு. 30 அடி கொட்டகை ஒன்றும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
T.P.:021-4906961, 0778697283

### மாணவிக்கு தங்குமிட வசதி தேவை

2011 A/L Bio Science கற்கும் மாணவிக்கு New Science Hall தனியார் கல்வி நிலையத்துக்கு அருகாமையிலோ அல்லது யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உடனடியாக உணவுடன் கூடிய பாதுகாப்பான தங்குமிடம் தேவை.

T.P.: 077 6576635, 021 3734511

### பிரத்தியேக கணித வகுப்பு

தனியாக அல்லது குழுவாக
Gr. 09-10, O/L, A/L
K.S.காந்தன்
தொடர்பு: 0770878734

### பிரத்தியேக கணித விஞ்ஞான வகுப்பு

தனியாக அல்லது குழுவாக Gr. 6 - 11 வரை வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். யாழ். நகரை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு:- 0779637763

### தேவை

பிரான்ஸ் பிரஜையான ஓய்வூதியம் பெறும் யாழ். 58 வயதுள்ள இந்து சமய, விவாகரத்துப் பெற்ற பொறுப்புக்களற்றவருக்கு வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றோம். அனர்த்தத்தில் உறவுகளை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளவும்.

T.P.0773924973

## பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பம் ஏற்பது இடைநிறுத்தம்

தென்மராட்சி,டிசெ.15

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவு சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்பது நேற்றுமுன்தினம் தொடக்கம் ஒரு வாரத்துக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. சான்றிதழ்கள் கணினிமயப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாலேயே இவை இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஔ-207)

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் வ-து, கைதடி.

### பயிற்சி கிளைமுகாமையாளர்

மேற்படி பதவிக்கு சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிக்கும் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை: க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/எண்கணிதம், தமிழ் என்பன உள்ளடக்கி 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் காலத்தில் படி வழங்கப்படும். பயிற்சி நிறைவில் கடமைக்கு அமர்த்தும்போது சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தவேண்டும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 30.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு, ப.நோ.கூ.சங்கம், கைதடி என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

பதில் பொது முகாமையாளர்,
தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி.

(சி-573517)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 02.03.1922 உதிர்வு: 15.11.2010

### சின்னப்பு இளையதம்பி

அப்பா என்ற சொல்லுக்கு இலக்கணமாய்
அன்புடன் அரவணைத்து எம் வாழ்வில்
செந்தத்தை காட்டி மகிழ்வுடன் சென்றனையோ?
உங்கள் நினைவில் எந்நாளும் நாங்கள்

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (15.12.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
### காங்கேசன்துறை (மல்லாகம்)

சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக் கடைத்தொகுதிகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2011

உதயன் பத்திரிகையின் 20.11.2010 ஆம் திகதிய கேள்வி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விவரங்களுக்கு அமைய மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை, கும்பலை மாட்டிறைச்சிக் கடை தவிர்ந்த ஏனைய சந்தைகள், இறைச்சிக் கடை, கடைத்தொகுதிகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல் கோரப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :
21.12.2010 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :
22.12.2010 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 22.12.2010 புதன்கிழமை பி.ப.2.00 மணி

திருமதி.யோகேஸ்வரி காசிலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
14.12.2010

(சி/573520)

## பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், பளை அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

எமது சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேருவோர் ஒரு பங்குப் பணத்தின் பெறுமதி ரூபா 100.00 இனைச் செலுத்தியிருத்தல் வேண்டும். செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்திருப்பின் கிளைப் பொதுச் சபை வாக்காளராகக் கணிப்பிட முடியும். குறைந்த பங்கொன்றின் பெறுமதி ரூபா 100.00 செலுத்தியவர்களை மையமாகக் கொண்டே எதிர்காலத்தில் கிளைப் பொதுச் சபைப் பேராளர்களின் தொகையைக் கிளைகள் ரீதியாக நிர்ணயம் செய்ய முடியும், எனவே ஏற்கனவே பங்குப் பணம் ரூபா 100.00 இற்குக் குறைவாக செலுத்தியிருக்கும் அங்கத்தவர்கள் சங்கத்தின் கிளைகளிலோ அல்லது சங்கத் தலைமை அலுவலகத்திலோ தொடர்புகொண்டு அங்கத்துவப் பங்குப் பணத்திற்குரிய மீதிப் பணத்தினை 31.12.2010 ஆம் திகதிக்கு முன் செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

த.முகுந்தன்
தலைவர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.

(சி-572539)

பொ.வதனி
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்தூர கதிர்வீச்சுச் சிகிச்சை பிரிவு ரூ. 4 கோடி செலவில் தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம்,டிசெ.15

நான்கு கோடி ரூபா செலவிலான குறுந்தூர கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு ஒன்று தெல்லிப்பழை கதிர் வீச்சு சிகிச்சைப் பிரிவில் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

சர்வதேச அணுசக்தி அதிகாரசபை, இலங்கை அரசு ஆகியவற்றின் உதவியுடன் இந்தப் பிரிவு அமைக்கப்படவுள்ளது என்று யாழ்.போதனாவைத்தியசாலையின் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் டாக்டர் என்.ஜெயக்குமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

சர்வதேச அணுசக்தி அதிகார சபை (ஐ.எ.ஈ.எ) யினதும் இலங்கை அரசினதும் நிதிப் பங்களிப்புடன் 2012 ஆம், 13 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்ட அடிப்படையில் இந்தப் பிரிவு புதிதாக அமைக்கப்படவுள்ளது.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ ரீதியான புற்றுநோய்ச் சிகிச்சைக்காக தனித்தனியாக ஆண்கள், பெண்களுக்கு விடுதிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தெல்லிப்பழை கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவில் நெடுந்தூர கதிர்வீச்சு சிகிச்சை கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்றது.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதன் பின்னர் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள சிகிச்சைப் பிரிவுக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர் - என்றார். (ம-14)

# பிரதான வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெருக்கடி

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மாவட்டத்தின் பிரதான வீதிகளில் வீதியோரமாக கனரக வாகனங்களை நிறுத்தி வைப்பதனால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.அரசடி வீதியும், கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் இடத்துக்கு அண்மையாக உள்ள கராஜ்ஜின் முன்னால் கனரக வாகனங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாலும் வீதியின் மறுகரையில் பெரிய குழி காணப்படுவதினாலும் அந்த வீதியினை மக்கள் பயன்படுத்துவதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேபோன்று யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கடைகளின் முன்பாக கனரக வாகனங் களை நிறுத்தி அதிலிருந்து பொருள்களை இறக்குவதனால் அந்தப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

விபத்துக்கள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்களும் இதனால் ஏற்படுகின்றன.

எனவே இந்த விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-15)

# பெண்களுடன் சேஷ்டை புரிந்த இளைஞர்கள் நையப்புடைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

மினிபஸ்ஸில் பெண்களுடன் சேஷ்டை புரிந்த தென்னிலங்கைச் சேர்ந்த எட்டு இளைஞர்களை அதில் பயணம் செய்தவர்கள் நையப்புடைத்தார்கள். இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளான் நோக்கி மாலை 5.10 மணியளவில் புறப்பட்ட மினிபஸ் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.




குறிந்த மினிபஸ்ஸில் எட்டு இளைஞர்களும் மதுபோதையில் இருந்தனர் என்று பயணிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பெண்களுடன் சேஷ்டை புரிந்தமையால் பஸ்ஸில் பயணம் செய்தோர் இதனை அவதானித்து இளைஞர்களைத் நையப்புடைத்த போது, தாம் இராணுவத்தினர் என அடையாளம் காட்ட முனைந்தாகக் கூறப்பட்டது.

நடத்துநரிடம் அவர்களை இறக்கி விடும்படி கூறியும் அவரும் மது போதையில் இருந்தபடியால் அவர்களை இறக்கி விடவில்லை என்றும் இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு பயணம் செய்யவேண்டி இருந்தது எனவும் பயணிகள் தெரிவித்தனர். உரிய தரப்பினர் இவ்வாறான நடத்துநர்கள் விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

# கைலாசபதி நினைவரங்கு


யாழ்ப்பாணம்,டிசெ.15

தேசியகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ''கைலாசபதி நினைவரங்கு'' யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் அமைந்துள்ள. புதிய உயர்கலைக் கல்லூரியில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இலங்கை வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் எஸ்.பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நினைவுப் பேருரைகள் இடம்பெறும்.

''கல்வி கலை பண்பாட்டில் சமூக நோக்கு'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸும் ''கலை இலக்கியமும் சமூக ஒடுக்கு முறையும் '' எனும் தலைப்பில் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலமும் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவர். (ம-319)

## புதிய உதயம்...



கையளிப்பு:-கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தால் வெளியிடப்பட்ட தி.நந்தினியின் ''கண்ணீர் முத்துக்கள்'' கவிதை நூல் வெளியீட்டு விழாவின் போது நூலின் முதற்பிரதியை கலாநிதி செ.திருநாவுக்கரசு, சமூக சேவகர் எம்.சீ.எம் அமீனிடம் கையளிக்கிறார். நடுவில் நூலாசிரியர், கலாசாலை அதிபர், முத்தமிழ் மன்றக் காப்பாளர் ஆகியோர் நிற்கின்றனர். (14)

## பவள விழாவுக்கு குழு நியமனம்

ஒய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தனது 75 ஆவது அகவையில் கால்பதிப்பதை முன்னிட்டு அவரது மாணவர்களால் பவளவிழா நிகழ்வொன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா தலைமையில் பத்துப்பேர் அடங்கிய பவள விழாவுக்குழு தெரிவு செய்யப் பட்டுள்ளது.

ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்பு வோர் 021 222 3610 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விழாதொடர்பான கருத் துக்களை பரிமாற முடியும் எனப் பேராசிரியர் கே. தேவராஜா தெரிவித்துள்ளார். (ம-319)

# இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் நாம் அக்கறை கொள்ளல் வேண்டும்

### யாழ்.மேலதிக அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.15

விஞ்ஞானமும் உலகமும் நமது இரு கண்கள் போன்றன. இதனால் நாம் இயற்கை வளங்களைப் பாதுகாத்தலில் அக்கறை கொள்ள வேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் இடம்பெற்ற 2010 இற்கான விஞ்ஞான விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மரங்களை அழிக்காமல் பாதுகாத்தல், நீர் வளத்தைப் பேணுதல் போன்றன நமது வாழ்வில் பேணப்பட வேண்டியவை. இயற்கை அழிவுக்கு நாமே காரணமாகாது. விஞ்ஞான உலகுக்கு ஏற்றாற் போல் நமது வாழ்வை மேம்படுத்த வேண்டும்.- என்றார்.

யாழ். பல்கலைக்கழக விவசாய இரசாயனவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்டத்தில் 1200 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியை வருடாந்தம் பெறுகின்றபோதும் தண்ணீர்ப் பிரச்சினை பெருமளவு பிரதேசங்களில் காணப்படுகின்றது.

மழை நீரை சேகரித்து வைப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப் புணர்வு கிடையாது. தற்போது இடம்பெற்றுவரும் மோட்டார் பாவனை, கடற்கரை அண்டிய பிரதேசங்களில் மண் அகழ்தல், நைதரசன் பசளைப் பாவனை அதிகரிப்பு ஆகியவற் றால் புற்றுநோய் போன்ற அபாயகரமான நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இயற்கைதந்த வளத்தை செம்மையாகப் பயன்படுத்தி நாட்டைப் பாலைவனம் ஆக்காமல் சிறந்த சூழலை உருவாக்குவோம். -என்றார்.

வளவாளர் வட்ட விதானகே கருத்துத் தெரிவிக்கையில்:

வருடாந்தம் உலகில் 2700 உயிரினங்கள் அழிந்து போகின்றன. இவற்றுக்கு மனிதன்தான் காரணம்.

1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொப்புளிப்பான், மலேரியா, பெரியம்மை போன்ற உயிர்க் கொல்லி நோய்கள் அதிகம் இருந்தன. இதனால் மனிதனின் ஆயுள்காலம் குறைந்தது.

எமது நாடு 100 வகையான பாம்பு இனங்களைக் கொண்ட பாம்பு வளநாடாகும். இவற்றில் ஆறுவகையான பாம்பினங்களே நஞ்சுத்தன்மை வாய்ந்தவை.

எனவே இவ்வாறான அரிய உயிரினங்களைப் பாதுகாப்போம் - என்றார். (201-313)

## உறவு மேம்படல்....



காலத்தின் கோலம்: ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் ''நம்ம ஊரில் நத்தார்'' என்ற தொனிப்பொருளிலான நத்தார் கலை நிகழ்வுகள் அண்மையில் ஓட்டுமடத்திலுள்ள மெதடிஸ்த தேவாலயத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் கரோல் இசைப்பாடல்கள் இசைக்கின்றனர். சிங்களக் கலைஞர்கள் ... இசைக் கருவி இசைக்கின்றனர். (14)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.15

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ''பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருதல்'' எனும் மகுட வாசகத்திற்கு அமைவாக, சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ், யு.என்.ஏச்.சி.ஆர்.நிறுவன பிரதிநிதிகள், டெனிஸ் அகதிகள் பேரவையின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாசாலைகள் ரீதியாக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் படவுள்ளன.

அத்துடன் உரிமை ஆர்வலர்களின் 'மனிதம் காப்போம்'' எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. (201-313-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரைச் சுட்டுக்கொன்ற கொள்ளையர்கள் அனைவரும் சாவு

குருநாகல், வரக்காபொல, அங்குருவெல்ல சந்தியிலுள்ள அடகுக் கடையொன்றில் நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடியவர்கள் அறுவரை விரட்டிச்சென்ற பொலிஸாரில் இருவர் கொள்ளையர்களின் துப்பாக்கி பிரயோகத்தில் மரணமானார்கள்.

அதனைத் தொடர்ந்து கொள்ளையர்கள் மறைந்திருந்த அம்பேபுஸ்ஸ, கொஸ்கலே காட்டைச் சுற்றிவளைத்த பொலிசாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொள்ளையர்கள் ஆறுபேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கம்பளை குமாரமுனசிங்க, தித்தெனிய ரஞ்சித்குமார, பிட்டகந்த சந்தனகுமார ஜயவர்த்தன மற்றும் சுமணரத்ன , கணேமுல்ல அநுராத, அல்விஸ், எத்திமலை கருணாசிரி ஆகிய ஆறு கொள்ளையர்களுமே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் ஐவர் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்கள் எனவும் ஒருவர் பொலிஸ் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டவர் எனவும் தெரியவருகிறது.

இக் கொள்ளைக் கும்பல் நாட்டின் பல்வேறு பாகங்களில் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மீரிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாயின் மடியில்:
12.05.1922

இறைவன் அடியில்:
15.11.2010

**திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா**

*கடந்த 15.11.2010 அன்று இறைபதமடைந்த எம் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.12.2010) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

கைதடி மேற்கு, கைதடி. குடும்பத்தினர்

## அள்ளுண்டுவரும் மீன்களை வேட்டையாடும் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.15

தற்போது பெய்துவரும் மழையை அடுத்து குடத்தனைப் பகுதியில் காணப்படும் பாலங்கள் ஊடாக பாய்ந்து வரும் நீருடன் மீன்கள் அள்ளுண்டு வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே இவ்வாறு அள்ளுண்டுவரும் மீன்களை வலை வீசிப் பிடிப்பதிலும் 'மண்டா' என்கின்ற கூரிய ஆயுதத்தால் பாலங்களின்மேல் நின்று மீன்களை இலக்கு வைத்து பிடிப்பதிலும் அந்தப் பகுதி மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

பாலங்களூடாக பாய்ந்து வரும் நீருடன் மணலை, விரால், இயல் விலாங்கு போன்ற மீன் இனங்கள் வருவதாக கூறப்படுகிறது. (201-78)

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

வண்ணை, டிசெ.15

யாழ்.கடலோட்டு மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் 2011ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறிகளில் புதியவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சியில் இணைய விரும்புவோர் நான்கு பயிற்சி நெறிகளுக்குமான விண்ணப்பங்களைத் தமது சுய விவரக்கோவைகளுடன் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்க வேண்டும். அல்லது இல.372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கல்லூரி அலுவலகத்தில் நேரில் சென்று பதிவுகளை மேற்கொள்ளலாம் என கல்லூரி யின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பயிற்சி நெறிகளாக கடலக இயந்திர தொழில்நுட்பம், கடல் வரை படம் வாசித்தல், தொடர்பாடல், சற்றலைட் இயக்குதல், வெளியிணைப்பு இயந்திரம்திருத்துதல், பராமரித்தல், கடலக டெக் அலுவலகர் டிப்ளோமா ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி பயிற்சி நெறிகள் 3 மாதகால பயிற்சி நெறிகளாக இடம்பெறும்.

## நன்றி கூறுகின்றேன்

*11.12.2010 சனிக்கிழமை என்னால் தவறவிடப்பட்ட தேசிய அ.அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள், ஒரு தொகைப்பணம் என்பவற்றை கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த வளர்மதி வீதி, கைதடி மத்தி, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த க.தயாளன் அவரது மைத்துனர் க.சற்குணராசா ஆகியோருக்கு எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.*

**கு.தியாகராசா, 28, இராஜ வீதி, நல்லூர்.** (107376)

## 57 ஆவது பிறந்த தினமும் 16 ஆம் மாத நினைவலையும்



பிறப்பு:
1953.12.15

இறப்பு:
2009.08.30

அமரர்
**அலெக்சாண்டர் செபஸ்ரியாம்பிள்ளை**
*(சின்னவன்)*

வித்தாரக் கதைகள் சொல்லும்
முத்தாரக் கலை ஞனே உன்
தித்திக்கும் குரலைக் கேட்டு
பத்தோடு ஆறு திங்கள்
வேகு தே எமது நெஞ்சம்
நோகுதே எங்கள் உள்ளம்
சோருதே அழுது விழிகளில்
பாயுதே கண்ணீர் வெள்ளம்
இப்புவி வாழ்நாள் முழுவதும்
அப்பா! உமை மறக்கமாட்டோம்.

தங்கள் பிரிவால் துன்புறும்:
மனைவி:
செ.இராஜேஸ்வரி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*46/46, அன்ரனிஸ் வீதி,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*
*021 568 2260*

# நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

15 ஆம் ஆண்டு

மண்ணில்:
29.09.1938

விண்ணில்:
28.08.1995



அமரர்
**கந்தசாமி சிவமயம்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

முதலாம் ஆண்டு

மண்ணில்:
13.08.1945

விண்ணில்:
27.11.2009



திருமதி
**சிவமயம் இலட்சுமிப்பிள்ளை**
திதி: 15.12.2010

ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது உம் துயரம் எம் நெஞ்சைவிட்டு
எம் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல விசவத்தனை வேலவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'குமரகிரி', பண்ணாகம், சுழிபுரம்.
பிரிவால் துயருறும்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் கட்டட வசதிகள் இல்லாததால் மானிய உர விநியோகம் நெருக்கடி நிலையில்

முல்லைத்தீவு, டிசெ.15

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் கட்டட வசதிகள் இல்லாததால் உர விநியோகத்தில் சிரமங்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கான மானிய உரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றை இறக்கி வைத்து விநியோகம் செய்வதற்கான இடவசதிதான் இல்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர்.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் அதற்கு அருகிலுள்ள சிறிய கட்டடமொன்றில் எமது அலுவலகம் இயங்கி வருகிறது. இதில் போதிய இடவசதிகள் இல்லை. எமது நிலையத்திற்குரிய உரக் கட்டடத்திலும் இராணுவத்தினர் உள்ளனர். இதனால் வந்து சேரும் உரங்களைச் சேமித்து வைக்க முடியாத நிலையில் உள்ளோம். ஆகவே இந்த உரங்களைத் திருப்பியனுப்ப வேண்டிய நிலையில் உள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னைய காலங்களில் முத்தையன் கட்டு, கற்சிலை மடு, தண்டுவான் ஆகிய இடங்களில் உரக்களஞ்சியங்கள் இருந்தன. ஆனால் யுத்தத்தின் போது அவை அழிந்து விட்டன. தற்போது பெய்து வரும் மழையால் வாகனங்களிலிருந்து உரங்களை இறக்குவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. மக்கள் சேற்றில் சறுக்கி வீழ்ந்து நனைந்த நிலையில் உரங்களைக் கொண்டு செல்கின்றனர். வாகனங்கள் பயணிக்கும் வீதியோரத்தில் வைத்து எமது பணிகளை மேற்கொள்வது சிரமமாக உள்ளது. தனியார் வீடுகளில் உரங்களைச் சேமித்து வைக்கலாமென்றால் பாதுகாப்பான வீடுகளும் கிடைக்கவில்லை. இதனால் என்ன செய்வதென்று தெரியாது விழிக்கின்றோம். இதைவிட எமது கமநல சேவை நிலையத்துக்குரிய உழவு இயந்திரங்கள், விற்பனை உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வெயிலிலும் மழையிலும் கிடப்பதால் பழுதாகும் நிலையில் உள்ளன.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு உயர் அதிகாரிகள் ஆவன செய்யவேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க-500)




## சேவா லங்கா நிறுவனத்தால் உழவு இயந்திரங்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, டிசெ.15

ஒட்டுசுட்டானில் இயங்கி வரும் 'சேவாலங்கா' நிறுவனத்தினர் இரண்டுசில்லு உழவு இயந்திரங்களை வழங்கியுள்ளனர். புனர்வாழ்வு மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் ஒலுமடு, அம்பகாமம், தண்டுவான், கற்சிலைமடு பிரதேசங்களில் மீள்குடியமர்ந்துள்ள விவசாயிகளுக்கு உதவும் முகமாக விவசாய அமைப்புக்களிடம் இந்த உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் சேவாலங்கா பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், பிரதேச இராணுவ அதிகாரி ஆகியோர் விவசாய அமைப்புக்களிடம் இவற்றைக் கையளித்தனர். (க-500)

## பொருத்தமான பதக்கம்....



காத்திருக்கும் கணங்கள்: கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா மாணவர் ஒருவருக்குப் பதக்கம் அணிவிக்கின்றார். (405)

# வடிகால் வசதிகள் அமையாததால் கிளிநொச்சி நகரில் வெள்ளநீர்

கிளிநொச்சி, டிசெ.15

கிளிநொச்சி நகரப் பகுதியில் முறையான வடிகால் அமைப்புக்கள் இல்லாததால் அந்தப் பகுதி முழுவதும் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்கள் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அண்மைய நாள்களில் பெய்த மழையால் கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியின் இருமருங்கும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதன் காரணமாக இந்த வீதியால் செல்லும் வாகனங்கள் சேற்று நீரை வாரியிறைக்கின்றன. அந்த வேளையில் வீதியில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர், பொதுமக்கள் அனைவரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். இவர்களின் உடைகள் சேற்று நீரால் அழுக்கடைவதால் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

அத்துடன் நகரத்தின் ஏனைய பகுதிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்குச் சிரமங்கள் ஏற்படுவதோடு தொற்று நோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது. உரியவர்கள் விரைந்து வடிகால் வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளாகும். (க-405)

# வவுனியாவில் எய்ட்ஸ் நோயாளிகள் இல்லை எச்.ஐ.வி. தொற்றுள்ளோர் மட்டுமே உள்ளனர்

முல்லைத்தீவு, டிசெ.15

வவுனியாவில் இந்த வருடம் எய்ட்ஸ் நோயாளிகள் இனம் காணப்படவில்லையெனவும் ஆனால் எச்.ஐ.வி. தொற்றுள்ளோர் காணப்பட்டுள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் சர்வதேச எய்ட்ஸ் தின நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோது இவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். தென்கிழக்காசியாவிலே தற்போது எய்ட்ஸ் நோய் அதிகரித்துக் காணப்படுகிறது. இலங்கையிலும் இதன் தாக்கம் உள்ளது. எமது பகுதியிலும் இந்த நோய் பரவுவதற்கான ஏதுநிலை காணப்படுகின்றது. எனவே நாம் இதுதொடர்பான விழிப்புணர்வுகளை மக்களிடத்தே ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். நோய் வந்தபின்னர் சிகிச்சை வழங்குவதை விட வருமுன்னர் தடுப்பது சிறந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து எய்ட்ஸ் விழிப்புணர்வு நாடகம், பேச்சு, குழுநிகழ்வுகள் என்பன நடைபெற்றன. இறுதியில் எய்ட்ஸ் நோயால்இறந்தவர்களை நினைந்து மௌனப்பிரார்த்தனையும், மெழுகுவர்த்திகளை ஏந்தி ஆத்ம சாந்தி நிகழ்வும் இடம் பெற்றன.

(க-501)

# கொக்காகோலா விற்பனை நிலையம்

முல்லைத்தீவு, டிசெ.15

புதுக்குடியிருப்பு கெருடமடுக் கிராமத்தில் கொக்காகோலா குளிர்பான விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த விற்பனை நிலையத்தை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் திறந்து வைத்தார்.

இதன் முதலாவது கிளை கற்சிலைமடுவில் திறந்து வைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகின்றது. (க-500)

# கற்சிலைமடு, முத்துஐயன்கட்டுப் பகுதிகள் இன்னமும் மின்சாரம் இல்லாத நிலையில்

முல்லைத்தீவு, டிசெ.15

கற்சிலைமடு, முத்துஐயன் கட்டுப் பகுதிகளுக்கு இன்னமும் மின்சார வசதிகள் வழங்கப்படாமையால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒட்டுசுட்டான் வரைக்கும் மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய இடங்களுக்கும் மின்சாரம் படிப்படியாக வழங்கப்படுமென ஒட்டுசுட்டானுக்கு வருகை தந்த அமைச்சர்கள் குழுவினரால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித ஆரம்ப வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் மின்சாரம் விரைவில் வரும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த இந்தப் பிரதேச மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மேலும் பாடசாலைகள், சுகாதார நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், இயந்திரங்கள் மூலம் தொழில் புரிவோர் நிறைந்துள்ள இந்தப் பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் பெரும் பாதிப்புக்கள் தோன்றியுள்ளன.

ஆகவே இந்தப்பிரதேச மக்களின் நன்மைகருதி விரைவில் மின்வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-500)

# முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகளுக்கு பயன் தரும் வழிகாட்டல் பயிற்சி நெறி

முல்லைத்தீவு, டிசெ.15

முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகளுக்கான வழிகாட்டல் பயிற்சியொன்று நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் மனிதவள அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சியானது கடந்த 10ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில 40இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகள் மனிதவள அமைப்பின் வேண்டுகோளை ஏற்று மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.ஏ.மோகன்ராஸ், துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் ஜெயகாந்தன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். பொது உளச்சார்பு, பொது விடயங்கள் தொடர்பான சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதால் பட்டதாரிகள் பெரும் பயன்பெற்றனர். ''வடமாகாண பட்டதாரிகளை அரசசேவையில் ஆள்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைப் பரீட்சை 2010'' எனும் கருப்பொருளில் இந்தப் பயிற்சிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பட்டதாரிகள் உட்பட அனைவருக்குமான பொது உளச்சார்பு, பொதுவிடயங்கள் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை5மணிவரைஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இடம்பெறுமென முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகள் மனிதவள அமைப் பினர் தெரிவித்துள்ளனர்.

(க)

# மீள்குடியமர்ந்த முல்லை. மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பெரும் சவால்கள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

விவசாயம்

வன்னி மாவட்டத்தில் ஏறத்தாழ 400இற்கும் மேற்பட்ட சிறு குளங்கள் இருக்கின்றன. இவைகளில் காற்பங்கு குளங்கள் திருத்தப்படவில்லை. முறிகுளங்களாகவும் புனரமைக்கப்படாமல் தூர்ந்த நிலையிலும் உள்ளன. பெரிய நீர்ப்பாசனக் குளங்களுக்குச் செல்லுகின்ற வாய்க்கால்கள் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. விவசாயக் காணிகள் கைவிடப்படும் நிலையில் காணப்படுகின்றன. குடியேற்றத்திட்டங்களுக்கான நீர்ப்பம்பி போன்ற இன்னோரன்ன உதவிகள் வழங்கப்படாமையால் பொன் விளையும் பூமி காடாகவும் தரிசு நிலங்களாகவும் மாறியுள்ளது.

**தொழில், வேலைவாய்ப்பு**

விவசாயத்தையும் மீன்பிடித் தொழிலையும் ஜீவாதாரமாகக் கொண்ட மீள்குடியமர்ந்த மக்கள் அவற்றிற்கான உபகரணங்கள் எதுவும் இன்றி உள்ளனர். கலை கலாசார விழுமியங்களைக் கட்டிக் காக்க ஏதுவான நிலை இல்லை. படித்த இளைஞர், யுவதிகள் உயர் கல்வியைப் பெற வசதிகள் இல்லை யுத்த சூழ்நிலையால் குடும்பப்பாரத்தை சுமப்பவர்கள், இளம்வயதிலே விதவையாக்கப்பட்டோர், தாய், தந்தை அற்றோர், அங்கவீனர்கள் என பலவகைப்பட்ட மக்கள் தமக்கேற்ற உதவிகள் எதுவுமின்றி வேலையில்லாது முடங்கிக் கிடக்கின்றனர். இப்படியான நிலையில் தற்போது பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதால் மக்கள் பெரிதும் துன்பமடைகின்றனர். தமிழ் மக்களது துன்ப துயரங்கள் மீண்டும் மீண்டும் தொடர்கதையாகவே தொடர்கின்றதே தவிர எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களது நிரந்தரத் தீர்வைக்கூட தட்டிக்கழிக்கும் அரசானது தமிழ் மக்களது மனங்களில் இடம்பிடிக்குமா?

தற்போது தொடரும் அடைமழையால் வீடு வாசல்களின்றி அல்லல்படும் மக்களுக்கு இதுவரையிலும் அரசானது எதுவும் செய்யவில்லை. வெள்ளம் காரணமாகப் பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்கின்ற முல்லை மக்களைக் கூட அரசாங்கம் கவனிப்பதாக இல்லை. துன்பமடைந்த மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி அவர்களின் நல்வாழ்வுக்கு உதவ அரசு முன்வர வேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் வேண்டுகோளாகும்.

சிலையபூர்தனம்

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தினர் அவுஸ்திரேலியாவின் ''வளர்ப்புப் பெற்றோர் திட்டத்தின்'' மூலம் போர்க் காலச் சூழலில் தமது தந்தையை அல்லது உழைப்பாளியை இழந்த குடும்ப 112 பிள்ளைகளுக்கு உதவி செய்து வருகிறார்கள்.

இலங்கை மாணவர் கல்வி நிதிய ஐந்து பேர் கொண்ட குழுவினர் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இவ்வுதவி பெறும் பிள்ளைகளுடன் கலந்துரையாடவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளைச் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் செய்துவருகின்றது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி மேலதிக அரசாங்க அதிபர், கல்விப்பணிப்பாளர் மற்றும் சிறுவர்களின் மேம்பாடு சம்பந்தமான அலுவலர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 785
சீட்டிழுப்பு திகதி 13.12.2010

| எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| W | 24 | 57 | 59 | 68 |

| | சாதகங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 10,462,027.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 15 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 325 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 650 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 16058 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 9151 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 227706 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 32991 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,845,780.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ருபா. 10,984,917.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk



யாழ்-வண்ணை

## ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

(17.12.2010 - வெள்ளிக்கிழமை)

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| அதிகாலை | 04.00 மணி | மூலவர் அபிசேகம் |
| | 06.00 மணி | சுவர்க்கவாயில் தரிசனம் |
| மு.ப. | 10.45 மணி | ஆதிவேங்கடேசர் உற்சவம் |
| மாலை | 06.00 மணி | சுவர்க்கவாயில் ஏகாதசி (இரவு) உற்சவம் |

### விசேட நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| இரவு: 7.00 மணி | மங்கல வாத்தியம் - கு.பாலமுரளி குழுவினர் |
| இரவு: 8.00-9.00 மணி | பஜனை -தேவஸ்தான பஜனைக் குழுவினர் |
| இரவு: 09.00-10.00 மணி | ஹரி நாம சங்கீர்த்தனம் ஐரோப்பிய நாட்டில் இருந்து வருகைதந்துள்ள ஸ்ரீ கிருஸ்ணபக்திக் கழக உறுப்பினர் திரு.வாசுதேவதத்ததாஸ் (பக்தியோக பிரம்மச்சாரிய சாஸ்திரம் பயின்றவர்) |
| இரவு: 10.00-11.00 மணி | சொற்பொழிவு - கு.பாலசண்முகன் (B.A.) |
| இரவு: 11.00-11.30 மணி | ஆசியுரை - தேவஸ்தான பிரதம குருக்கள் |
| இரவு: 11.30-12.30 மணி | சொற்பொழிவு - வைகுண்ட ஏகாதசி தாமோதரதாஸ் (இலங்கை ஸ்ரீ கிருஷ்ணபக்திக் கழக உறுப்பினர்) |
| இரவு: 12.30-2.00 மணி | வில்லுப்பாட்டு - சூடிக்கொடுத்த சுடர்க்கொடி யாழ்.நாச்சிமார்கோயிலடி, ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் |
| இரவு 2.00- 3.00 மணி | பஜனை திருமலை ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் பஜனைக் குழுவினர் |
| 18.12.2010 சனிக்கிழமை | துவாதசி உற்சவம் |
| அதிகாலை 4.00 மணி | மூலவர் அபிஷேகம் |
| காலை 05.45 மணி | துவாதசி உற்சவம் |

ஆதீன மஹாசபை.
யாழ்ப்பாணம். தொ.பே.இல.: 021 222 2476
(சி/573516)

BROWNS GROUP
BG
ESTD 1875
Browns

வட பிராந்திய மத்திய நிலையத்தை
2010 டிசெம்பர் 16ம் திகதி
46, மணிக்கூட்டு கோபுரம் வீதி, யாழ்ப்பாணம்
எனும் இடத்தில் ஆரம்பிக்கின்றது.

SHARP MASSEY FERGUSON EXIDE TAFE FG WILSON makita SIFANG OLYMPUS YANMAR marine

Browns

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம் இசைக்கும்போது என்ன செய்வது என்று தெரியாத இன்றைய தலைவர்கள்

## சமுர்த்தி சம்மேளனக் கூட்டத்தில் ஜனாதிபதி காட்டம்

கொழும்பு, டிசெ. 15

தேசியகீதம் இசைக்கப்படும் போது எவ்வாறு நடந்து கொள்வதென இன்றைய தலைவர்களுக்குத் தெரியாது. எமது தலைவர்கள் தேசிய கீதத்தை இவ்வாறு அவமதித்தால் நாட்டின் நிலை எப்படி இருக்கும்? நாம் தேசியக் கொடியை கௌரவிக்கவேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற சமுர்த்தி சம்மேளனத்தில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் முழுமையாகச் சீரழிந்து காணப்பட்டன. இன்று நாம் அப்பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

புலிப் பயங்கரவாதிகள் நாசப்படுத்திய கிளிநொச்சி வைத்தியசாலையை நாம் மீண்டும் நிர்மாணித்து இயங்கச் செய்தோம். கடந்த 30 வருடங்களாகப் புலிகளால் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை நாம் விடுவித்தோம்.

நேர்மையாக உங்களது கடமைகளைச் செய்யுங்கள். இன்று சிலருக்குத் தமது கடமை என்ன என்றே ஞாபகமில்லை. பேச்சு நடத்தத் தயாரில்லாத தொழிற் சங்கங்கள் இந்தநாட்டில் இருக்கின்றன. நான் உங்களையிட்டுப் பெருமையடைகின்றேன்.

சில தொழிற்சங்கங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று இந்த அரசுக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கவேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கின்றன. இதுதான் அவர்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள். இதற்காக அவர்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு தொகைப் பணம் கிடைக்கிறது.

எமது நாட்டில் மனித உரிமை மீறல்கள் இல்லை எனக் கூறுவதற்கும், சுதந்திரம் இல்லை எனக் கூறுவதற்கும் கூட பணம் கிடைக்கிறது. அவர்கள் நாட்டைக் காட்டிக்கொடுத்து வாழ்க்கை நடத்துபவர்கள். நாம் எங்கு சென்றாலும் கௌரவிக்கப் படவேண்டிய சமூகமொன்று இருக்கின்றது.

2012 ஆம் ஆண்டு நம் நாட்டிலுள்ள சகல கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்குவோம். சகல வீதிகளுக்கும் கொங்கிறீட் போடப்படும்.

-இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# இந்திய மீனவர்களைத் தாக்கவில்லை இலங்கை கடற்படையினர் தெரிவிப்பு

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என வெளியான செய்திகளில் உண்மையில்லை - என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்கினர் என அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டன எனவும்,உண்மையில் அவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறவில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தவில்லை என கடற்படைப் பேச்சாளர் அதுல சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கச்சதீவுப் பிரதேசத்தில் இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என முறைப்பாடு செய்துள்ளனர்.

50 மீன்பிடிப் படகுகள் மீது கடற்படையினர் தாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்திய மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் மற்றும் மீனவர்களின் கையடக்கத் தொலைபேசிகளையும் இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

# ஓய்வுபெற்ற அரச ஊழியர் மீளச் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, டிசெ.15

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களை மீளச் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கான கால எல்லை எதிர்வரும் 31 ஆம்திகதிவரை மட்டுப்படுத்தியுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது.

இச்சலுகை ஏற்கனவே ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. தற்போது டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சேமித்த விடுமுறைக்காக அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வுக்குப் பின்னர் கடமையாற்றுவதற்கான அனுமதி எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் இரத்து செய்யப்படும் எனவும் பொது நிர்வாக அமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# தமிழில் தேசிய கீதம் பாடத் தடை விதிப்பது தொடர்பாக ஆராயப்பட்டதற்குக் கண்டனம்

## ஜனநாயக மக்கள் முன்னணி

இலங்கையில் தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடுவதற்குத் தடை விதிப்பது குறித்து அமைச்சரவையில் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றத்திற்கு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதம் தமிழ் மொழியிலும் பாடப்படுவது பெருமைக்குரிய ஒரு விடயம் என்பது அரசிற்குப் புரியவில்லையா? அல்லது நீங்கள் இந்நாட்டை சேர்ந்தவர்கள் அல்லர் என தமிழ் மக்களுக்கு அரசு செய்தி விடுக்கின்றதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மனோகணேசன் மேலும் கூறியவை வருமாறு -

தேசியகீதம் தமிழ் மொழியில் பாடப்படுவதைத் தடை செய்வது தொடர்பாக அமைச்சரவையில் கருத்துப் பரிமாறப்பட்டது உண்மையாகும். ஆனால் இது தொடர்பில் அரச நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் சுற்று நிருபம் அனுப்பப்படுவதற்கு இறுதி முடிவெடுக்கப்பட்டதா என்பது தொடர்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கு அரசு உடனடியாக விளக்கமளிக்க வேண்டும்.

அமைச்சரவையில் இவ் விவகாரம் பேசப்பட்ட பொழுது தமிழிலும், தேசிய கீதம் பாடப்படுவது தொடர வேண்டும் என்ற கருத்துகளைத் தெரிவித்த அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, ராஜித சேனாரத்ன ஆகியோரை நாம் பாராட்டுகின்றோம்.

அதேவேளையில் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழ் பேசும் சமூகங்களைச் சார்ந்த அமைச்சர்களும் கலந்து கொண்டார்களா என்பதையும், கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவித்தார்களா என்பதையும் அறிந்துகொள்வதற்கு தமிழ் பேசும் மக்கள் ஆவலாக இருக்கின்றார்கள்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் பாடப்படுவதில்லை என்று கூறுவதே அடிப்படையில் ஒரு தவறான தகவலாகும்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் விமல் வீரவன்ஸ தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதைத் தடுக்கும் முகமாக எமது அயல் நாடான இந்தியாவை உதாரணம் காட்டியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தியாவின் தேசிய கீதம் அந்நாட்டின் பெரும்பான்மையினர் பேசும் மொழியான ஹிந்தி மொழியில் பாடப்படுகிறது என விமல் திருவாய் மலர்ந்துள்ளார். இது இவரது பெரும்பான்மை வாதத்தையும், அறியாமையையும் காட்டுகின்றது.

உண்மையில் இந்தியாவின் தேசியகீதம் வங்காள மொழியில் பாடப்படுகின்றது. இந்தியாவின் சனத்தொகையை மொழி ரீதியாக வரிசைப்படுத்தினால், முதலில் இந்தியும், அடுத்து தெலுங்கும், மூன்றாவதாக தமிழும் இருக்கின்றன. நான்காவதாக அதிகம் பேர் பேசும் வங்காள மொழியில் அமைந்துள்ள தேசியகீதத்தை அனைத்து இந்தியர்களும் பாடுவது இந்தியாவின் பெருமையாகும்.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

## ஈழ ஆதரவு அக்கினிப்புயல் சீமான்

சிங்களத்தில் மட்டுமே இனி இலங்கையின் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்றும் தமிழில் பாடுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சரவையில் ஆராயப்பட்டதற்கு தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை இலங்கையில் தமிழர்களுக்கு இடம் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழர்கள் என்ற உரிமையுடனும் உணர்வுடனும் எவரும் வாழ முடியாது என்பதை இலங்கை அரசு தொடர்ந்து உலகுக்கு நிரூபித்து வந்துள்ளது. அதன் ஒரு பகுதிதான் இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் பாட தடை விதிப்பது குறித்த கருத்துப் பரிமாற்றம்.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய தமிழினப் படுகொலைக்குப் பின் உலகிற்கு இலங்கை அரசு பகிரங்கமாகச் சொல்வது என்னவென்றால், இது சிங்கள நாடு, எங்கள் சிங்கள தேசத்தின் தேசிய கீதத்தை சிங்களத்தில்தான் பாடுவோம். இங்கு சிங்களவர்கள் மட்டும் தான் வாழ முடியும். தமிழர்களுக்கு இங்கு இடமில்லை என்பதே ஆகும்.

இதற்கு மிக முக்கிய காரணம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் சமீபத்திய கண் துடைப்பான இலங்கைப் பயணமும், தமிழர்கள் பிரச்சினையில் இந்தியா எவ்வித அழுத்தத்தையும் இலங்கைக்கு தராது என்ற சிவசங்கர மேனின் பேட்டியுமாகும் - என்றும் சீமான் தெரிவித்துள்ளார். (ர)

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு தடை விதிப்பது குறித்து இலங்கை அமைச்சரவையில் ஆராயப்பட்டதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

. சிங்களவர் பெரும்பான்மையாக வாழ்கின்றனர் என்பதை, அதாவது இலங்கை சிங்களவருக்கே உரியது எனவும் அறிவிப்பு செய்திருப்பதையே இந்நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடமை.....



சேவைக்கு விருது: இலங்கை வங்கியில் 25 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றியமைக்காக யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிக் கிளையில் கடமையாற்றிய கைலாசபிள்ளை விக்னேஸ்வரன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளரிடமிருந்து அவர் விருது பெறுகிறார். (201)

# தமிழ் மக்களின் காணிகளை கிழக்கில் அபகரிக்க முயற்சி

கொழும்பு, டிசெ.15

மட்டக்களப்பில் தமிழர்களின் 150 ஏக்கர் காணி சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரத்தினம் குற்றம்சாட்டியுள்ளார்.

வாமிமலை பிரதேச செயலர் பிரிவிலேயே தமிழர்களுக்குச் சொந்தமான 150 ஏக்கர் காணிகள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் காணிகளில் சிங்களவர்கள் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து ஏற்கனவே கிழக்கு மாகாண ஆளுநருக்கு எழுத்து மூலமாக முறைப்பாடு செய்துள்ளேன். ஆனால் அவர் இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# வாகன இறக்குமதி அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.15

நாட்டினுள் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கைச் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளாந்தம் 400 தொடக்கம் 500 வாகனங்கள் வரை சுங்கப் பிரிவினரால் ஒப்படைக்கப்படுவதாகச் சுங்கத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.கடந்த வருடத்துடன், ஒப் பிடுகையில் இந்த வருடம் ஜூன் மாதத்திற்குப் பின்னர் வாகன இறக்குமதி குறிப்பிடத்தக்கள வில் அதிகரித்துள்ளது,தீர்வை வரி குறைக்கப்பட்டதை அடுத்தே வாகனங்களை இறக்குமதி செய் வது தொடர்பிலான ஆர்வம் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே வாகன இறக்குமதியின் மீது விதிக்கப்பட்டிருந்த வரி 50 வீதத்தால் குறைக்கப்பட்டதை அடுத்து இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெரோயின் பைக்கற்றுக்களுடன் கைதான கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்

அனுராதபுரம், டிசெ. 14

நான்கு ஹெரோயின் பைக்கற்றுக்களைத் தன்வசம் வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அநுராதபுரம் பொலிஸ் குழுவால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

அனுராதபுரம் பொலிஸில் விளையாட்டுப் பிரிவில் பணியாற்றிய இந்தக் கான்ஸ்டபிளிடம் ஹெரோயின் இருப்பதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீவிர சோதனையின் பின் அனுராதபுரம் பொலிஸ்நிலையத்துக்கு உள்ளேயே இவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலநறுவை, மெதிரிகிரிய பிரதேச வாசியான இந்தக் கான்ஸ்டபிள் அனுராதபுரம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை இன்றுவரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-5)

## படையினரின் ஏற்பாட்டில் கரோல் கீத நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.15

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ். சிவில் அலுவலகத்தினர் கரோல் கீத உற்சவம் ஒன்றை இன்று புதன் கிழமை மாலை 5 மணியளவில் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ். சிவில் அலுலகத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு இராணுவத்தினருக்கும், பொது மக்களுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் மேம்படுத்தும் என பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதி தெரிவித்துள்ளார். (எ)

## வீதி புனரமைப்பு

கோப்பாய், டிசெ. 15

கோப்பாய் பிரதேச மருத்துவ மனை வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேச பொதுமக்கள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. (ஓ-72)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் தோற்றி 2A,B (மாவட்ட நிலை-20) பெறுபேற்றை பெற்ற வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவி செல்வி

**அகல்யா அழகுராசா**

அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு மேன்மேலும் பல சிறப்புக்களையும் பெற்று பல்லாண்டு வாழ அம்பாள் துணைகொண்டு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வி.நிறஞ்சா, கே.தர்சன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாசார அலுவல்கள் திணைக் களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம், முஸ் லிம் சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து தமிழ் இலக்கியம், சிறுகதை, நாவல், நாடகம், விமரிசனம், திறனாய்வு என்பவற்றுக்கு வழங்கும் 2010ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதினை இன்று (15.12.2010) பெற்றுக்கொள்ளும் இந்து மகாசபைத் தலைவரும் பிரபல எழுத்தாளருமான **கா.சச்சிதானந்தன் (கே.எஸ்.ஆனந்தன்)** அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல சிவகாமி அம்மனின் திருவருட் கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து மகாசபை
சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில்.

(107380)


## மதுரா
### அழகுக்கலை பயிற்சி நிலையம்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

அடிப்படை அழகுக் கலைப் பயிற்சிகள்
ஒருநாள் பயிற்சி வகுப்பு

காலம்: 19.12.2010 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரை

★பேசியல்- 3 வகை ★ ஹெயாஸ்ரைல்
★இந்து , கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்
★கேக் மேக்கப் ★திரெட்டிங்
★ சாறி டிரெஸ்ஸிங் 7 வகை

பயிற்சிக் கட்டணம்: ரூபா 3000 மட்டுமே

அனைத்துப் பயிற்சிகளும் விளக்கங்களுடன் கூடிய செயன்முறைப் பயிற்சிகள் பயிற்சியில் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
பயிற்சியில் இணைய விரும்புவோர் 17.12.2010 அன்று பி.ப. 3 மணியில் இருந்து 6 மணிவரை பயிற்சி நிலையத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.



மதுரா
அழகுக்கலைப் பயிற்சி நிலையம்
பழைய வீதி, கோப்பாய்.
T.P: 021 321 4013, 0779362642


## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ;



இலங்கை இந்துசமய கலாசார அமைச்சினால் கொழும்பு ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ சில்வா ஞாபகார்த்தக் கலையரங்கில் கலை இலக்கியத் துறைகளில் சிற்பத்திற்கான **'கலா பூஷணம்'** விருதினை இன்று (15.12.2010) வழங்கிக் கௌரவிக்கப்படும்

**சுப்பிரமணியம் ஆச்சாரி பாஸ்கரன் ஆச்சாரி**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் யாழ்.பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் **'கலைஞானச்சுடர்'** விருதினையும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான ஜனாதிபதி 'ஷில்ப' விருதுக்கான போட்டியில் 2006 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்திலும் வட மாகாணத்திலும் 2 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளார். 2007 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் முதலாவது இடத்தினையும் பெற்றுள்ளார்.

2008 ஆம் ஆண்டு வடமாகாணம் மற்றும் யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது இடத்தினையும் 2009 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் முதலாவது இடத்தினையும் பெற்றுள்ளார். மேலும் கைத்தொழிலாளருக்கான தேசிய விருதுகளில் 2009, 2010 ஆம் ஆண்டுகளில் 3 ஆவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் கைவினைச் சிற்பிகளுக்காக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட 'ஷில்ப 2010' போட்டியில் 2 ஆவது 3 ஆவது இடங்களைப் பெற்று வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

இவர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து மேலும் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: திரு.திருமதி. லோகிதாசன் கஜபாமினி, பேரன் - தானுஜன்

மணி ஜுவெல்ஸ் கட்டிங் இல.23, கன்[illegible]


## பண்டிகைக்கால அதிர்ஷ்டம்

15.12.2010 இல் இருந்து 14.04.2011 வரை ரூபா ஆறாயிரத்துக்கு (6000/-) மேல் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரில் 15.04.2011 ஆம் திகதியன்று குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும்

அதிர்ஷ்டசாலிகளுக்கு..

முதலாவது பரிசு T.V.
இரண்டாவது பரிசு துவிச்சக்கரவண்டி
மூன்றாவது பரிசு C.D. பிளேயர்
என்பன பரிசாக வழங்கப்படும்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்



## சிறி சிவாஞ்சனா நகையகம்

இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 9227

## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

- Diploma in Microsoft Office 1000/= 3 Months
- Diploma in Desktop Publishing 1000/= 4 Months
- Diploma in Web Page Designing 1000/= 3 Months
- Diploma in Graphic Designing 1000/= 4 Months
- Diploma in Hardware Engineering 1000/= 3 Months
- Diploma in Auto CAD 1000/= 3 Months
- Diploma in Computer Science 1000/= 4 Months
- Honors Diploma in Computer Science 1000/= 3 Months

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 15.12.2010 - 9am or 3pm
Batch ii - 17.12.2010 - 9am or 3pm
Batch iii - 18.12.2010 - 9am or 3pm
Batch iv - 19.12.2010 - 9am or 3pm

25.12.2010 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

Accpac+Quick Book+MYOB
Tally Classes ஆரம்பமாக உள்ளன

NEW Batch :- Saturday (18.12.2010) & Sunday (19.12.2010) BATCH I :- 10AM TO 11AM BATCH II :- 2PM TO 3PM

Hardware & Net working One week Class 20-12.2010 9Am
Course Fee - 2000/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் பயிற்சி பெறும் தமிழ் இளைஞர்கள் சேவைக்கு வந்ததும் மொழிப்பிரச்சினை தீரும்

## மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

சண்டிலிப்பாய், டிசெ.15

பொலிஸ்சேவையில்இணைந்து கொள்ள முன்வந்துள்ள தமிழ் இளைஞர்களுக்கான பயிற்சி நெறி தற்பொழுது நடைபெற்று வருகின்றது. பயிற்சி முடிவடைந்தவுடன் இவர்கள் குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றவுள்ளார்கள். இவர்கள் மூலம் பொலிஸ் நிலையங்களில் நிலவி வந்த மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நல்லுறவு, ஒத்துழைப்பு மேலும் வளர்ச்சியடையும்.

இவ்வாறு மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யு.எஸ்.லியனகே சங்கானையில் நடைபெற்ற சுற்றுச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

இக் கூட்டத்தில் சங்கானை வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், சுகாதார வைத்தியப் பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தொடர்ந்து உரையாற்றுகையில்:-

நாட்டில் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. பல வீடுகளில் இரவு நேரங்களில் ஆயுத முனையில் கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் பொது மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். தங்க நகைகளை வைத்திருப்பவர்கள் பாதுகாப்பான இடங்களில் வைக்க வேண்டும். கொள்ளைகள், திருட்டுக்கள் நடைபெறும் சமயங்களில் அயலவர்கள் ஏனோதானோ என்று இருக்காமல் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸாரும் பாதுகாப்புபடையினரும்இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள். இரவு நேரங்களில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். நாட்டில் சமாதானம் ஏற்பட்டு இயல்பு நிலை வழமைக்கு வந்ததைத் தொடர்ந்து ஆயுதமின்றிப் பொலிஸார் கடமையாற்றி வருகின்றார்கள். பொலிஸாரால் மட்டும் குற்றச் செயல்களைத் தடுக்க முடியாது. பொது மக்களும் இணைந்து செயற்படுவதன் மூலம்தான் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

போக்குவரத்துப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி குணசேகரா உரையாற்றுகையில்

குடாநாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அதற்கேற்றவாறு வீதிகளும் அமையவில்லை. இதனால் விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உண்டு. வாகனம் செலுத்துவதற்கான விதி முறைகளை உரிய முறையில் பின்பற்றாமல் செல்வதும் விபத்துக்குக் காரணமாகும். 49 சிசி மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களும் தலைக்கவசம் அணிவதுடன் சாரதி அனுமதிப்பத்திரமும் வைத்திருக்க வேண்டும். ஜனவரி மாதத்திலிருந்து இது கடுமையாக அமுல்படுத்தப்படும். மிதி வண்டியில் சமாந்தரமாகச் செல்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-115)

# கால்நடை வைத்தியர் சங்கத்தின் மாகாண மட்ட கலந்துரையாடல்

## 30 வருடங்களின் பின்னர் யாழ்.நகரில்



இங்கிலாந்திலிருந்து வருகை தந்த கால்நடை வைத்தியர் எ.சிதம்பரநாதன் விரிவுரை நிகழ்த்துகிறார், வடபகுதியில் பணியாற்றி வரும் கால்நடை வைத்தியர்கள் விரிவுரையில் பங்கேற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், டிசெ.15

கடந்த 30 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக இலங்கை கால்நடை வைத்தியர் சங்கத்தின் ஏற்பாட்டிலான மாகாண மட்ட கருத்தரங்கும் கலந்துரையாடல் நிகழ்வும் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.

இலங்கைக் கால்நடை வைத்தியர் சங்கத் தலைவர் டாக்டர் அசோக தங்கொல்ல தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது பசு இனங்களில் ஏற்படும் இனப்பெருக்கம் தொடர்பான பிரச்சினைகள், பால்மடி நோய் தொடர்பான பிரச்சினைகள், கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு முறைகள், தீர்வுகள் தொடர்பான விரிவுரைகள் இதன் போது இடம்பெற்றன.

கால்நடை வைத்தியர்களான எம்.அமரசிங்க, எஸ்.குலேஸ்வரகுமார், எஸ்.சிதம்பரம், பசில் அலெக்சாண்டர் மற்றும் கால்நடை வைத்திய, உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தின் பதிவாளர் வைத்தியர் ஆ.சிவசோதி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தினார்கள்.

வட பகுதியின் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த கால்நடை வைத்திய அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஒ-14)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வலி. வடக்கு வித்தகபுரம் மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.15

வலி.வடக்கில் வித்தகபுரத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பன்னாலை கனகசபை வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அந்தப் பிரதேசங்களில் உதவி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

மக்களின் தேவைகள் தொடர்பாக இதில் ஆராயப்படவுள்ளதால் இந்தப் பிரதேச மக்கள் அனைவரையும் தவறாமல் பங்குபற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-15)

# மலத்தியோன் பவுடருக்கு பெரும் தட்டுப்பாடு

தென்மராட்சி, டிசெ.15

தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்களில் எறும்பு கொல்லி மருந்தான மலத்தியோன் பவுடருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அண்மையில் பெய்த கடும் மழையின் பின்னர் எறும்புகள் குடியிருப்புகளுக்குப் புற்றுகள் எடுத்து வந்துள்ளதால் அவற்றை அழிப்பதற்குரிய மலத்தியோன் இல்லாததால் மண்ணெண்ணெய் ஊற்றி எறும்புகளை துரத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எறும்பை அழிக்கக்கூடிய வேறு மருந்துகள் இல்லாததால் குடா நாட்டில் மலத்தியோன் பவுடர் விற்பனைக்கு இல்லாதது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (204-207)

# மாதத்தில் 100 கியூப் மணல் மட்டுமே பிரதேச செயலகம் மூலம் பெறமுடியும்

யாழ்ப்பாணம், டிசெ. 15

பிரதேச செயலகங்கள் ஊடாக ஒரு மாதத்தில் ஆகக் கூடியளவாக 100 கியூப் மணல் மாத்திரமே அகழமுடியுமென யாழ். மாவட்ட செயலக மணல் விநியோகப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மணல், ஊத்தை மண், கிரவல் என்பவற்றைப் பொது மகன் ஒருவர் மாதத்தில் பிரதேச செயலகம் ஊடாக ஆகக் கூடுதலாக 2 கியூப்பினை மட்டுமே பெற முடியும். அதற்கு மேலதிகமாகத் தேவைப்படின் புவிச்சரிதவியல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதேச செயலர் பிரிவில் மணல் அகழப்படின் அந்த மணலை அந்தப் பிரதேச செயலகத்தின் எல்லைக்கு அப்பால் கொண்டுபோக முடியாது. மேலும் தனிப்பட்டவரது காணியில் மணல் அகழ்வதாக இருந்தால் அந்தத் தனிநபரின் சம்மதக் கடிதத்துடன் அந்தக் காணி அவருடையதுதான் என்பதை உறுதிப்படுத்தும் காணி உறுதியும் சமர்பிக்கப்படவேண்டும்.

அனுமதிப்பத்திர விண்ணப்பத்துக்கு 180 ரூபா 80 சதமும் ஒரு கியூப் மணலுக்கு அரச வரியாக 78 ரூபா 40 சதமும், ஊத்தை மண், கிரவல் ஆகியவற்றுக்கு ஒரு கியூப்புக்கு 8 ரூபா 96 சதமும் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-15)

# ஊழியர் சேமநலன் நிதியத்தில் குடாநாட்டில் 250 பேர் இணைவு

யாழ்ப்பாணம்,டிசெ.15

ஊழியர் சேமநல நிதியத்தில் யாழ். மாவட்டத்தில் இதுவரை 250 பேர் இணைந்துள்ளனர் என்று நிதியத்தின் யாழ். மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி ஜே.தமிழ்அழகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊழியர் சேம நல நிதியத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் கடந்த நவம்பர் மாதம் யாழ். மார்ட்டின் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் அன்றிலிருந்து இன்று வரை 250 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இதில் இணைந்துள்ளனர்.

அரச கூட்டுத்தாபன, திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்கள் இந்த நிதியத்தில் இணைந்துள்ளனர்.

இதுவரை தமது நிதியத்தில் இணைந்து கொள்ளாதவர்கள் யாழ். மார்ட்டீன் வீதியில் உள்ள தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொண்டு இணைந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# சுப்பிரமணியம் பூங்கா திறப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்.மாநகரசபையின் சுப்பிரமணியம் பூங்கா, இன்று முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ்.மாநகர ஆணையாளர் மு.சரவணபவ தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெறும்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தப் பூங்காவைத் திறந்து வைக்கவுள்ளார்.

இதேவேளை மேற்படி பூங்கா சிறுவர்களுக்கு மிகுந்த கவர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாகவும் எல்லோருமே மிகவும் மகிழ்ச்சியாகத் தமது நேரத்தைச் செலவிடக்கூடியதாக கொழும்பு விகாரமாதேவி பூங்காபோன்று மிகவும் அழகானதாகப் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (201-7)

## மீண்டும் மீண்டும்....



பழைய நினைவுகள்: சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் பாடசாலை அதிபர் செல்வி த.பொன்னம்பலம் பாடசாலைக் கொடியை ஏற்றுகிறார். தரம் 4 மாணவர்கள் கோலாட்ட நிகழ்வில் ஈடுபட்டுள்ளனர். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



உள்ளத்தில் இனம்புரியாத சந்தோஷம் குடி கொள்ளும். பல நாள்களாக வராமல் இருந்த பண வரவுகள் வரலாம். நண்பர் ஒருவருக்கு அவசர உதவி செய்யலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். ஓய்வு எடுக்கும் நாள்.

**இடபம்:**



இதோ அதோ என இழுத்துக் கொண்டிருந்த காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். மற்றவர்களுக்காக நீங்கள் அலைந்து திரிந்து சில வேலைகளை முடிக்கலாம். கடன் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவீர்கள். உறவினர்கள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். பழைய சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். உயர்வு காணும் நாள்.

**மிதுனம்:**



உங்களின் செயற்பாடுகளைப் பற்றி உறவினர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீங்கள் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல், உறவினர்கள் சிலர் கையை விரிக்கலாம். மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.

**கடகம்:**



சோர்வு, சோம்பலால் வழக்கமான பணிகளில் தடை ஏற்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பி, யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். உங்களின் விவகாரங்களில் தலையிடும் சிலரை கடிந்து கொள்ளலாம். சிலரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.

**சிங்கம்:**



சில நாள்களுக்கு முன்னர் உருவான பிரச்சினை ஒன்று சுமுகமாக முடியலாம். வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். சிலருக்கு நல்ல யோசனைகள் சொல்வீர்கள். புதிய நண்பர்களை பெறலாம். குடும்பத்தினருடன் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும்.

**கன்னி:**



எந்த விடயத்திலும் உங்களை முன்னிலைப் படுத்தி கொள்ள முற்படுவீர்கள். பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதியைக் கேட்டு வாங்குவீர்கள். கௌரவம், அந்தஸ்து பார்த்து சில காரியங்களை செய்வீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர், திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஆரோக்கியக் குறைவு நீங்கும்.

**துலாம்:**



பண விடயங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். ஒருவர் உங்களிடம் சொல்லிய வேலைகளை மறந்து விடுவதால், பிரச்சினைகளை சந்திக்கலாம். அயலார் ஏட்டிக்குப் போட்டி யாக செயற்படலாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு நேரும்.

**விருச்சிகம்:**



வீட்டை சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உங்களை பயன்படுத்தி சிலர் காரியம் சாதிக்க முற்படுவர். மாற்றுமத நண்பர்களை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். தேக ஆரோக்கியத்தில் சிறு தொந்தரவு உண்டாகலாம். சிலர் உங்கள் மீது பொறாமைப்படலாம். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**தனுசு:**



தொட்ட காரியங்கள் தடையின்றி துரிதமாக நடக்கும். வசதி படைத்த சிலர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். சொந்த பந்தங்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்களால் அல்லது ஆண்களால் சந்தோஷம் அடையலாம். சாமர்த்தியமான பேச்சுக்களால் சில விடயங்களை சாதிப்பீர்கள். அனுகூலமான நாள்.

**மகரம்:**



பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம். நண்பர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். குடும்ப பெரியவர்கள் அல்லது உறவினர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம்.

**கும்பம்:**



மங்கையர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். நாள் முழுவதும் பரபரப்பாக செயற்படலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். நண்பர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் நினைத்ததே சரியென நினைத்து செயற்படுவீர்கள்.

**மீனம்:**



பண விவகாரங்களில் சிலரிடம் கோபமாக நடந்து கொள்ளலாம். வெளியூர்களில் இருக்கும் ஒருவர், உங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். மற்றவர்களுக்காக நீங்கள் செலவு செய்யலாம். மனதிற்குப் பிடித்த வகையில் சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம்.

# நீர்நிலையில் தரையிறங்கக் கூடிய 'எயார் டாக்ஸி' விமான சேவை விரைவில்

கொழும்பு, டிசெ.15

நீர் நிலைகளில் தரையிறங்கக் கூடிய விமானங்களைக் கொண்ட "எயார் டாக்ஸி" விமானச் சேவையொன்று மிகவிரைவில் - எதிர்வரும் தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறிலங்கன் விமான நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சேவையை ஆரம்பிக்க இரு இயந்திரங்களைக் கொண்ட 'டுவின் ஓவர்' விமானங்கள் இரண்டு கனடாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவற்றுள் ஒரு விமானம் அண்மையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும் 15 பயணிகள் பயணிக்கத்தக்க இந்த விமானங்களின் சேவையை ஆரம்பிக்கப் பொருத்தமான நீர்நிலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவை கொழும்பு பேறையாறு, காஸர்ரீ நீர்த்தேக்கம், திஸ்ஸ மஹாராம, அருகம்பொக்கை மற்றும் நீர்கொழும்பு, கலப்புக்கடற்பிரதேசம் என்பனவாகும்.

சிறிலங்கன் விமான நிறுவனத்தின் இந்த 'எயார் டாக்ஸி' விமான சேவையின் மூலம் எந்த வொரு உல்லாசப் பயணியும் 40 நிமிட நேரத்துள் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தையும் சென்றடைய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-22)

# கல்லும் சொல்லாதோ கவி

பல ஊருக்குப் பயணம் செய்கிறவர்களுக்குப் பல மொழிகள் தெரிந்திருப்பது நல்லது. எந்த ஊர் மக்களுக்கும் அவர் மொழியில் பேசினால் விருப்பு உண்டாகும். உதவி செய்யும் மனம் உண்டாகும். நல்ல வியாபாரிகளுக்கு இந்தச் சாமர்த்தியம் இருக்கும். வெவ்வேறு மொழி பேசுவோர் வரும் சமயம் அவரவர் மொழியில் பேசினால் கண்டிப்பாக வியாபாரம் நன்றாக நடக்கும்.

தமிழ் நாட்டில் இளைய தலைமுறைக்கு ஹிந்தி மறுக்கப்பட்டுவிட்டது. கட்சி அரசியலால் நிகழ்ந்த கவனக் குறைவு இது. அதன் இறுக்கத்தை வேலை நிமித்தம் வடக்கேயும் வெளியேயும் போகும்போது தமிழ்நாட்டு இளைஞர்கள் உணருவார்கள். தமிழ்நாட்டுத் தலைவர்கள் அகில இந்திய அளவில் பிரபலமாகாமல் போனதற்குக் ஹிந்தி தெரியாமை ஒரு முக்கிய காரணம்.

"உனக்கு எத்தனை மொழிகள் தெரியுமோ அத்தனை மனிதன் நீ" என்று ஒரு பொன்மொழி உண்டு. அந்தப் பொன் மொழியில் எந்த மொழி தோன்றியிருந்தாலும் அந்த மொழிக்கு எமது பாராட்டு உண்டு. இது நூற்றுக்கு நூறு உண்மை. முன்பெல்லாம் சர்வசாதாரணமாக ஏழெட்டு மொழிகள் பேசுபவர் பலர் உண்டு. ஆனால் இப்போதுள்ள பெரும்பான்மை இளைஞர்கள் தலையில் நலிந்த தமிழும், சிதைந்த ஆங்கிலமும்தான் உண்டு.

குடும்பத்தவர்கள்தான் தொழில் நிமித்தம் பல மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. சாமியாராகப் போனாலும் பலமொழி அறிவு பயன்படும். பலமொழி பேசும் சந்நியாசிகளுக்கு உலகம் முழுவதும் சிஷ்யர்கள் உருவாக முடியும்.

அமெரிக்காவில் பிரம்மாண்டமான 'தாமரைக் கோயில்' கட்டியிருக்கும் சுவாமி சச்சிதானந்தா கோவை மாவட்டத்துக்காரர். அவருக்குத் தமிழ் மட்டுமே தெரிந்து இருந்தால், அமெரிக்காவில் தாமரைக் கோயில் வந்திருக்காது. சுவாமி சின்மயானந்தாவின் ஆங்கிலம்தான் உன்னி கிருஷ்ணனை உலகளாவிய கிருஷ்ணனாக்கியது. பல மொழி தெரிந்து இருப்பது பல வகையில் நல்லது.

திருப்பனந்தாளில் காசி மடம். என்று சைவ சித்தாந்த பீடம் ஒன்று இருக்கிறது. அதன் மூல புருஷர் குமர குருபர சுவாமிகள். அவர் ஒரு நாள் காசிக்கு யாத்திரை போனார். காசியில் மடம் கட்டி சிவநெறி விளக்கச் சிறிய இடம் தேவைப்பட்டது. அக்காலத்தில் ஆட்சியில் இருந்த டில்லி பாதுஷா தயவு வைத்தால் இடம் கிடைக்கும். இரவல் மொழியில் இடம் கேட்பதை விட அவரது தாய் மொழியில் கேட்டால் தாராளமாகத் தருவார் என்பது சுவாமிகளுக்குப் புரிந்தது. ஹிந்துஸ்தானி மொழியில் புலமை நயத்துடன் பேசினால் பாதுஷாவின் உள்ளம் மகிழும் நெகிழும். மடம்கட்ட இடமும் கிடைக்கும். ஹிந்தி கற்றுக்கொள்ளக் கலைவாணி அருள் இருந்தால் கட்டாயம் நடக்கும் என்று தீர்மானித்தார். அவள் சகல கலைகளிலும் வல்லவள். அந்தச் சகலகலாவல்லியின் நயன தீட்சை நடந்து விட்டால் மூடனும் ஞானியாவான்...அப்படி இருக்க முனிவருக்கா மொழியறிவு வராது?

"பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல் காய்"
என்றும்
"மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய்"
என்றும் விரும்பி வேண்டினார்.



வெள்ளத் தாமரையிலிருக்கும் சரஸ்வதியே; என் இதயமும் வெள்ளை (அறியாமை). அந்த வெண்டாமரையைவிட்டு இந்தத் தண்டாமரைக்கு வந்தால் சரி வராதா? என்று கேள்வி கேட்டு அசத்தி விட்டார் கலைமகளை.

இந்தச் சகலகலாவல்லி மாலையால் புலவர்கள் போற்றும் பொன்மயில், குமரகுருபரர் நாவில் குடிபுகுந்தாள். ஹிந்துஸ்தானியில் பேசவும், உரை நிகழ்த்தவும், வல்லவரானார். மன்னரே மயங்கும் வண்ணம் ஆற்றலும் அறிவும் பெற்று மடம்கட்ட இடமும் பெற்றார்.

அவர் சிங்கத்தில் ஏறிச் சென்றார் என்று கூட சில கதைகள் உண்டு. அதாவது, சிங்கத்தின் துணிச்சலுடன் சென்றார் என்பதே இதன்பொருள். கலைவாணி அருள் இருந்தால் என்னதான் நடக்காது! அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது தமிழ்மறை. "அறிவிலார் என் உடையரேனும் இலர்" என்பது அதனினும் முக்கிய வாழ்க்கை விளக்கம்.

சரஸ்வதி தேவியின் அருள் பெற்றவரிடம் சகல கலைகளும் சரணடையும் என்பதால் குமர குருபரர் அருளிய சகலகலாவல்லி மாலையை முன்னேற விரும்பும் இளைய தலைமுறை மனதில் பதித்து நிதமும் சொல்வது நல்லது.

கையில் ஸ்படிக மாலையும் புத்தகக்கட்டும், வீணையுமாக, வெள்ளைத் தாமரையில் வெள்ளை உடை உடுத்து வீற்றிருக்கும் கலைமகளைப் புராணங்கள் வணங்குகின்றன; வர்ணிக்கின்றன. வெண்மை, உண்மையின் அடையாளம். தூய நல்ல உண்மை வெண்மை மூலம் வெளிப்படுகின்றது. அதுமட்டுமல்ல எல்லா வண்ணங்களும் வெள்ளையில் அடக்கம்.

வெள்ளை ஸ்படிக்க கல்லில் சூரிய ஒளியை ஊடுருவச் செய்தால் அது பல வண்ணங்களாகப் பிரிந்து வெளிப்பாயும் மழைத்துளியில் பாயும் சூரிய வெளிச்சம் வானில் உலர்த்தும் வண்ண வில்-வானவில்-இதன் வெளிப்பாடே.

படைப்பு என்பது அபூர்வமானது. ஒரு தொழிலாளியின் படைப்பிற்கும், கலைஞனின் படைப்பிற்கும் வேறுபாடு உண்டு. தொழிலாளியின் பல படைப்புகள் ஒரே மாதிரி இருக்கும். கலைஞனின் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு சிறப்புடன் இருக்கும். பிரம்மனுடைய படைப்பைப் பாருங்கள் கலைமகள் கணவனான பிரம்மன் சிறந்த கலைஞர்.

எல்லா மனிதர்களுக்கும் உறுப்புகள் ஒன்றே தான். கண், காது, மூக்கு, வாய் என்பவை பொதுவானவை. ஆனால் அதில் எத்தனை பெரிய வேறுபாடுகள். ஒருவர் மாதிரி ஒருவர் இல்லையே! எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் தெரியும்- மாறுபாடு இல்லை. ஆனால் வேறுபாடு- தெரியும்படி படைக்கும் பிரம்மனின் கலை உணர்வு ஓர் அதிசயம் தானே.

கவிதா கர்வம் கவிஞனின் உயிரோடு பிறந்தது. துர்க்கா, லட்சுமி, சரஸ்வதியாக அம்பிகையை வரைந்த ஓவியங்களில் ஒரு சுவாரஸ்யம்உண்டு. துர்க்கை, லட்சுமி உருவங்களில் இல்லாதபடி, சரஸ்வதி மட்டும் கால்மேல்கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். வீராசனம் என்கிற ஒருவகை ஆசனம் என்று நியாயம் சொன்னாலும், வீணையை வைத்திருக்க வசதியாக அப்படி உட்கார்ந்தாள் என்றாலும் கால் மேல் கால் போடுவது கர்வமாகவே தெரியும். கலையும் கர்வமும் கூடப் பிறந்தவை. நான் என்ற முனைப்பு இல்லையென்றால் படைப்புக்கு அங்கே இடம் இல்லை.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும்- துடி
யிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல் லாதோ கவி.

ஈ.கி. சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிக் கல்வி

ஒருவன் எத்தனை மொழிகளைக் கற்கிறானோ அத்தனை மனிதர்கள் ஆகிறான் என்பது ஒரு அறிஞரின் கூற்று. அதே நேரம் ''பிறமொழி கற்பது நன்று, நன்றல்ல தாய்மொழி மறப்பது.'' எனவும் ஒரு கூற்று நிலவுகிறது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் சாதாரணக் கல்வி பயின்றவர்களே தமக்குள் நன்கு ஆங்கிலம் பேசக்கூடியவர்களாக இருந்தார்கள். புகழ்பெற்ற வழக்கறிஞர்களாக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், எஸ்.ஆர்.கனகநாயகம் போன்றோர் ஆங்கிலத்தில் அதிமேதைகளாக இருந்தவர்கள். வழக்கறிஞர் அழகுசுப்பிரமணியம் ஆங்கிலத்தில் கவிதைகளையும் புனையும் ஆற்றல் மிக்கவராக இருந்தார். அப்பேர்ப்பட்டவர்கள் மட்டுமல்லாமல் ஊடகவியலாளர் எஸ்.சிவநாயகம் போன்றோரும் ஆங்கிலத்தில் மேதைகளாக இருந்தனர். அப்படிப்பட்டவர்கள் இருந்த யாழ்ப்பாணத்தில் இன்று ஆங்கிலத்தின் தரம் மிகக் குறைந்து இருப்பது வேதனைக்குரியது.

மொழி என்பது ஒரு கடல் போன்றது. எந்தவொரு மொழியையும் ஒருவர் தமது வாழ்நாள் முழுவதும் கற்றாலும் அது கற்க முடியாதது. ஆனால் ஒருவர் தமது தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் அதனைக் கற்றுக் கொள்வது அவருக்கு வாழ்நாள் முழுவதும் உதவியாக இருக்கும். ஒரு மொழியைப் பொறுத்தமட்டில் ஒருவருடைய தேவைகள் பலவிதமாக அமையலாம். ஒரு அலுவலகத்தில் சிற்றூழியராக இருக்கும் ஒருவருடைய ஆங்கிலத் தேவைக்கும் அதே அலுவலகத்தில் பதவிநிலை அலுவலராக இருப்பவரின் தேவைக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்க வேண்டும் என்பதை யாராலும் புரிந்துகொள்ள முடியும். பதவிநிலை அலுவராக இருக்கும் ஒருவருக்கு கேட்ட கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று சொல்லவோ, அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் என்ன சொல்லுவது என்று மட்டுமோ தெரிந்திருந்தால் போதாது. அவர் பல்வேறு விதமான அட்டவணைகள், கடிதங்கள், சுற்று நிருபங்கள், அறிக்கைகள், கட்டுரைகள் ஆகியவற்றை உடனுக்குடன் வரையும் திறன் பெற்றவராக இருப்பதோடு, அவ்வப்போது விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தமது மேலதிகாரிகளால் பணிக்கப்படலாம். இரண்டு மாதத்தில் அல்லது மூன்று மாதத்தில் அவர் தேடிக்கொள்ளும் ஆங் கில அறிவு அதற்கெல்லாம் உதவுமா! இருந்தாலும் ''சம்திங் இஸ் பெற்ற தான் நத்திங்'' என்பதற்கு ஏற்ப அவர் ஓரளவுக்குப் பேசவாவது தெரிந்து வைத்திருப்பது நல்லதே.

''றீடிங் மேக் எ மான், கொன்வசேஷன் எ றெடி மான், றைற்றிங் அன் எக்ஸாக்ற் மான்'' என்பது ஒரு ஆங்கில அறிஞரின் வாக்கு. இது எந்த மொழிக்கும் பொருந்தக் கூடியதே. இதன் பொருள், வாசிப்பு ஒரு மனிதனை உருவாக்கிறது, உரையாடல் அவனைத் தயாரான ஒரு மனிதனாக்குகிறது, எழுதுவது அவனை முழுமையான (பூரணமான) மனிதனாக்குகிறது என்பதாகும். 1951ஆம் ஆண்டு ஆறாம் ஆண்டு முதல், 1966 லண்டன் (வெளி வாரி) பட்டப்படிப்பு வரை ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்ற ஒருவன் என்பது குறித்து பெருமைப்படுபவன் அடியேன். 1949 முதல் 1957வரை யாழ். இந்துக்கல்லூரியில் எஸ்.அற்புதரெத்தினம், ரி.கனகநாயகம், ஏ.எஸ்.கனகரெத்தினம், கே.வி.மயில்வாகனம் போன்ற அருமையான ஆசிரியர்களிடம் ஆங்கிலத்தையும், வித்துவான் கார்த்திகேசு, பண்டிதர் செல்லத்துரை, தமிழ்ப்பேராசான் க.சிவராமலிங்கம் ஆகியோரிடம் தமிழையும் கற்கும் பெரும் பேறு எனக்குக் கிடைத்தது. மேற்கூறிய தமிழாசிரியர்கள் தமிழில் மட்டு மல்லாமல், ஆங்கிலத்திலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தவர்கள்.

அக்காலப் பாடத்திட்டங்களின்படி ஒவ்வொரு வருடமும் சிறந்த ஒரு ஆங்கில ஆசிரியரால் எழுதப்பட்ட ஒரு நாவலோ, அல்லது பல எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட சிறந்த ஆக்கங்களின் தொகுப்போ எமக்கு வருடம் முழுவதும் பாடநூலாக இருக்கும். 1951 எமக்கு ஆறாம் ஆண்டில் 'த பிளாக் பியூட்டி' என்ற ஒரு குதிரையின் உருக்கமான சுயசரிதம் ஆங்கிலப் பாடநூலாக இருந்தது. எட்டாம் வகுப்பில் யூல்ஸ் வேர்ண் என்ற பிரபல நாவலாசிரியர் எழுதிய 'றவுண்ட் த வேல்ட் இன் 80 டேய்ஸ்' என்ற சுவாரஸ்யமான நாவல் எமக்கு ஆங்கிலப் பாட நூலாக இருந்தது. இது பிறிதொரு காலத்தில் திரைப்படமாகவும் வெளிவந்தது. க.பொ.த (எஸ்.எஸ்.சி) வகுப்பில் ஆர். எல்.ஸ்ரீவென்சன் எழுதிய 'த ட்றெசர் ஐலன்ட்' என்ற நாவல் எமக்குப் பாடப் புத்தகமாக இருந்தது.

இவற்றைவிட 6ஆம் ஆண்டிலிருந்தே எமக்கு இலக்கணம், வாசிப்பு ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆங்கில இலக்கணத்தை அற்புதமான முறையில் எமது ஆசிரியர்கள் எமது பாடப் புத்தகங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டி எமக்கு அடிப்படை ஆங்கில அறிவை உன்னதமான முறையில் ஊட்டினார்கள். இதனால் அக் கால மாணவர்களுக்கு ஆங்கிலத்திலுள்ள அனைத்துத் திறன்களும் இயல்பாகவே அமையப்பெற்றன.

தமிழராய்ப் பிறந்து தமிழராய் வளர்ந்து, பதினொரு ஆண்டுகள் தமிழ் கற்ற பின்னும் ஒழுங்காக இரண்டு தமிழ் வசனங்களை எழுத முடியாத மாணவர்களை பல்வேறு மட்டங்களிலும் இன்று காணக் கூடியதாக இருக்கின்றது. அடிப்படைத் தமிழ் இலக்கண அறிவு இல்லாமல் இருப்பதே இதற்குக் காரணம். பொதுவாக கல்வி என்று சொன்னாலே அதற்கு இரண்டு விஷயங்கள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஒன்று ஆர்வம். மற்றது ஞாபகசக்தி. இவற்றைவிட ஒருவருடைய இயல்பான புத்திக்கூர்மையும் மிக முக்கியமானதே. மாணவர்களுடைய புத்திக்கூர்மையை மூன்று விதமாகப் பிரிக்கலாம் என்று ஒரு பாடசாலை அதிபர் என்னோடு உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது வேடிக்கையாகக் குறிப்பிட்டார், முதலாவது கற்பூரப்புத்தி. கரியை சற்று சிரமப்பட்டாவது முட்டிவிட்டால் அது பிறகு நின்று எரியத் தொடங்கி விடும். ஆனால் அடுத்ததான வாழைத் தண்டுப்புத்தி இருக்கிறதே அதை எப்படி வேண்டுமானாலும் மூட்டிப்பாருங்கள் அது மூளவே மூளாது. ஆனால் அத்தகையவர்களுக்குக்கூட ஒரு சில வார்த்தைகள் ஆங்கிலத்தில் பேசப் பழக்கி விடலாம்.

நான் கொழும்பில் சிலகாலம் வசித்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் காலை என்னைத்தேடி ஒருவர் வந்தார். வந்தவர் ''குட்மோர்னிங் சேர், ஐ ஆம் வேக்கிங் இன் மால்டிவ் ஐஸ்லான்ட்ஸ். ஐ நீட் யுவ கெல்ப் சேர்'' என்றார். இவ்வளவும் பேசத்தெரிந்தவர் அவர் கேட்ட உதவி தான் என்ன? கொழும்பு மெதடிஸ்த கல்லூரி, பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி, மற்றுமொரு பிரபல பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் தமது 5 வயது மகளைச் சேர்ப்பதற்காக 3 விண்ணப்பங்களை நிரப்பிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அவர் கேட்ட உதவி. இப்படிப்பட்ட ஒரு மிகச் சாதாரணமான படிவத்தை நிரப்புவதற்குக்கூட அவர் அறிந்து வைத்திருந்த ஸ்போக்கின் இங்கிலிஸ் பிரயோசனப்படவில்லை.

ஒரு மொழியை எத்தனையோ விதமாகக் கற்கலாம். ஆயினும் ஒரு மொழியில் சரளமாக எழுதும் திறனை ஒருவர் பெற வேண்டுமானால் அவர் நிச்சயம் அதனை அடிப்படையிலிருந்து இலக்கண விதிகளின் உதவியோடு ஆரம்பித்தால் தான் வெற்றிபெற முடியும். அது மிகக்குறுகிய காலத்தில் எய்தக் கூடிய தொன்றல்ல. தமிழிலும் சரி ஆங்கிலத்திலும் சரி இலக்கணம் என்றாலே சிலருக்கு வேப்பங்காயாக இருக்கிறது. தனது மொழியறிவு குறித்து ஒருவர் பெருமைப்பட வேண்டுமானால், அவருக்கு நிச்சயமாக அந்த மொழியில் சாதாரண நடைமுறையிலுள்ள அடிப்படை இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும், மதநூல்கள் எப்படி அந்தந்த மதத்தவர்களை நெறிப்படுத்துகின்றனவோ அது போலவே சாதாரண இலக்கண விதிகள் அந்தந்த மொழியின் அமைப்பை நெறிப்படுத்துகின்றன.

த.சகாதேவன் (B.A.)

வாசிப்பு, எழுத்து ஆகியவற்றை ஓரளவுக்காக சரிவரக் கற்றுக்கொண்ட ஒருவருக்கு பேசுவது என்பது இயல்பாகவே வரக்கூடிய ஒன்றாகும். ஆரம்பத்தில் சிலருக்கு ஓரளவு கூச்சம் இருக்கக் கூடும். ஆனால் 'சித்திரமும் கைப்பழக் கம் செந்தமிழும் (எந்தமொழியும்) நாப் பழக்கம்' என்பது போல எந்த மொழியிலும் சொந்த முயற்சி மூலமாகப் பேச்சுத் திறனை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும். பேசுவதற்கு மட்டும் பழகிவிட்டு அதிலும் சாதாரண மரபு வழிகளை (etiquettes) மட்டும் பழகிவிட்டு எழுத்துத்திறனை அபிவிருத்தி செய்ய முயலுபவர்கள் அது மிகக்கடினமாக இருப்பதை உணர்ந்திருப்பார்கள். ஆனால் மொழிபெயர்ப்பு முறை மூலமாகவோ, வேறெந்த முறை மூலமாகவோ முதலில் வசனங்களைப் பிழையற எழுதப்பழகியவர்கள், அந்தந்த சூழலில் பிரவேசிக்கும் போது பேச்சு இலகுவாக வருவதையும் உணர்ந்திருப்பார்கள். முக்கியமாக அரச அலுவலகங்கள், வங்கிகள் ஆகியவற்றில் பணிபுரிவோரும், ஆசிரியத் தொழில் பார்ப்பவர்களில் பலரும் எனக்கு ஓரளவுக்குப் பேசத்தெரியும், ஆனாலும் ஒரு வசனம் கூட எழுத முடியாமல் இருக்கிறது என்று கூறுவதை கேட்கக்கூடியதாக இருக்கிறது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# ஓர் இராணுவக் குறியீடாக மாற்றப்பட்டிருக்கும் மாங்குளம் மகா வித்தியாலயம்

மீள்குடியேற்றப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்த நிலையிலும் மாங்குளம் மகாவித்தியாலயத்தை உள்ளடக்கிய சுற்றுப் பிரதேசம் இன்னமும் இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவில்லை. இதன்காரணமாக இந்தப் பிரதேசத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

வன்னியுத்தத்தின் முடிவின்போது வடக்கில் பொது இடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் படிப்படியாக அகற்றப்பட்டு பொதுச்சேவைகளுக்கு இடையூறு விளைவிக்காதபடி மாற்று எற்பாடுகள் செய்யப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்த பாய ராஜபக்ஷ மற்றும் யாழ்.படைத் தளபதி போன்றோர் கருத்து வெளியிட்டிருந்தனர்.ஆனால் யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் தறுவாயில்கூட மக்கள் குடியிருப்புக்கள்,பொது இடங்கள், வீதிகள் என்பன இன்னமும் இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுபடாத நிலையே தொடர்கின்றது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினரின் பிடி யில் இன்னமும் இருக்கும் பொதுமக்களின் காணிகள், பொது இடங்கள், வீதிகள் என்பன மக்களின் இயல்பு வாழ்க்கை, வாழ்வாதாரத் தொழில்,போக்குவரத்து போன்ற பல்வேறு செயற்பாடுகளை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளன.

பாடசாலை நிரந்தர இடத்தில் இயங்க முடியாத நிலையில் தற்காலிக கொட்டகைகளில் மாரி மழைக்காலத்தில் பல்வேறு சிரமங்களுடன் இயங்க வேண்டிய நிலையில் உள்ளது.

ஆசிரியர்கள்,மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கான இயல்பான சூழல்,கட்டட வசதி யின்மை என்பன தொடர்கின்றன.

ஏ-9 வீதியில் குறிப்பிட்ட பகுதியில் மக்களின் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தப் பட்டிருப்பதால் இராணுவ நிலைகளுக்கு சமாந்தரமாக அமைக்கப்பட்டுள்ள மாற்றுப் பாதை தனியார் காணிகளுக்கிடையில் ஊடறுத்துச் செல்ல வேண்டிய நிலை யில் குறித்த நிலங்களின் உரிமையாளர்கள் தமது காணியில் குடியிருத் தல்,பராமரித்தல் போன்றவற்றை செய்ய முடியாதுள்ளது என இந்தப் பிரச்சினைகளின் பட்டியல் பெரியது.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதி களின் அபிவிருத்திக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும். பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவி வழங்கும் நாடுகள், முதலீட்டாளர்கள் முன்வரவேண்டும் என யுத்தத்தின் முடிவில் அரசாங்கம் அறைகூவல் விடுத்திருந்தது. ஆனால் வன்னியில் மக்களின் காணிகளோ, பொது இடங்களோ, வயல்களோ சில கடற்பகுதிகளோ இன்னமும் இராணுவத்தினரின் பிடியிலேயே இருக்கின் றன. இதனால் மக்களின் மீள்குடியேற் றம் தாமதமடைவதுடன் அவர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படு கின்றது. முதலில் உள்நாட்டில் கிடைக் கக்கூடிய வளங்களை மக்கள் அடை யக்கூடிய வகையில் அரசாங்கம் தடைகளை விலக்கவேண்டும். அதனை மக்கள் பயன்படுத்துவதற்கும், தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதன்பின்பே அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு சாத்தியமானதாகும். தவிர அவற்றின்மீது தடைகளை விதித்து மக்களின் வாழ்வுரிமையைக் கட்டுப்படுத்திக்கொண்டு அரசு அபிவிருத்தி,மீள்குடியேற்றம் பற்றிப் பேசு வது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும். மாங்குளம் மகாவித்தியாலயம் ஓர் இராணுவக் குறியீடாக [illegible] பாடசாலைக் [illegible]ள்ள வர்ணாங்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.

வன்னிப்பிரதேசம் இடநெருக்கடிகளற்ற பிரதேசம் என்பது அனைவரும் அறிந் தவிடயம்.காணிகளின் விஸ்தீரணம், காடுகள்,வெளிகள் என்று இயற்கைச் சூழமைவைக் கொண்டது. இந்த நிலையில் மக்கள் வாழ் விடங்கள், பாடசாலைகள், வேறு பொது இடங்கள் என்பவற்றில்தான் இராணுவத்தினர் குடிகொள்ளவேண் டும் என்று எந்த நிர்ப்பந்தமும் கிடையாது.எனினும் இராணு வத்தினர் இவ்வாறான இடங்களில் முகாம் அமைத்திருப்பது தமது நடவடிக்கைகளுக்கும் இலகுவாகத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமே என எண்ணத்தோன்றுகின்றது. உண்மையும் அதுவே. மாங்குளம் பாடசாலை உரிய இடத்தில் இயங்கமுடியாமையால் வடமாகாணப் பாடசாலைகளுக்கு கிடைக்கும் உதவிகள்,வாய்ப்புக்களை இந்தப் பாடசாலை பெற்றுக் கொள்வ திலும் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. நிரந்தர இடத்துக்கு மாற்றப்பட்ட பின்னரே கட்டடங்கள்,மேலதிக வளங்கள் வழங்குவது பற்றிச் சிந்திக்கலாம் என அரச அதிகாரிகள் தட்டிக்கழிக்கும் சந்தர்ப் பங்களும் தோன்றியுள்ளன.இதனால் இந்தப்பிரதேச மாணவர்களின் கல்வி பாதிப்படையும் சூழல் தோன்றியிருக்கின்றது. இதனைக் கல்வியியலாளர்களும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.பாடசாலைச் சூழலை இரா ணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் மூலமே இப்பகுதி மாணவர்களின் கல்வியை முன்னேற்ற முடியும். அத் துடன் முடக்கப்பட்டுள்ள பாதை, காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் இயல்பாகக் குடியேறி வாழமுடியும். தீருமா மக்கள் விருப்பம்?

திப்பிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறையும் உளத்தாக்கமும்



பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறையானது இன்றைய உலகில் அன்றாட அனுபவமாக உள்ளது. இப்பெண்கள் சமூகத்தின் மூலமோ குடும்பங்களின் மூலமோ வன்முறைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். பாலியல் பாலாத்காரம், துன்புறுத்தல்கள், சித்திரவதை, வீட்டு வன்முறைகள், சிறுமிகளின் மீதான துஷ்பிரயோகங்கள் எனப் பல்வேறு வகைகளில் இந்த வன்முறைகள் தோற்றுவிக்கப்படுகின்றபோது அச்சமும் மனவடுவும் பெண்களின் வாழ்நாள் முழுவதும் பிரதிபலிக்கின்றன. பெண்களை அச்சமூட்டும் நடவடிக்கைகளும் சமூகங்களில் தொடர்கின்றன.

வன்முறை சாதாரணமாகிவிட்ட இந்நாளிலே பொதுவான வன்முறைகளையும், பெண்ணுக்கெதிரான வன்முறைகளையும் எதிர்நோக்க வேண்டியவர்களாகப் பெண்கள் விளங்குகின்றனர். மனித சமூகம் தனது வளர்ச்சியின் பயனாக வேட்டையாடத் தொடங்கியபோதே வன்முறை தோன்றிவிட்டதென்பர்.

ஆரம்பத்தில் பெண்கள் ஆணின் சொத்துடைமை என்று கூறி மூதாதையர்கள் வன்முறையைத் திணிக்க ஆரம்பித்தனர். அந்த வகையில் பார்க்கும்போது குடும்ப வன்முறை, பாலியல் ரீதியான வன்முறை, இனந்தெரியாதவர்களால் ஏற்படும் கொலை அச்சுறுத்தல் என்ற பெயர்களைச் சூட்டி அவர்கள் மீது வன்முறைகள் திணிக்கப்பட்டன.

ஆண்கள், பெண்களை எவ்வாறு பார்க்கலாம் என்ற சமூகக் கருத்துநிலையே வீட்டுக்கு வெளியில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைக்குக் காரணமாகிறது. பெண்கள் செல்லும் வழியில் நின்றுகொண்டு பாலியல் சார்ந்த பேச்சுக்களைப் பேசுதல், வழிமறித்து நிற்றல், கேலிசெய்தல், போக்குவரத்துச் சாதனங்களில் நெருக்கடியைப் பயன்படுத்தி சாய்தல் , உரசுதல், தனிமையில் செல்லும்போது கையைப் பிடித்து இழுத்தல் போன்ற பல விடயங்களும் இதனால்தான் ஏற்படுகின்றன. பாலியல் வல்லுறவுகள் இடம்பெறுவதற்கு அடிப்படைக் காரணங்களும் இவைதான்.

எமது சமூக விழுமியங்களுக்கு ஏற்பவும் வரலாற்று ரீதியாகவும் பெண்கள் குடும்பத்திற்குரியவளாக, மதிக்கப்படுகின்றாள். ஆனால் மறுபுறத்தில் இன்றை பெண்கள் பொதுவாழ்விலும் முக்கிய இடத்தைப் பெற்றுவருவது பெருமையளிக்கின்றது. இது இவ்வாறிருந்தாலும் இன்றைய காலகட்டத்தில் பாலியல் வன்முறைக்கு உட்பட்ட பெண்களுடைய பிரச்சினை என்பது எமது பண்பாட்டு விழுமியங்களிற்கேற்ப தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்பு உடையதாகக் கொள்ளப்படுகிறது.

இது உண்மையில் ஆண்களின் பொது வாழ்வுக்குப் பங்கம் விளைவிக்கும் என்ற காரணத்தினாலேயே இத்தகைய கவனம் ஏற்படுகிறது. ஆண்பிள்ளைகளே தமது கடைசிக் காலத்திற்கு உதவியாக இருப்பார்கள் என்பதற்காக சமூகத்தினால் வகுக்கப்பட்டதுதான் இது. அதில் பெண்கள் குடும்பத்திற்குரியவர்கள், ஆண்கள் சமூகத்திற்குரியவர்கள் என்ற எதிரும் புதிருமான கருத்துக்கள் வெளிப்படுவதைக் காணலாம். வெளிவேலைகள், அரசியல், அதிகாரம், போராட்டம் இது பற்றிய சிந்தனை ஆண்களுக்கு உரியனவாகக் கருதப்படுகின்றபோது பெண்கள் வீட்டில் இருக்கவேண்டும் அவர்கள் என எதிர்பார்க்கின்றனர்.

இது குடும்பத்தில் மட்டுமல்ல சமயம், கல்வி என ஏனைய பல சமூகத்துடனும் தொடர்புடையது. பாடசாலைகளில், கோயில்களில், பல்கலைக்கழகங்களில் எனப் பெண்களுடைய பிரச்சினைகளைத் தனிப்பட்ட விடயமாக வரையறுத்து ஒதுக்கிவிடும் மனப்போக்குக் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தீர்வுகளைக் காண்பதில் பின்னடைவு ஏற்படுகிறது. இவ்வாறு தனிப்பட்ட விடயங்களாக வன்முறைகளை ஒதுக்கித் தள்ளுவது மிகவும் ஆபத்தானதொரு நிலமையாகும்.

உள ரீதியான துன்புறுத்தல்களையும் வன்முறைகளையும் நாம் கருத்தில் எடுப்பது அவசியமாகும். வெளியே தெரியாமல் நிகழும் இத்தகைய விடயங்கள் பெண்ணைக் குற்றுயிராக்கிவிடுகின்றன.

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான செயல்வாதம் என்ற அடிப்படையை 1992 இல் சர்வதேச ரீதியில் ஒன்றுகூடிய பெண்கள் அமைப்புக்கள் வன்முறைக்கு எதிரான போராட்டத்தில் அடையாள நாள்களாக நவம்பர் மாதப் பிற்பகுதியை முன்னெடுக்க வேண்டும் எனத்தீர்மானித்தன. இதற்காக மனித உரிமையின் முடிவுத் தினமாக டிசம்பர் 10 ஆம் திகதியைக் கொண்டு அதற்கு முந்திய 16 நாள்களும் இதனை வலியுறுத்தும் நாள்களாக அங்கீகரிக்கப்பட்டன. இந்த நாளில் இரு வன்செயல்கள் முக்கியமாக நினைவு கூரப்பட்டவையாக இருந்தன. மொன்றியலில் 14 பெண்களை ஒரு துப்பாக்கி மனிதன் சுட்டுக் கொள்ளப்பட்டமை, 1989 இல் ஈகொல் பொலிரேக்னிஸ் நிலையத்துள் நுழைந்த மார்க் லெனபன் என்பவர் 27 பெண்களை சுட்டுக் கொலைசெய்தமை ஆகியனவற்றில் இந்த நிகழ்வுகளில் பெண்கள் மட்டுமே கொல்லப்பட்டதால் இந்த நாள்கள் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைக்கு எதிரான முடிவுத்தினமாகக் கொள்ளப்படுகின்றன.

மனித உரிமைகள் பிரகடனமானது நிறம், மொழி, பால் வேறுபாடற்ற சமூகத்தை முன்நிறுத்தினாலும் பெண்களைப் பொறுத்தவரை அது செயற்படுத்தப் படவில்லை என்றே கூறவேண்டும்.

தூறல்

# பெண்களுக்கான முன்னேற்றப் பாதை

"பெண்கள் இயல்பாகவே மென்மையானவர்கள். எதையும் தாங்கும் சக்தி குறைந்தவர்கள்" என எரிக்சன் என்ற உளவியல் நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

இத்தகைய பெண்களது உளவியல் ரீதியான கருத்தை மாற்றி அமைக்கவேண்டியது நமது கடமையாகும்.

குடும்பப் பொறுப்புக்களுடன் கணவன், பிள்ளைகள், தாய், தந்தை, உறவினர், நண்பர்கள் என அனைவரையும் அன்பாகவும் ஆதரவாகவும் அரவணைத்து நல்வழிப்படுத்துபவள் பெண் தான்.

எமது சமூகப் பாரம்பரியங்களுக்கு ஏற்றவாறு கலாசாரங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் எதிர்காலச் சந்ததிகளைச் சிறந்ததாக அமைத்துக் கொடுப்பதிலும் பெண் முக்கிய பங்கு வகிக்கின்றாள்.

இவ்வகையான உறவுகள் சார்ந்த சமூகத்துடன் ஒன்றிணைந்த பொறுப்புக்களை உடைய பெண்கள் மாறிவருகின்ற உலகிற்கேற்ப தொழில்நுட்ப ரீதியாகத் தமக்குரிய அறி வினை வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

இது வறுமையின்கீழ் துன்பப்படுவோர், குடும்பத்தைப் பொறுப்பாகத் தலைமை தாங்குவோர், கல்விஅறிவு குறைந்தோர், அடக்குமுறைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்வோர், பாலியல் ரீதியாகத் தாக்கமடைவோர், திருமணமாகாதோர், வாழ்விழந்தோர் என இனங்கானப்பட்ட பெண்களுக்கு உறுதுணையாகவும் சிறந்ததொரு வாழ்வை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாகவும் அமையும் எனக் கருதலாம்.

எனவே சமூக மாற்றங்களுக்கு ஏற்ப தொழில் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், பெண்கள் முன்னேற்றத்திற்குத் தோள் கொடுக்கும் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரச நிறுவனங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்னின்று செயற்பட வேண்டியது அவசியமாகும்.

சமூகத்தினர் மட்டுமல்லாமல் உறவுகளும் அவர்களது திறன்களை விருத்திசெய்யப் போதுமான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும். இதனால் பாதிப்படைந்த பெண்களுக்கு மறுவாழ்வு கிடைப்பதோடு புதிய தொரு வழியான முன்னேற்றமும் மன அமைதியும் கிடைப் பதற்கு உறுதுணையாகும்.

# பெண்ணுரிமை



இலங்கையில் பெண்களுக்கான சர்வஜன வாக்குரிமைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் 1931ஆம் ஆண்டு வாக்குரிமைச் சட்டத்தில் பெண்களுக்கான கல்வி, தொழில் வாய்ப்புக்கள் என்பதற்கான உரிமைகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பெண்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடைய ஆரம்பித்தனர்.இதற்கு எடுத்துக் காட்டாக யாழ். மாவட்டத்தில் பெண்கள்தான் அதிகம் தலைமைப் பதவிகளை வகித்து வருகின்றனர்.




இவற்றிலும் வன்னி மாவட்டத்தில் பெண்கள் யுத்தக்கொடுமையால் கணவனை, தந்தையை, சகோதரர்களை இழந்தது மட்டுமல்லாமல் அங்கவீனப் பட்ட உறவுகளைப் பராமரிப்ப தற்கு எதுவித வசதிகளும் இல்லாமல் அவர்களுக்குத் தாயாக, மனைவியாக, சகோதரியாக மொத்தத்தில் சுமைதாங்கியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தனை மன வேதனைகளையும் தாங்கி வாழும்இவர்களுக்குப் பாலியல் பலாத்காரம் போன்ற கொடுமைகள் புதிதாகத் தோன்றியுள்ளன. அவற்றை மனதளவில் தாங்கி வாழ்ந்தாலும் வெளியில் சொல்ல முடியாமல் வீடுகளுக்குள்ளே அடைபட்டுக் கொண்டு இருக்கும் பெண்கள் தான் எத்தனை பேர்...

சர்வதேச மகளிர் தினம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறும் நோக்குடனும் எதிர்பார்ப்புக்களுடன் கொண்டாடப்படுகின்றது. ஆனால் அவை முற்றாக ஒழிந்ததாகத் தெரியவில்லை. அதுபல்வேறு சமூகத்தினராலும் பல வடிவங்களில் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவை சமூகத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என நாம் கூறுவதைவிட ஒவ்வொருவரின் உள ரீதியாகவும் மாற்றம் செய்யப்பட வேண்டியவைகளாகும்.

இதனால் பெண்கள்தான் தமக்கான உரிமைகளைப் பெறுவதற்கான நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதோடு அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வதால் தமது எதிர்காலம் அமைதியைக் காணும்.

க.நிஷா.

## வாழாவெட்டி




வாழ்க்கை தந்தவன்
சீர்குலைந்து போனதால் - தான்
நீ வாழாவெட்டி!
துணை நின்றவன்
துயர் கொடுத்ததால் - தான்
துவண்டு போனது
உனது வாழ்வு!
வாழ்விழந்தவள் என்பதற்காய்
இன்பங்களையும் இழக்க
வேண்டிய கட்டாயம் - உனக்கு
இதைப் புரிந்துகொள்ள
ஏது மனச்சாட்சி!
வேண்டும் உனக்கொரு
மறுவாழ்வு - இல்லையேல்
உனக்கேது இவ் வாழ்வு!

க.தரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் விவசாயம் வளர்ச்சியடைய கைகொடுத்த வெட்டுக்கழி நீர்த்தேக்கம்



நெடுந்தீவின் விவசாய நடவடிக்கைகளில் முக்கிய தேவையாக விளங்கிய தண்ணீரைச் சுற்றாடல்களுக்கு வழங்கி நெடுந்தீவு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது இங்குள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கமாகிய வெட்டுக்கழி.

பண்டைய மன்னர்கள் விசவாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆங்காங்கே குளங்களை வெட்டியது வரலாற்று உண்மை.

இந்த வகையில் சோழர் ஆட்சியின்போது 'குளக்கோட்டன்' என்ற மன்னன் இக்குளத்தை வெட்டியிருந்தான். இது இயற்கையாக உருவானதல்ல. வெட்டப்பட்டது என்பதாலேயே அதற்கு 'வெட்டுக்கழி' எனப் பெயர் சொல்லப்பட்டது.

1947 ஆம் ஆண்டில் நெடுந்தீவுக்கு வருகை தந்த கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த அமரர் பீட்டர் கெனமன், வரலாற்றுப் பட்டதாரியும் நாடாளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கியவர்.

இந்த வெட்டுக்கழி, மன்னன் குளக்கோட்டனால் வெட்டப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தவரும் இவர்தான்.

குளக்கோட்டனின் வருகை சாலி வாகன சகாப்தம் 358ஆம் வருடமாகும். அதாவது கி.பி. 436 ஆம் ஆண்டு.

கி.பி 1814 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதிகளில் நெடுந்தீவில் விவசாயம் மிகவும் களை கட்டியிருந்தது.

நெல், சிறுதானியப் பயிர்கள் என அதிகரித்த விளைச்சல்களுக்குக் காரணமாக இருந்ததில் இந்த நீர்த்தேக்கமும் ஒன்று.

இந்தப் பகுதியில் இருந்த வயல் நிலங்களை இன்றும் காணலாம்.

இயற்கையின் சீற்றத்தால் பின்னாளில் இந்த நீர்த்தேக்கம் உவராக மாற விவசாயமும் குன்றியது. உலகம் சுற்றும் பல்லினப் பறவைகள் மாரி காலங்களில் இங்கு வந்து நிற்கும் காட்சி நெடுந்தீவு மக்களை மட்டுமன்றி இங்குவரும் உல்லாசப் பயணிகளுக்கும் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தந்திருந்தது.

நாட்டில் நிலவிய அமைதியின்மை, துப்பாக்கி வேட்டுக்களின் சத்தங்கள் அதிகரித்த காலத்தில் உல்லாசப்பறவைகள் வருவது நின்று விட்டபோதும் இப்போது மீளவும் அவை வரத்தொடங்கியுள்ளன.

1965 - 1966 ஆம் ஆண்டுகளில் இந்த நீர்த்தேக்கத்தில் மீன், இறால் போன்றவை பெருமளவில் காணப்பட்டன.

நோளன் கால்வாயினால் கடலில் இருந்து மாரிகாலத்தில் இக்குளத்திற்கு மீன்கள், இறால் வகைகள் வருவதுண்டு. அப்போதெல்லாம் பெரும்பாலான மக்கள் இதில் மீன்பிடிப்பதுண்டு.

அன்று பாடசாலை மாணவர்களாக இருந்த இளைஞர்கள் விடுமுறை காலத்தில் கரப்புக்குத்தி மீன்களைப் பிடிப்பதும் தடம் வைத்து தாராக்களைப் பிடிப்தையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தார்கள்.

இன்று அவற்றைக்கான வாய்ப்புக்களே இல்லை.

வெட்டுக்கழியை அகழப்படுத்தி விவசாயம், மீன்பிடித்துறைகளை வளர்க்கவேண்டும் என்ற திட்டம் 1954 இல் அப்போதைய கிராம சபையினால் முன்வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.தம்பிஐயாவிடம் இது குறித்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் 2004 ஆம் ஆண்டில் செயற்படக்கூடிய அறிகுறிகள் காணப்பட்டது.

ஆனால் இடம்பெறவில்லை. தற்போது சுமார் 2 மைல்கள் சுற்றளவு கொண்ட இக்குளத்தை நன்னீராக்கி மீண்டும் விவசாயம், நன்னீர் மீன் வளர்ப்புக்கான நடைமுறைகளை முன்னெடுக்கக் கூடியதாகவும் மழை நீரைச் சேமிக்கக் கூடியதாகவும் பாரிய அணைக்கட்டுக்கள் போடப்பட்டுள்ளன.

இதனை ஆழமாக்க 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் ஆழப்படுத்துவதால் மேலே காணப்படும் நன்னீரும் உவர் நீராகிவிடும் என்ப தால் சுற்றிவர அணைகட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடும் சூறாவளி, கடல் கொந்தளிப்பினால் நோளன் கால்வாயூடாக உட்புகுந்த கடல் நீரே இந்தக்குளம் உவராகக் காரணமாக இருந்தது.

இப்போது அணை போடப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் நன்னீராக மாறி மீண்டும் விசவாயம் தளைக்கலாம் என்ற நம்பிக்கை மக்களிடம் துளிர்விடுவதைக் காணமுடிகின்றது.






# ஊர்காவற்றுறைத் துறைமுகம் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும்

(கடந்தவார தொடர்ச்சி)

ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற்கு அண்மித்ததாக இயங்கிய நீதிமன்றம் பொலிஸ் நிலையம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன இருந்த இடங்கள் இப்போது காடாகக் காட்சியளிக்கின்றன. சரஸ்வதி சைவ உணவகம், ராமு உணவகம் என்பன துறைமுகப் பகுதியில் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இரவு 10 -11 மணிவரை திறந்திருக்கும். சரஸ்வதி உணவகத்தில் ஒரு முதியவர் இருப்பார் சிறுபையன் போனாலும் அண்ணா என்ன சாப்பிடப் போகிறீர்கள் என்பார். ஒரு தடவை பத்து பதினைந்து வயதிருக்கும் சிறுபையன் கடைக்கு வந்த சமயம் அப்பெரியவர் அவனிடமும் அண்ணா என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்றார்.

அவன் கொஞ்சம் துடிப்பான பொடியன் போல '' தம்பி எனக்கு ஒரு ஆறு இடியப்பம் வையேன்'' என்றான்.

அன்றைக்குப் பிறகு அவரிடத்தில் இருந்து அண்ணை என்ற சொல் வந்ததாக இல்லை. இது போன்ற நகைச்சுவைகளையும் அன்று ஊர்தாவற்றுறை துறைமுகத்தில் கேட்கமுடியும்.

முன்பெல்லாம் இந்தத் துறைமுகம் சுறுசுறுப்பாக இருந்தது. நகரத்திற்குப் பெருமையும் வருமானமும் தந்த துறைமுகமாக இது இருந்தது என்கிறார் ஓய்வு பெற்ற ஆசிரியர் லீனஸ்.

ஒரு கொத்து அரிசி 10 சதம், முட்டை ஒன்று ஒரு சதம் என்றெல்லாம் முதியவர்கள் தங்கள் காலத்தை நினைவு கூர்வதுண்டு. இன்று ஊர்காவற்றுறை-காரை நகருக்கிடையேயான பாதைச் சேவை மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறுகிறது. இந்தத் துறைமுகங்களுக்கிடையில் பத்துப் பதினைந்து பேர் செல்லக் கூடிய மச்சிவாய் எனப்படும் [illegible] கரையில்இருந்து மறு கரைக்குப் பயணிக்கக் கட்டணம் 5 சதம் மட்டுமே. தனியொருவர் வாடகைக்கு அமர்த்தினால் அதற்கான கட்டணம் 50 சதம் மட்டுமே. அப்போது பொது வேலைகள் திணைக்களம் இந்த பாதைச் சேவைக்கான ஆயக் கட்டணமாக 2 சதம் மட்டுமே ஒருவரிடம் அறவிட்டது.

மோட்டார் வண்டிகளுக்கு 20 சதமும் துவிச்சக்கரவண்டிக்கு 6 சதமும் இந்தக் கட்டணமாக அறவிடப்பட்டது. எமது முன்னோர்கள் ஒரு சதத்திற்கு முட்டை வாங்கிய காலத்தை நினைவு கூர்ந்தார்கள். நாங்கள் ஐந்து சதக் கட்டணத்தை நினைவு கூருகிறோம் என்றார் மற்றொரு முதியவர் .

தீவுப்பகுதியில் இடம் பெற்ற அசாதாரண சூழல் காரணமாக அனைத்துத் துறைமுகங்களும் வாடித்தான் கிடக்கிறது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அனைத்துச் செயற்பாடுகளுமே ஸ்தம்பிதமடைந்து விட்டன. 1996 - 1997 வரை அலுவலக ஊழியர்களின் வசதிக்காக ஊர்காவற்றுறை- காரைநகர்த் துறைமுகங்களுக்கிடையில் குறிப்பிட்ட நேரத்தில் கடற்படையினர் இரண்டு சேவைகளை நடத்தி வந்தனர். தற்சமயம் இந்தத் துறைமுகத்திற்குப் பதிலாக கண்ணகி அம்மன் கோயிலடித்துறைமுகம் பயன்படுத்தப்படுகிறது.

இது ஏற்கனவே கடற்றொழிலாளர்கள் தமது தேவைக்காகப் பயன்படுத்திய இடம். இங்கே பயணிகளுக்கு உரிய வசதிகள் இல்லை. மீண்டும் ஊர்காவற்றுறைத் துறைமுகம் முன்னைய நிலையை எட்ட வேண்டும். அப்போதுதான் எந்தப் பகுதிக்கும் குறைவில்லாமல் ஈடுகொடுக்கக்கூடிய பிரதேசமாக வளர்ச்சியை நோக்கி நகரும் நகராக ஊர்காவற்றுறை மாறும். இது ஊர்காவற்றுறை மக்களின் கருத்து மட்டுமன்றித் தீவுப்பகுதி வாழ் மக்கள் [illegible] கருத்தாகவும் உள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலயத்தில் இடம்பெற்ற மாற்று ஆற்றலுடையோர் போட்டி முடிவு

யாழப்பாணம், டிசெ 15

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட உலக மாற்று ஆற்றலுள்ளோர் தினப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு -

**பேச்சு:** பிரிவு 1- ஜெ.லோகேஸ்வரி (இராமநாதன் கல்லூரி), செ.சிவபாலன் (அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை), கு.சருஜன்( சங்குவேலி அ.த.க பாடசாலை).

பிரிவு 2- க.பிரகான்(யூனியன் கல்லூரி), சி.அனந்தி (இராமநாதன் கல்லூரி), ம.சாளினி (நவாலி அட்டகிரி சைவ வித்தி).

பிரிவு 3 -வி.ஸ்ரீசுபாங்கி (வட்டு மத்திய கல்லூரி), க.ஜனனி (இராமநாதன் கல்லூரி), கை.சுரேன் ( வட்டு இந்துக் கல்லூரி).

பிரிவு 4- வி.ஸ்ரீமாதங்கி ( வட்டு இந்துக் கல்லூரி) க.ஜீவானந்தன் ( மானிப்பாய் மெமோறியல் பாடசாலை), வி.சிவதர்சிகா ( மகாஜனக் கல்லூரி)

**கட்டுரை:** பிரிவு- 1 தி.சதுர்சனா ( இளவாலை மெய்கண்டான் ம.வி), சி.சுதச்செல்வன் ( மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை), கு.தணிகன் (அராலி முருகமூர்த்தி வித்தி).

பிரிவு 2- வி.கயன்சிகா ( ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி) சு.சகானா (மகாஜனக் கல்லூரி), ப.மிதுஜா ( நவாலி அட்டகிரி சைவ வித்தி).

பிரிவு 3- தே.நிறோஜினி, பு.கஜரூபி (இளவாலை மெய்கண்டான் ம.வி), மா.தர்சயா ( வட்டு.இந்துக் கல்லூரி)

பிரிவு 4- சொ. தருமதன் (யூனியன் கல்லூரி) , ர.மரிஸ்ரலா (இராமநாதன் கல்லூரி), நா.மேரிநிலாசா (மகாஜனக் கல்லூரி)

**தனியிசை:** பிரிவு 1- தி.சுகந்தினி ( வட்டு மத்திய கல்லூரி), ஜெ.இராஜ்குமார் ( இராமநாதன் கல்லூரி), க.மதுசா ( அளவெட்டி சதானந்த வித்தி)

பிரிவு 2- த.அமலநிதுசன் (யூனியன் கல்லூரி), ப.பிரியங்கன் (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), சி.டனுசன் ( வட்டு மத்திய கல்லூரி)

பிரிவு 3- ப.சுகன்யா ( ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் ம.வி), க.செல்வவதி (இராமநாதன் கல்லூரி), பா.டெசிந்தா (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி).

பிரிவு 4- ஜெ.தேவரூபி ( இராமநாதன் கல்லூரி), வி.வினுகா (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), சி.நிஸாயினி (வட்டு மத்திய கல்லூரி).

**குழு இசை:** பிரிவு 1- இராமநாதன் கல்லூரி (முதலாமிடம்), தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி (2ஆம் இடம்), ஏழாலை [illegible] ( 3ஆம் இடம்).

பிரிவு 2- யூனியன் கல்லூரி (முதலாம் இடம்), இளவாலை கன்னி யர் மடம் ம.வி (2ஆம் இடம்), இராமநாதன் கல்லூரி (3ஆம் இடம்).

பிரிவு 3- வட்டு இந்துக் கல்லூரி ( முதலாம் இடம்), ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி ( 2 ஆம்இடம்), சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (3ஆம் இடம்).

பிரிவு 4- இராமநாதன் கல்லூரி (முதலாம் இடம்).

**தனிநடனம்:** பிரிவு 1- க.மயூரா (இராமநாதன் கல்லூரி), க.கஸ்தூரி (சில்லாலை றோ.க.த.க பாடசாலை), கோ.டிலக்சனா (உயரப்புலம் குணபாலன் வித்தி).

பிரிவு 2- கி.சிந்துஜா ( இளவாலை கன்னியர் மடம் ம.வி), ச.கௌசிகா (இணுவில் மத்திய கல்லூரி), ச.சிந்துஜா ( சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

பிரிவு 3- ந.உசேனி ( இராமநாதன் கல்லூரி),க.யசோதா (இளவாலை கன்னியர் மடம் ம.வி), ச.அபர்ணா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

பிரிவு 4- தி.சுஜித்தா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), அ.ஜெஜீபா (இளவாலை மெய்கண்டான் ம.வி).

**குழு நடனம்:** பிரிவு 1- இளவாலை மெய்கண்டான் ம.வி ( முதலாமிடம்), இளவாலை கன்னியர் மடம் ம.வி (இரண்டாமிடம்).

பிரிவு 2- இளவாலை கன்னியர் மடம் ம.வி (முதலாமிடம்), இளவாலை மெய்கண்டான் ம.வி (2ஆம் இடம்), சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (3ஆம் இடம்).

பிரிவு 3- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (முதலாமிடம்), கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ( 2ம் இடம்).

பிரிவு 4- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (முதலாமிடம்).

**நாடகம்:** இளவாலை மெய்கண்டான் ம.வி (முதலாமிடம்), வட்டு இந்துக் கல்லூரி (2ஆம்இடம்), இணுவில் மத்திய கல்லூரி (3ஆம் இடம்).

**வில்லுப்பாட்டு:** யூனியன் கல்லூரி (முதலாமிடம்). (201-38-86)

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம்
## நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு
### தேசியநீர் விநியோக வடிகாலமைப்புச் சபை, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (N)
## கேள்வி கோரல்

வவுனியா-மன்னார் வீதி, பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (N)தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை பிராந்திய கொள்வனவுக்கமிட்டி தலைவரால் கீழே குறிப்பிடப்படும் ஒப்பந்தங்களுக்காக 28.12.2010ஆம் திகதி பி.ப.2 இற்கு முன் கேள்விகள்கோரப்படுகின்றன.

| விபரம் | தகைமை | கேள்விப் பிணை (LKR) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (LKR) | வழங்கும் காலம் | மூடப்படும்/ திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| வேலணை நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர்உள் வாங்கும் கிணறு நீர் பம்பு நிலையம்மற்றும் நீர்பம்பி வழங்கலும் பொருத்துதலும் | ICTAD யில் பதியப்பட்ட C8(M7) ஒப்பந்தகாரர்கள் | 28,000.00 | 1000/=+ 12% VAT | 27.12.2010 பி.பகல் 3மணி வரை | 28.12.2010 பி.பகல் 2 மணி |
| மண்டைதீவு நீர்வழங்கல் திட்டத்திற்கான நீர்உள்வாங்கும் கிணறு நீர் பம்பு நிலையம் மற்றும் நீர் பம்பி வழங்கலும் பொருத்துதலும். | ICTAD யில் பதியப்பட்ட C8(M7) ஒப்பந்தகாரர்கள் | 28,000.00 | 1000/=+ 12% VAT | 27.12.2010 பி.பகல் 3 மணி வரை | 28.12.2010 பி.பகல் 2 மணி |

கேள்வி ஆவணங்களை பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்தில் (N) அல்லது யாழ் பிராந்திய காரியாலயம் கண்டி வீதி யாழ்ப்பாணம் மு.ப.9.00 நண்பகல் 12.00 பி.ப 1.00 - பி.ப 3.00 வரை 16.12.2010 இருந்து 27.12.2010 வரை சாதாரண வேலை நாள்களில் பரீட்சித்துப் பெறலாம். வியாபாரக் கடிதத் தலைப்பிலான ஆவணங்களைக் கோரும் கடிதத்தை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெறலாம்.

கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம். கேள்விகள் மூடப்பட்டவுடன் உடனடியாக பி.ஓ.நி (N) அலுவலகத்தில் 28.12.2010 பி.ப. 2.00இற்குத் திறக்கப்படும். சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது நேரில் வவுனியா மன்னார் வீதி பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (N) தேசிய நீர்விநியோக வடிகாலமைப்புச் சபை பிராந்திய கொள்வனவுக் கமிட்டித் தலைவரிடம் ஒப்படைக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு கேள்விதாரர் பிரதிப் பொது முகாமையாளரை (N) 024 222 2161 மற்றும் பக்ஸ் 0242225088 அல்லது யாழ் பிராந்திய முகாமையாளர் 021 222 8962 மற்றும் பக்ஸ் 21 222 7965 இலும் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
பிராந்திய கொள்வனவுக் கமிட்டி,
பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு),
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.
(சி/573513)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 16.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.)

**நல்லூர் பாம் சென்ரர்.**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,
யாழ்ப்பாணம். 021 222 6944

## கிருஷ்ணா அடகு சேவை

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி (31.10.2009) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2011) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தை பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக்கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.01.2011 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021222 5046 (சி/573959) உரிமையாளர்.



## கனடா குடிவரவு ஆலோசனைக் கருத்தரங்கு

கருத்தரங்கினை நடத்துவதற்கு கனடிய குடிவரவு ஆலோசகர் மைக்கல் கூச்சர் யாழ்ப்பாணம் வருகிறார்.

காலம்: 18.12.2010 சனிக்கிழமை
இடம்: புளூ ஹெவென், 70, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
நேரம்: மு.ப.10 மணி

மேலதிக விவரங்களுக்கு: திரு.போகா
வியாபார முகாமைத்துவ ஆலோசகர்கள்,
34, சட்டநாதர் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.
021 222 9757, 0775934168.
(107368)

## உங்கள் நகரில் JAFFNA

**STUDY @ UK**

18-12-2010
HOTEL LOVUSI
(Hospital Junction Jaffna - Near BOC)
காலை 9.00 மணி முதல் ....
SPOT ADMISSION

2011 மார்ச் மாதம் அமுலாகவுள்ள UK மாணவர் வீசா புதிய சட்ட அமுலாக்கலுக்கு முன்னர் உங்கள் வீசாவினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.....

அடிப்படைத்தகைமை GCE (O/L)
IELTS - தேவையில்லை
சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை
நம்பகரமான Sponsorship

முற்பதிவுகளுக்கு.....
0777113777

100% VISA GUARANTEED

IBt INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD
No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka. | Branch: Kalmunai
E-mail: info@ibtedu.lk | Web : www.ibtedu.lk

*We raise the limits to your Success.....*

## துயர் பகிர்கின்றோம்



ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை குடும்ப நலச்சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும்

தா.செந்தாதேவி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தாமோதரம்பிள்ளை சின்னப்பிள்ளை**

அவர்கள்13.12.2010 (திங்கட்கிழமை) காலமான செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரியும்
உத்தியோகத்தர்களும்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை.
(107364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலுக்குச் சென்ற மீனவர் மாயம் உடன் சென்ற நால்வர் கைது

திருகோணமலை, டிசெ.15

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஒருவர் காணாமல் போயுள்ளார். இது தொடர்பாகத் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த எட்டாம் திகதி திருகோணமலை மீன்பிடித்துறை முகத்திலிருந்து மீன்பிடிப்பதற்காக 5 மீனவர்கள் படகு ஒன்றில் சென்றுள்ளனர்.

இவர்களில் தாங்கள் நால்வரும் நித்திரை செய்திருந்த வேளையில் ஒருவர் படகைச் செலுத்தினார் என்றும், தாங்கள் வெள்ளிக்கிழமை கண்விழித்த போது செலுத்துபவர் இன்றி படகு மிதந்து கொண்டிருந்தது என்றும் இம்மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

படகைச் செலுத்தியவருக்கு என்ன நடந்தது என்று தங்களுக்குத் தெரியாது என்றும், தாங்கள் உடனடியாக கரை திரும்பி விட்டனர் என்றும் அவர்கள் துறைமுகப் பொலிஸில் கடந்த சனிக்கிழமை காலை முறைப்பாடு செய்திருந்தனர்.

இவ்விடயத்தில் சந்தேகம் கொண்ட பொலிஸார் மேற்படி நால்வரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகிறது. (ஸி)




# சந்திவெளி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கல்முனை, டிசெ.15

மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்திவெளியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏறாவூரிலிருந்து ஓட்டமாவடியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவ்விளைஞர் சந்திவெளியில் கனரக வாகனமொன்றுடன் மோதுண்டு படுகாயங்களுடன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மஹாத் பர்ஹான் (வயது 24) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார். (ஸி)

# முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்கு ஏற்பாடு

மட்டக்களப்பு, டிசெ.15

புலிகள் இயக்கத்திலிருந்து சரணடைந்த முன்னாள் போராளிகளை மீள்குடியேற்றவும், ஒன்றிணைக்கவும் புனர்வாழ்வு ஆணையாளர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவரு கின்றது.

இது தொடர்பாக சமய, சமூக தலைவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு டேபா மண்டபத்தில் ஆரம்பமானது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க இதற்குத் தலைமை வகித்தார். (ஸி)

# சாம்பல்தீவில் கொள்ளை: மக்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை

திருகோணமலை, டிசெ. 15

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பல் தீவிலும், சல்லிக் கிராமத்திலும் இம்மாத ஆரம்பத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களையடுத்து, அவதானமாக இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி சல்லிக் கிராமத்திற்கு விஜயம் செய்த பொலிஸ் குழுவினர் பொது மக்கள் மத்தியில் இவ் அறிவித்தலை விடுத்தனர்.

அண்மையில் சல்லியம்மன் ஆலய உண்டியலை உடைத்து பணம் கொள்ளை யிடப்பட்டுள்ளது. சாம்பல் தீவு பாலத்தடியில் இரவு நேரத்தில் பெண்ணொருவரின் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் உட்பட பல பிரச்சினைகள் தொடர்பாக பொலிஸாரிடம் பொதுமக்கள் முறையிட்டனர். இதையடுத்து, கடந்த 7ஆம் திகதி சல்லிக் கிராமத்திற்கு இப்பொலிஸ் குழுவினர் வருகை புரிந்தனர்.

அங்கு சல்லியம்மன் ஆலய மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் இக்குழுவினர் கலந்துகொண்டனர். அச்சமயம் பொலிஸா ரும், உயரதிகாரிகளும் இவ்வறிவித்தலை விடுத்தனர். (ஸி)

# கோமாரியில் புதையல் அகழ்ந்த ஐவர் கைது

பொத்துவில் தொகுதியின் கோமாரி காட்டுப் பகுதியில் புதையலொன்றை அகழ்ந்து கொண்டிருந்த 5 சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பொத்துவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்படும் போது சந்தேக நபர்களிடமிருந்து ஓட்டோ ஒன்றும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களைப் பொத்துவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஸி)

# கல்முனையில் குடும்பஸ்தர் தீ மூட்டித் தற்கொலை

கல்முனை, கடற்கரை வீதி, ஐஸ் தொழிற்சாலைக்கு அருகாமையில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத் தில் வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சந்திரகுமார் என்னும் 29 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இந்நபர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸி)

# சர்வதேச தேயிலை தினத்தை ஐ.நா. அங்கீகரிக்கவேண்டும்

## பிரிடோ நிறுவனம் வலியுறுத்து

நுவரெலியா, டிசெ.15

உத்தியோகப்பற்றற்ற முறையில் கொண்டாடப்பட்டு வரும் சர்வதேச தேயிலைத் தினம் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தினமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். இதற்காகக் குரல் கொடுத்துவரும் அமைப்புகளுடன் நாமும் எமது சமூகப் பிரதிநிதிகளும் இணைந்து செற்படவேண்டும் - என சர்வதேச தேயிலைத் தினம் தொடர்பாக பிரிடோ நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இந்தியா உள்ளிட்ட தேயிலை உற்பத்தி நாடுகளில் இன்று சர்வதேச தேயிலைத் தினம் கொண்டாடப்படுகின்றது.

2005 டிசெம்பர் 15 ஆம்திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் முதல்முதலில் பிரகடனம் செய்யப்பட்ட இத்தினம் இலங்கையில் பெருந்தோட்ட மக்கள் செறிந்து வாழும் நகரங்களில் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. இம்முறை நுவரெலியாவில் கொண்டாடப்படுகின்றது.

தேயிலைத் தினத்தின் பொதுவான தொனிப் பொருள் "வாழ்வதற்கான சம்பளம்" என இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் அக்காலப் பகுதியில் முக்கியத்துவம் பெறும் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது.

விரைவில் பிரதேசசபைத் தேர்தல்கள் வட்டார அடிப்படையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதால் அந்த விடயம் குறித்து மக்களினதும், பெருந்தோட்டத் தலைவர்களினதும் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகின்றது. இந்தப் பின்னனியில் தோட்டக் குடியிருப்புக்களை கிராமங்களாகப் பிரகடனப்படுத்துவது அவசியமானது என்ற கோரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

ஏற்கனவே பிரதேசசபைச் சட்டத்தின் 33 ஆம் சரத்து பெருந்தோட்டங்களுக்கு பிரதேச சபையின் சேவைகள் சென்றடைவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே, அச்சரத்து நீக்கப்பட வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரதேச சபையின் சேவைகள் பெருந்தோட்ட மக்களுக்கு தொடர்ந்தும் கிடைக்காமலே போகும்.

தோட்டங்கள் கிராமங்களாகப் பிரகடனப் படுத்தப்படும் பட்சத்தில் மேற்படி சரத்தினால் ஏற்படும் பாதிப்பு நீக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதுமாத்திர மின்றி பெருந்தோட்ட மக்கள் தேசிய நீரோட்டத்தில் முழுமையாக இணைவதற்கு தோட்ட குடியிருப்புக்கள் கிராமங்களாக பிரகடனப் படுத்தப்படுவது முக்கியம்.

இதேவேளை, தோட்டப் பகுதிகள் உட்பட்ட பிரதேசங்களை வட்டாரங்களாக பிரிக்கும்போது தோட்ட மக்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படாத முறையில் அந்த எல்லைகள் நிர்ணயம் செய்யப்படுவதில் மலையகச் சமூகம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை ஆணைக்குழுவும் அரசியல் பொருளாதார கலாசார ஆணைக்குழுவும் தமது ஐந்து ஆண்டுகளுக்கான பரிந்துரையில் பெருந்தோட்ட மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என அரசுக்கு பரிந்துரைத்திருக்கின்றன.

எனவே, சர்வதேச தேயிலை தினம் கொண்டாடப்படுவது அத்தினத்தின் முக்கியத்துவத்தை மேலும் மெருகூட்டுவதாக அமைய வேண்டும். - இவ்வாறு பிரிடோ தெரிவித்துள்ளது. (ஸி)

# நாட்டை கட்டியெழுப்பும் பணியில் கல்வி அபிவிருத்தியே மிக முக்கியம்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கண்டி,டிசெ. 15

அரசியல் சுலோகங்களை புறமொதுக்கி விட்டு பாடசாலைக் கல்வியை அபிவிருத்தி செய்வதே நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய பணிக்குப் பங்களிப்புச் செய்யும் - என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அண்மையில் மாவனல்லை மயுராபதி தேசியப் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

தனி மனிதனதும், நாட்டினதும் அபிவிருத்திக்கு பாடசாலைக் கல்வி அபிவிருத்தியடைய வேண்டியது அவசியமாகும். 1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் நாட்டில் இலவசக் கல்வி மற்றும் சுயபாஷைக் கல்வி என்பவற்றை அர்த்தமுள்ளவையாக்க வழி செய்தது. இதனால், பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்தும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது.




1970 இற்குப் பின்பு பெறுமதியான மனித உயிர்களை நாடு இழந்துள்ளது. அரசியல் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வ தற்கு ஆயுதங்களில் நம்பிக்கை வைத்தமை நாட்டில் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. அது மூன்று தசாப்த இழப்புகளை மட்டுமே விட்டுச் சென்றுள்ளது.

நாட்டில் சமாதானம் தொலைந்திருந்த காலம் மறைந்து அச்சமும் பீதியுமற்ற காலத்தில் வாழ்கின்றோம்.

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளை விருப்பத்திற்குரிய பாடசாலைகள் எனவும், விருப்பமற்ற பாடசாலைகள் எனவும் நோக்குகின்றோம். இந்த மனப்பாங்கு தவறானதாகும்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களை வளம் நிறைந்த பாடசாலைக்கு செல்லும் வாய்ப்பை பெற்றுக்கொடுத்துள்ளது.

நாடெங்கும் நூறு மாணவர்களை விட குறைந்த எண்ணிக்கை கொண்ட சுமார் 300 பாடசாலைகள் உண்டு. இப்பாடசாலைகளையும் கட்டியெழுப்ப வேண்டும். ஒருபாடசாலையை கட்டியெழுப்புவதன் மூலம்சமூக மொன்றைக் கட்டியெழுப்பும் பணிக்கு கைகொடுக்க முடியும்.

பாடசாலைகளைக் கட்டியெழுப்ப நிர்வாக மற்றும் முகாமைத் திறனுடைய அதிபர், அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கக் கூடிய பழைய மாணவர்கள் அவசியம் - இவ்வாறு அமைச்சர் பந்துல தெரிவித்தார். (ஸி)

# தொழிலாளருக்கு நன்மை தராத வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம்

தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதுடன் அடிப்ப டைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளவும், அவர்களின் சமூக பொருளாதார நிலைமை களை உயர்த்தவும் என பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் 1993 ஆம் ஆண்டு தோட்டங்கள் தோறும் ஆரம்பிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தால் எதுவித நன் மையும் கிடைக்கவில்லை என விசனிக்கப் படுகிறது.

விவசாய உற்பத்திகளை மேம்படுத்தல், கூட்டுறவுச்சங்க பொதுச்சந்தை, வீடமைப்பு வேலைத் திட்டம், கைத்தொழில் வேலைத் திட்டம், சுயதொழிலுக்கான கடன் திட்டம், இலவச சுகாதார வசதிகள், விளையாட்டு, அபிவிருத்தி, சமயகலாசார நிகழ்ச்சிகள், கூட்டுறவுச்சங்க மகளிர் அபிவிருத்தி, கூட்டுறவுச் சங்க கமிட்டி, தொழில் நுட்பப் பயிற்சி போன்ற சமூக வேலைத்திட்டங்கள் இதனூடாகப் பெற்றுக் கொடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. எனினும் இதன்மூலம் தமக்கு எதுவித நன்மையும் இல்லை என தோட்டத் தொழி லாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தோட்டங்களில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் இயங்கி வருவதுடன், கூட்டுறவுச் சங்கக் கடைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் [illegible] களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள் [illegible] பெரும் தட்டுப் பாடு நிலவி வருகின்றது எனத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஸி)

# பண்டாரவளைக்கு விசேட ரயில்சேவை

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பண்டாரவளை வரையான கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில்சேவை எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் நடைபெறும்.

இது கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து காலை 8.45 மணிக்கு பயணத்தை ஆரம் பிக்கிறது. பின்னர் பண்டாரவளை யில் இருந்து மாலை 6.40 மணிக்கு கொழும்பு நோக்கிய பயணத்தை அது மேற்கொள்ளும். இந்த ரயில் கம்பளை மற்றும் நானுஓயா ஆகிய ரயில் நிலையங்களில் மாத்திரமே நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைக்கிற கழுதையே உழைக்கும்

(நேற்றைய தொடர்ச்சி)

கட்டியிருந்த கழுதையை அவிழ்த்துக்கொண்டிருந்த திருடன் சீடர்கள் வரும் சத்தம் கேட்டதால் அவசர அவசரமாக கழுதையைத் துரத்திவிட்டு தான் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தான். வெளியே வந்து பார்த்த சீடர்களுக்கு வியப்பும் அதிர்ச்சியுமாக இருந்தது.

இதென்ன? ''கழுதை இருந்த இடத்தில், மனிதன் இருக்கிறானே!' என்றான் மூடன்.

ஒருவேளை இது மாயமந்திரம் தெரிந்த கழுதையாக இருக்குமோ! எனச் சந்தேகப்பட்டான் மண்டு.

அதற்குள் பரமார்த்தரும் வந்து சேர்ந்தார். உன்னைக் கழுதையாகத்தானே வாங்கி வந்தோம். நீ எப்படி மனிதமாக மாறினாய்? என்று கேட்டான் முட்டாள்.

நான் முதலில் மனிதனாகத்தான் இருந்தேன். ஒரு முனிவரின் கோபத்துக்கு ஆளாகி விட்டேன். அவர்தான் என்னைக் கழுதையாகப் போகும்படி சாபம் இட்டார். இப்போது சாபம் நீங்கி விட்டதால் மறுபடியும் மனிதனாக மாறி விட்டேன்! என்று புளுகினான், திருடன்.

திருடனின் பொய்யைப் புரிந்து கொள்ளாத பரமார்த்தர், மனிதனைக் கழுதையாக மாற்றியதால் தப்பித்தோம். அதே முனிவர் சிங்கத்தையோ, புலியையோ கழுதையாக மாற்றியிருந்தால் இந்நேரம் நம்மையெல்லாம் சாப்பிட்டிருக்கும். நல்லகாலம்! தப்பித்தோம்! என்று மகிழ்ந்தார்.

சீடர்களும், விட்டது தொல்லை, என்று மகிழ்ந்தனர்.

கழுதை இல்லாமலேயே ஜமீன்தார் வீட்டில் வேலைக்குச் சேர்ந்த சீடர்கள், துணிகளை மூட்டை கட்டி, பாசி பிடித்த ஒரு குட்டைக்கு எடுத்துச் சென்றார்கள்.

வெள்ளை வெளீர் என்று இருக்க வேண்டும் என்பது ஜமீன்தாரின் கட்டளை என்று சொல்லியபடி, வெவ்வேறு நிறங்களில் இருந்த துணிகளைக் கல்லில் தேய்த்துக் கிழித்தான், மட்டி.

வெள்ளையாக இருந்த வேட்டியில் பாசியை தோய்த்துப் பச்சை நிறமாக மாற்றினான் மடையன்.

ஒரே துணியாக இருந்ததைக் கசக்கிப் பிழிந்து முறுக்கி, பல துண்டுகளாக ஆக்கினார்கள், முட்டாளும் மூடனும்.

அப்பாடா! ஒரு வழியாக நன்றாக வெளுத்துக் கட்டி விட்டோம்! என்று மகிழ்ந்தபடி ஜமீன்தார் வீட்டுக்குப் புறப்பட்டனர்.




நீங்கள் ஒரு துணி போட்டீர்கள். நான் அதையே பத்தாக்கிக் கொண்டு வந்திருக்கிறேன்! என்று பெருமிதம் அடித்துக் கொண்டான், முட் டாள்!

வெள்ளையைப் பச்சையாக்கி விட்டேன்! என்று குதித் தான் மடையன்.

சீடர்கள் கொண்டு வந்த துணிகளைப் பிரித்துப் பார்த்த ஜமீன்தாருக்கு மயக்கமே வந்து விடும் போலிருந்தது.

அடப்பாவிகளா! முழுசாய் இருந்ததை எல்லாம் கிழித்துக் கோவணத் துணிகளாய் ஆக்கி விட்டீர்களே; புத்தி கெட்டவர்களை நம்பி இந்தக் காரியத்தைச் செய்யச் சொன்னேனே! என்று புலம்பியபடி சீடர்களை விரட்டி அடித்தார்.

உம்... நம் தொழில் திறமையை யாருமே புரிந்து கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறதே! என்று வருத்தப்பட்டபடி மடத்துக்கே திரும்பினார்கள் ஐந்து சீடர்களும்.

(முற்றும்)

# விட்டில் பூச்சி



அந்தி சாயும் வேளையிலே
அமைதிமாய்க்கும் நோக்கத்திலே
வந்து வந்து விட்டில்பூச்சி
தன்னிசை பாடும்

இரவு வரும் வேளையிலே
அழகு சட்டையிலே
வரவு நோக்கும் கண்போலே
வண்ண ஒட்டைகளை நீட்டும்

தூக்கம் கொள்ளும் நம்மேலே
துள்ளித்துள்ளி ஓடும்
பக்கம்வந்து தன்கால் முள்கொண்டு
முத்தமொன்று பதிக்கும்

சட்டிபானை அனைத்திலும் சென்று
உணவுசுவை பார்க்கும்
பெட்டியுள்ளே இருக்கும் பொருள்
அனைத்தும் கெடுக்கும்

தீ கண்டு மகிழ்ச்சியிலே
துள்ளித்துள்ளி குதிக்கும்
தீயின் பசிக்கு இரையாக
தன்னையே கொடுக்கும்.

க.இலக்கியா.

# சிந்தனைத் துளிகள்...

சிறுவர் சுடர்

* தாங்கள் சரியான பாதையில் இருக்கிறோம் என்று நம்புகிறவர்கள் பொதுவாக எதையாவது சாதிக்கவே செய்கிறார்கள்.
* உன்னால் முடிந்த வரையில் உன் பணியை இன்று நன்றாகச் செய்; நாளை அதை விட நன்றாகச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும்.
* ஒருவருடைய நடத்தையை வைத்து, அவரை எடைபோட வேண்டுமே தவிர, அவர் செய்யும் தொழிலை வைத்து அல்ல.
* முதலில் கீழ்படியக்கற்றுக் கொள், பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.
* தவறுகளை ஒப்புக் கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக் கொள்ளும் பலமும்தான் உண்மையான வெற்றிக்கு வழி.

மலரவன்.

# கெருடாவில் தரைக்கீழ்க் குகை

இது சுண்ணக்கல்பாறைத் திண்மங்களினால் தரைக்குக்கீழ் அமைந்துள்ள குகைகளுள் ஒன்றாகும். யாழ்.குடாநாடு சுண்ணக்கற்பாறைகள் செறிந்த நிலஅமைப்பைக் கொண்டதாகும். மயோசீன் காலத்து பாறைப் படையமைப்பினை அது கொண்டுள்ளது. மாரிகாலங்களில் மேற்பரப்பில் மழையாகக் கிடைக்கும் நீர் பாறைமூட்டுக்கள் வழியாக கீழிறங்கி, தரைக்கீழ் குகைகள் ஊடாக பாய்ந்து சென்று கடலில் கலப்பதனைக் காணலாம். வல்வெட்டித்துறைக்கும் பொலிகண்டிக்குமிடையே காணப்படும் ஒரு கிராமத்தின் பெயரே அவ்வாறு தரைக்குக் கீழாக ஒடிவரும் நீர் ஊற்றுக்களை ஞாபகமூட்டுகின்றது. கடற்கரையிலே மலைமேலிருந்து கீழேவிழும் சிற்றருவிகள் போன்று நீர் வீழ்ந்து கொண்டிருப்பதனை மாரிகாலங்களில் இங்கு காணலாம். இக்கிராமத்தின் பெயர் ''ஊறணி'' என்பதாகும். ஊறணிக் கிராமம் பெயர் சூட்டப்பட்டமைக்கும் குடா நாட்டின் தரைக்கீழ் நீர் கடலோடு வந்து சேருகின்ற தொழிற்பாட்டின் பெரும் பரப்பிற்கும் இடையே இக்கிராமம் அமைந்திருப்பதே காரணமாக அமைந்தது. ஊர் + தண்ணி என்பது ஊர்தணி ஆகிப்பின் ஊறணி என இன்று மருவிக் கூறப்படுகின்றது எனலாம்.

தொல்லியல் ரீதியில் ஊறணி என்ற கிராமம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அக்கிராமத்தின் அருகில் பொலிகண்டி கந்தவனக்கடவை அமைந்திருப்பது அப்பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

இ.காவிரி.


# பொது அறிவு..

1. மன்னன் பண்டார வன்னியனால் ஒரே வாழ்வீச்சில் 60 வெள்ளைக்காரர்களின் தலைகளை வெட்டி வீழ்த்திய இடம் முள்ளியவளையில் அமைந்துள்ள கற்பூரப்புல் வெளி.
2. வற்றாப்பளை அம்மன் 10 ஆவது இடமாகிய நந்திக்கடற்கரையிலேயே கோயில் கொண்டருளிய இடம் திரிவு பெற்று10 ஆம் பளை என்பதற்குப் பதிலாக வற்றாப்பளை எனக் கூறப்படுகிறது. இதற்கு சரியான பெயர் பத்தாம்பளை.
3. ஒட்டுசுட்டானின் மேற்கே அமைந்துள்ள முத்துஜயன்கட்டுக் குளம் முத்தரையன் என்னும் அரசனால் கட்டப்பட்டதால் அது திரிவு பெற்று முத்து ஐயன்கட்டு எனப் பெயர்பெற்று விளங்குகிறது.
4. கரிபட்ட முறிப்பு - இந்த இடத்தில் யானைகள் அதிகமாக அழிந்ததனால் இப்பெயர் காரணப் பெயராக அழைக்கப்படுகிறது.
5. பண்டார வன்னியன் காலத்தில் பூதங்களால் கட்டப்பட்ட அடுக்குக் கல்லு என்று கூறப்படுமிடம் இப்போதும் அங்குண்டு.

சிலைநூர் தலைா.

## உயரப் பறக்கும் பட்டாம் பூச்சி...







ஊக்குவிப்பு: யாழ்ப்பாணம் அல் ஹதீஜா முன்பள்ளிச் சிறுவர்கள் முதலாம் ஆண்டுக் கல்வியைத் தொடர வேறு பாடசாலைகளுக்குச் செல்வதையொட்டி முன்பள்ளிச் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் [illegible] முகம்மதியா பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஒஸ்மானியா கல்லூரி அதிபர் [illegible] கற்றல் உபகரணங்களை வழங்குவதையும், கற்பித்த ஆசிரியர்களுக்குச் சிறுமி ஒருவர் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரட்டுவதற்காகவே அணு ஆயுதங்கள் ஈரான் வைத்துள்ளது என்கிறது ஆஸி.

## அமெரிக்காவுக்குக் கொடுத்த விளக்கம் விக்கி லீக்ஸில்

சிட்னி, டிசெ. 15

''ஈரான் ஒன்றும் பண்பற்ற கரடுமுரடான நாடல்ல; அது அணு ஆயுதங்களை வைத்திருப்பது மிரட்டத்தானே அன்றி, தாக்குவதற்கு அல்ல'' என்று ஆஸ்திரேலியா அமெரிக்காவிடம் தெரிவித்தது என 'விக்கி லீக்ஸ்' இரகசிய ஆவணங்கள் கூறியுள்ளன.

ஆஸ்திரேலிய உளவுத்துறையான தேசிய மதிப்பீட்டு அலுவலகம் (ஓ.என்.ஏ.,), ஈரானின் அணு ஆயுதங்கள் பற்றி கொண்டிருந்த அச்சம், மதிப்பீடுகள் ஆகியவை பற்றி, அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தங்கள் தலைமையகத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

இவற்றை, 'விக்கிலீக்ஸ்' இரகசிய ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளது என ஆஸியிலிருந்து வெளிவரும், 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட் டுடே' வெளியிட்டுள்ளது.

இது பற்றி அப்பத்திரிகையில் கூறியிருப்பவை வருமாறு:-

தனது தேசிய பாதுகாப்புக்காக, ஈரான் அமெரிக்காவுடன் மிகப் பெரிய பேரத்தில் ஈடுபட்டிருந்தது என ஓ.என்.ஏ., கருதியது. ஆனால், ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகள், அந்தப் பகுதியில் அணு ஆயுதப் போரை உருவாக்கி விடும் என்ற அமெரிக்காவின் அச்சத்தையும் ஓ.என்.ஏ., புரிந்து கொண்டது.

கடந்த 2008இல் ஓ.என்.ஏவின் அப்போதைய தலைவர் பீட்டர் வர்கீஸ், அமெரிக்காவுக்குத் தெரிவித்த தகவலில், ''ஈரான் அப்படி ஒன்றும் பண்பற்ற கரடுமுரடான நாடல்ல; அது அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பது, ஒரு முன்னெச்சரிக்கைக்காகத் தானே அன்றி, வலிந்து தாக்குதலில் ஈடுபடுவதற்காக அல்ல. அதன் முயற்சி இக்காலகட்டத்தில் ஒரு தவிர்க்க முடியாதது என்று ஓ.என்.ஏ., கருதியது.

அதேநேரம், தெற்காசியாவில் ஈரானின் இந்த முயற்சி மூலம் அணு ஆயுதங்கள் பெருமளவில் பரவி விடும் என்று ஆஸி. பயப்பட்டது - இவ்வாறு அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## அசேஞ்சை விசாரிக்க பென்டகன் முயற்சி

''பென்டகன் என்னை விசாரிக்க வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதனால் சுவீடன் நாட்டு நீதி எவ்வாறு முறைகேடாகப் பயன் படுத்தப்படும் என நான் மனம் உடைந்து போயிருக்கிறேன்,'' என்று 'விக்கிலீக்ஸ்' நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் தெரிவித்துள்ளார்.



'விக்கிலீக்ஸ்' நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் தற்போது பிரிட்டன் சிறையில் உள்ளார். அவர் மீது இரு பெண்கள் தங்களைப் பாலியல் பலாத்காரம் செய்தார் என சுவீடனில் முறைப்பாடு அளித்துள்ளனர். இதையடுத்து சுவீடனுக்கு அவரை கொண்டு போவதை எதிர்த்து அசேஞ்ச் வாதாடி வருகிறார். இந்நிலையில் திங்கட்கிழமை சுவீடன் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்தார் அசேஞ்ச்.

''ஸ்வீடனுக்கு அடைக்கலம் தேடி வந்த ஒரு பதிப்பாளர் நான். அமெரிக்காவின் பென்டகனை எதிர்த்து பெரியளவில் ஆவணங்களை வெளியிட்ட பின், என்னை எப்படியாவது விசாரிப்பதற்கு அவர்கள் முயன்று வருகின்றனர். இதனால் நான் மகிழ்ச்சியற்ற நிலையில் மனம் உடைந்து போயிருக்கிறேன். சுவீடன் நாட்டு நீதி தவறாக, முறைகேடாக பயன்படுத்தப்படுமோ என்று கவலை அடைந்திருக்கிறேன்''

- இவ்வாறு அசேஞ்ச் கூறினார்.

## அரசமைப்புச் சட்ட மீறல் முஷாரப் மீது வழக்கு

இஸ்லாமாபாத், டிச. 15

பாகிஸ்தானின் அரசமைப்புச் சட்டத்தை மீறியமை, ஊழலில் ஈடுபட்டமை போன்ற காரணங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீது இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகவிருந்த முஷாரப் திடீர் நெருக்கடி நிலைமையை அறிவித்தார். இந்நிலையில் ஷாஜகான் கான் துராணி என்பவர் இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதில் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் கடந்த 2008ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தை மீறி நெருக்கடி நிலைமையினை அறிவித்துள்ளார். ஊழலிலும் ஈடுபட்டுள்ளார்.

மேலும் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ படுகொலையைத் தடுத்து நிறுத்தாத முஷாரப் மீது தற்போதைய ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி நடவடிக்கை எடுக்காதது ஏன், 2006 ஆம் ஆண்டு பலுசிஸ்தான் தேசிய கட்சித் தலைவர் மீது இராணுவ நடவடிக்கை எடுத்தது ஏன் என்பது உள்ளிட்ட கேள்விகள் அடங்கிய மனுவுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

## தொழிற்சாலை இடிந்து எகிப்தில் 13 பேர் பலி

கெய்ரோ, டிசெ. 15

மத்திய கிழக்கு நாடான எகிப்தின் துறைமுக நகரான அலெக்சாண்டிரியாவில் கடும் மழைக்கு அங்குள்ள தொழிற்சாலை இடிந்தது. கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்தவர்கள் மீட்கப்பட்டபோது 13 சடலங்கள் கிடைத்தன.

இது குறித்து பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு:-

தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. குறைந்தது மேலும் 15 பேராவது இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம்.

9 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். அவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது:



கனடா வந்திருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை, வெளியுறவு அமைச்சர் லாரன்ஸ்கேனான் (வலது) வெக்பீல்ட் நகரில் வரவேற்கிறார். (எ)

## அமெரிக்க சிறப்புத் தூதர் ஹோல்புரூக் காலமானார்

வாஷிங்டன், டிசெ. 15

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ஹோல் புரூக் (வயது - 69) காலமானார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ரிச்சர்ட் ஹோல்புரூக் (வயது - 69). இவர் கடந்த ஆண்டு பதவியில் நியமிக்கப்பட்டார்.

இருதய நோயால் அவர் அவதிப்பட்டு வந்தார். கடந்த வெள்ளிக்கிழமை இவர் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனுடன் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென மயங்கி விழுந்தார்.

இதைத்தொடர்ந்து அவரது நிலைமை கவலைக்கிடமானது. உடனே அவரை வாஷிங்டன் பல்கலைக்கழக வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு 2 தடவைகள் இருதய அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. இருந்தும் அவரது உடல் நிலை தேறவில்லை.

## பங்களாதேஷில் புதிய அணுமின் நிலையம்

டாக்கா, டிசெ. 15

பங்களாதேஷில் புதிய அணுமின் நிலையம் அமைக்க சர்வதேச அணுசக்தி ஏஜென்சி (ஐ.எ.இ.ஏ) உதவி செய்ய முன்வந்துள்ளது.

பங்களாதேஷ் வந்திருந்த சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தலைவர் யூகியோ அமோனா ஜின்கூவா பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

பங்களாதேஷ், சர்வதேச அணுசக்தி ஏஜென்சியுடன் நெருங்கிய நட்புறவு கொண்ட நாடு. இதன் மின்தேவையினை பூர்த்தி செய்யவும், அணு உள்கட்டமைப்புகளை விஸ்தரிப்பதற்கு, அணு உலையினை அமைக்கவும் ஐ.ஏ.இ.எ. வேண்டியளவு தொழில்நுட்ப உதவிகளைச் செய்யும்.

இது குறித்து வெளியுறவு அமைச்சர் திப்பு மொனி என்னைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். விரைவில் அணு பாதுகாப்பு சட்டத் திட்டங்கள் உள்ளிட்டவைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் அணுமின்உலை ஆரம்பிக்கப்படும்.

## ஈரான் வெளியுறவு அமைச்சர் மௌனேச்ஹர் பதவிநீக்கம்

ஈரானின் வெளியுறவு அமைச்சர் மௌனேச்ஹர் மொட்டகி பதவிநீக்கம் செய்யப்பட்டார் என முன்னணி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் அவருக்குப் பதிலாக ஈரான் அணுசக்தி ஆணைக் குழுத் தலைவர் அலி அக்பர் சலேஹியை வெளியுறவு அமைச்சராக ஜனாதிபதி முகமது அஹ்மதிநிஜாத் நியமித்துள்ளார்.

இதற்கான காரணம் குறித்து அதிகார பூர்வமாகத் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

## நேபாள முன்னாள் இளவரசர் பராஸ் வான் நோக்கிச் சுட்டதனால் பரபரப்பு

காத்மாண்டு, டிசெ. 15

நேபாள முன்னாள் பட்டத்து இளவரசர் பராசுக்கும் துணைப் பிரதமர் சுஜாதா கொய்ராலாவின் மகள், மருமகன் ஆகியோருக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பராஸ் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேபாளத்தில் 300 ஆண்டுகளாக மன்னராட்சி தான் நடந்து வந்தது. மக்கள் புரட்சிக்குப் பின்னர் கடந்த 2008ஆம் ஆண்டு மன்னராட்சி இரத்துச் செய்யப்பட்டது. அப்போதைய மன்னர் ஞானேந்திரா தன் பதவியைப் பறிகொடுத்தார்.

மன்னராட்சி ஒழிக்கப்பட்டதும், பராஸ் ஷா சிங்கப்பூருக்கு போய் விட்டார். [illegible] தில்தான் அவர் நேபா[illegible] குத் திரும்பினார்.

38 வயதான பராஸ் தெற்கு நேபாளத்திலுள்ள சித்தாவன் தேசிய பூங்காவிலுள்ள டைகர் டாப்ஸ் ரிசார்ட் என்ற ஹோட்டலுக்குச் சென்றார். அவருடன் அவரது மனைவியும், இளம் வயது மகனும் சென்றிருந்தனர்.

அதே ஹோட்டலுக்குதுணைப் [illegible] களாதேஷைச் சேர்ந்த அவரது கணவர் சூபேல் சவுத்ரியும் சென்றிருந்தனர்.

உணவு மண்டபத்தில் இரு தரப்பினரும் சந்தித்துக் கொண்டனர். அப்போது மெலானியுடன் அவர் தகராறில் ஈடுபட்டார். அப்போது அவர் போதையில் இருந்தார்.

உங்கள் தாத்தா தான் சதி செய்து மன்னராட்சியை ஒழித்துவிட்டார் என்று பராஸ் குற்றஞ்சாட்டினார். இதை மெலானி மறுத்து பேச இதனால் இரு தரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

அப்போது உணர்ச்சி வசப்பட்ட பராஸ் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். அவர் 5 தடவைகள் துப்பாக்கியால் சுட்டார். உடனே அவரை ஹோட்டல் சிப்பந்திகள் அங்கிருந்து அழைத்துச் சென்றுவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கி முகாமைப் பணிப்பாளர் வெள்ளியன்று இலங்கை வருகிறார்

கொழும்பு, டிசெ.15

உலகவங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ஒகொன்ஜோ இவில . இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நாளைமறுதினம் வெள்ளியன்று இலங்கை வருகிறார்.

இந்த பயணத்தின் போது இலங்கை அரசின் முக்கிய அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளதோடு உலகவங்கியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களையும் நேரில் சென்று ஆராயவுள்ளார்.

நடுத்தர வருமானமுள்ளதொரு நாட்டில் நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியினை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தக் காலப்பகுதியில் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரது இலங்கைக்கான பயணம் அமைந்திருப்பதாக உலக வங்கி வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் இலக்காகக் கொண்டு உலக வங்கி கிழக்கு மாகாணத்தில் முன்னெடுத்துவரும் திட்டங்களை கலாநிதி ஒகொன்ஜோ இவில நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

உயர்கல்வி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் திட்டங்கள், சிறிய மற்றும் நடுத்தர வியாபார முனைப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் கணினிப் பயன்பாடு, கணினி அறிவினை அதிகரிக்கும் நோக்கிலமைந்த உலக வங்கியின் திட்டங்களையும் இவர் தனது பயணத்தின் போது பார்வையிடவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளையும் இவர் சந்தித்துத் கலந்துரையாடவுள்ளார். (த)

# நொச்சியாகமவில் உருவாகி வரும் நூறு அடி உயர நத்தார் மரம்!

## 50 ஆயிரம் மின்குமிழ்கள் ஒளிரவிட ஏற்பாடு

அனுராதபுரம், டிசெ. 15

இலங்கை வரலாற்றில் இதுவரை நிர்மாணிக்கப்பட்ட நத்தார் மரங்களின் அதிகூடிய உயரத்தைக் கொண்ட மரம் நொச்சியாகம புனித பொஸ்கோ தொழில்நுட்ப நிறுவனத்தால் எழுப்பப்படவுள்ளது.

சுமார் நூறு அடி உயரம் கொண்ட இந்த மரத்தை நிறுவுவதற்கு பச்சைத் தென்னோலைகள் மட்டுமே பாவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பணியை முடிக்க சுமார் 20 நாள் கள் எடுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.இந்த மரத்தில் 50 ஆயிரம் மின்குமிழ்கள் ஒளிர விடப் படவுள்ளன.

# 6 லட்சம் சுற்றுலா பயணிகள் இவ்வாண்டு இலங்கை வருகை

இலங்கைக்கு இவ்வாண்டு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6 லட்சமாக உயர்வடைந்துள்ளது.

ஆறு லட்சம் என்ற எண்ணிக்கையைத் தொடும் தம்பதியர் இருவரை வரவேற்க நேற்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலிய தம்பதியர் இருவரே இந்த அதிர்ஷ்டசாலிகள் எனத் தெரியவந்தது.

இவர்கள் லண்டனிலிருந்து யு.எல் 501 என்ற விமானத்தின் மூலம் நேற்று மாலை விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இவர்களை வரவேற்க சுற்றுலாச் சபையின் உயரதிகாரிகள் விமான நிலையத்திற்கு சென்றிருந்தனர் (த)

# யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.15

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் அண்மையில் வெளியாகின.

எனவே பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை மாவட்டநிலை ரீதியாக 'உதயன்' தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. ஒரு தொகுதி மாணவர்களின் விவரம் வருமாறு:-

### யாழ் இந்துக்கல்லூரி

**கணிதம் - 3ஏ**

லோ.கோபிநாத் (8), அ.சசிந்தன் (19), கு.ஸ்ரீசியாமளன் (22), மு.பிருந்தாபன் (16), ஜெ.திரோஜன் (17), சி.கௌதமன் 21, பு.இரோஷன் (26), ப.திருவரங்கன் (13), வி.விபுலன் (18).

**2ஏபி**

ந.சதீஸ்வரன் (60), ந.திருத்தணிகன் (32), அ.வஜீரன் (27), சு.கஜரதன் (56), ல.லவன், (48), சு.சிவதர்ஷன் (54), ஜெ.வரலக்ஷன் (31).

**ஏ2பி**

பா.பானுஜன் (75), செ.நிரோஷன் (62), அ.தனஞ்சயன் (77), பா.சாரங்கன் (96), பா.திருகுமரன் (70)

**உயிரியல்- 3ஏ**

சு.டினோசாந் (4), கு.நிருஜன் (2), பி.யதுகுலன் (13)

**2ஏபி**

நா.கிரியுகன் (25) , த.ரேணுசாந்த் (45), செ.சஞ்சீவன் (11), சி.ஆதிரேயன் (8), இ.கபில் நிஷாந்த் (30), பே. குகநாத் (56)

**ஏ2பி**

ந.நிரோசன் (49) , சி. சேயோன் (35), சு.கஜீவன் (88), ச.பிரதாபன் (30)

**வர்த்தகம்**

நா.அச்சுதன்-ஏ2பி, ந.ஜீவன்-ஏபிசி, க.பிரசாத்-ஏபிசி, அ.தர்ஷாந்த்-2பிசி, சி.அஜந்தன் 2பிசி.

**கலை**

உ.நிரோஷன்-ஏ2பி, உ.சுமன்-3பி, க.குகதாசன்-2பிசி, மோ.ரமணன்-ஏபிசி.

### தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**கலைப்பிரிவு**

ச.ஜெனனிதா-2ஏபி, ஞா.கீர்த்தனா-2ஏபி, பு.நிரோஷினா-2ஏசி, ம.நிருஷா-ஏ2பி, தி.டினேஸ்-ஏ2பி, செ.தர்சிக்கா-ஏ2பி, தி.மோகன்ராஜ்-ஏபிசி, இ.கவாஸ்கார்-ஏபிசி, இ.மேகலா-ஏபிசி, இ.டேவினா-ஏபிசி, இ.ஜதீபா-3பி, அ.ஆகன்யா ஏ2சி

மு.வத்சலா-ஏ2சி, யோ.ஜெயகணேஸ்-2பிசி, வி.ரெறன்ஸ்-2பிசி, ப.டயூரா-2பிசி, இ.மித்திரா-2பிசி, இ.பிரசாந்தன் -பி2சி, ஜெ.தயானுஜன்- பி2சி, க.கஜந்தினி-பி2சி,க.கஜிதா-பி2சி, சி.முருகாந்தினி-பி2சி, நி.சுஜனா-பி2சி, சி.தர்சிகா-பி2சி.

**கணிதம்**

ஜெ.பிரதாபன்-3பி, அ.சயந்தன்-2பிசி.

**விஞ்ஞானம்**

க.பீர்த்தனா-ஏபிசி, ந.நிரோஸ்-2பிசி, க.கிரிசாந்தன்-3சி, மோ.தர்சினா-3சி

**வர்த்தகம்**

த.தஜிந்தா-ஏபிசி, சீ.சியர்சா-3பி, ச.மதிராஜ்-பி2சி, சி.அபிராஜ் -3சி, அ.கிசாந்தன்-3சி.

### கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**கணிதம்**

இ.கோபிக்கண்ணா-ஏபிசி, க.ஸ்ரீரூபன்-2சிஎஸ்.

**உயிரியல்**

ச.தனுசன்-3பி, ச.வனுராகினி- 3சி, இ.சங்கீத்-சி2எஸ்.

**கலை**

இ.பிருந்தா-2ஏபி, ஜெ.சபிதா-3பி, தே.சோபனா-ஏபிசி, ப.ஜீவிகா-ஏபிசி, ஸ்ரீ.பத்மகரன்-ஏ2சி, க.குகதர்சினி-ஏபிஎஸ், யோ.றஜீவன்-ஏபிசி, ஸ்ரீ.ஜனனி - பி2சி.

யோ.சுதாயினி-பிசிஎஸ், ந.பாசினி-பி2சி, இ.குபேரிணி-2பிசி, பு.மிரோஜன்-2சிஎஸ், தெ.கனிதா-2சிஎஸ், நி.பிரதீபா-2சிஎஸ், இ.ஜீவவாணி-பிசிஎஸ், சோ.சுலக்சனா- பிசிஎஸ், யோ.பிரதாபன்-பிசிஎஸ், ப.ஜரண்யா-பிசிஎஸ், தி.சத்தியநிதி-ஏசிஎஸ், தே.சுபாகரன்- 2சிஎஸ்.

வோ.டேமியன்ராஜ்-2பிஎஸ், சு.நேருஜா-பிசிஎஸ், க.சிவதுர்க்கா-2சிஎஸ், ப.கௌரிபாலன்-2சிஎஸ், த.பிறேமிளா-2 சிஎஸ், செ.யசோதா-2சிஎஸ், கு.கார்த்திகா-2சிஎஸ், த.தர்மினா- 2சிஎஸ்.

### யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி

**வர்த்தகம்**

கே.தனுஷன்-3ஏ, ஜே.ஜே. கொலின்டன்-3ஏ, எஸ். ஜே.ஜொறி ஜோன்சன்-பி2சி,எம். தினேஸ்-பி2சி, பி.திலக்ஷன் -பிசிஎஸ், கே.திருச்செந்தூரன்-3சி, வீ.நிரோஜன்-3சி,வை.றுசாந்-3சி, ஜே.சுதர்சன் -3சி.

**கலை**

வீ.வலன்ரீன்மொறிஸ்-2ஏபி,ஏ.ஜே.கொலின்ஸ் ராஜ்-2ஏபி, ஜே. ஜோன் குறூஸ்-2ஏபி, எவ் ஆர். நிதர்ஷன்-2ஏசி, ஏ.ஆர் .யூட் அனிஸ்ரன்-2ஏசி,ஏ. அருள்ராஜ்-2ஏஎஸ்,எஸ். எட்வின் நரேஷ்-2ஏஎஸ், ஜே.ஏ.நியூமன் -ஏபிசி, சீ.வீஜோன் கலிற்ரஸ்-ஏ2சி, எம்.எஸ். சிவகஜன்-2பிசி, என். ஏ.கே.பி அகிலன்-ஏ2சி, ஏ.அனுஜன்-ஏ2சி, ரீ.நிமல்ராஜ்-ஏ2சி, ஏ.டி விநோத் அன்ரனி-2ஏஎஸ்.

**கணிதம் (தமிழ் மொழி மூலம்)**

பீ.றெஜி ரஜீவன்-ஏ2பி, எஸ். அனெஸ்லி பிலிப்-3பி, கே.பிறேம்நாத்-பி2சி, ஜே.ஜனார்த்தன்-2சிஎஸ், ஏ.ஜூட்நிஷான்- பிசிஎஸ், ஜே.பிராங்லின் நிராஜ்-பிசிஎஸ்.

**கணிதம் (ஆங்கிலம் மொழி மூலம்)**

ஜே.ஜோய்மாதவன்- பிசிஎஸ், எம்.என்.அனோஜ்கிளாமென்சன்-3சி.

**உயிரியல் (தமிழ் மொழி மூலம்)**

வி.அன்ரனி ஷெறோன்-2பிசி, பீ.தனஞ்சயன்-பி2சி.

**உயிரியல் (ஆங்கில மொழி மூலம்)**

எம். ஜோன் சேவயர்-சி2எஸ்.

# யாழ்.நகரில் விபத்து; அத்தியடி வாசி காயம்

யாழ். நகரில் 3ஆம் குறுக்கு வீதியில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இராணுவத்தினரின் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார்.யாழ். அத்தியடியைச் சேர்ந்த ஜே.சவீந்திரகுமார் (வயது 48) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-ஜ-78)

# மொழிக்கல்வி....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே சோம்பலைப் பாராமல், குறுக்கு வழிகளுக்குக் காசைக் கொட்டா மல் எந்த மொழியைக் கற்பதாக இருந்தாலும் அதன் அடிப்படை அம்சங்களை முதலில் புரிந்து கொள்வதே அம்மொழி யில் சிறந்த அறிவைப்பெற்றுக் கொள்ள ஒரு உரமான அத்தி பாரமாக அமையும். பள்ளிப்பருவத்தைத் தாண்டியவர்களுக்கு மொழிபெயர்ப்பு முறை ஆரம்பத்தில் சிறந்த பலனைக்கொடுக்கும். எனினும் ஓரளவு அடிப்படை அறிவு பெற்றபின் ஆங்கிலமொழி மூலத்துக்கு மாற்றிக்கொள் வது சிறந்தது. முறையாக ஒரு மொழியைக்கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டவர்கள் 'பெற்ற லேற் தான் னெவர்' என்ற கூற்றுக்கு ஏற்ப தமக்கென ஒரு வேணவாவை ஏற்படுத்திக் கொண்டு எப்படியாவது நேரத்தைக் கண்டு பிடித்து, தகுந்த ஓர் ஆசிரியரிடம் விடா மல் தொடர்ந்து கற்றால் தமது அறிவு எவ்வளவு விருத்தியடைகிறது என்பதைக் கண்டுகொள்ள முடியும். அது மட்டுமல்லாமல் தாம் இதுவரை கையாண்டு வந்த பேச்சுமொழியிலும் எவ்வளவு திருத்தம் ஏற்படுகிறது என்பதையும் கவனிக்க இயலும். குறுக்கு வழியில் தேடமுயலு வது கல்வியாக இருந்தாலும் செல்வமாக இருந்தாலும் அது நீண்டகாலப் பல னைத்தராதது மட்டுமல்லாமல் விபரீத பலன்களையும் தரக்கூடும். குதிரை ஓடிப் பரீட்சைகளில் சித்தியடைய முயலு வதும் அவ்வாறே.

ஆங்கிலமாக இருந்தாலும் சரி, சிங்களமாக இருந்தாலும் சரி அதை அறிந்து வைத்திருப்பது குறித்து நாம் பெரு மைப்படவோ, அது நமக்கு என்றும் பிரயோசனப்படவோ வேண்டுமானால், அதை நாம் அடிப்படையிலிருந்து இலக்கண மரபுகளோடு சேர்த்துக் கற்றுக்கொள்ளுவதே என்றென்றும் பயன்மிக் கதாக அமையும். மொழி என்பது நாம் வாழும் வீடு போன்றது. நான்கு தடிகளை நட்டு அதன்மேல் ஒரு தறப்பாளைப் போட்டும் வாழ்க்கை நடத்தலாம். உரமான அத்தி பாரத்தை முதலில் இட்டு அதன்மேல் வசதிக்கேற்றபடி ஒரு வீட்டைக்கட்டியும் வாழ்க்கை நடத்தலாம். எது பாதுகாப்பானது என்பதை நீங்களே ஊகித்துக் கொள் ளலாம். கேள்விஞானம் மூலம் அரை குறையாகச் சங்கீதத்தை பயின்ற ஒருவர், ஒரு இராகத்தை ஆலாபனை செய்ய முற்பட்டால் அது சங்கீதம் அறியாதவர்களுக்கு நன்றாகத் தெரியலாம். ஆனால் அவர் எந்த இராகத்தில் தொடங்கி எந்த இராகத்தில் முடிக்கிறார் என்பது சங்கீதத்தை முறைப்படி கற்றுக்கொண்ட ஒருவருக்குத் தான் வெளிச்சம்!

இதற்கு முக்கிய காரணங்கள் சுயமொழிக் கல்வி வந்தபின் ஆங்கிலம் கிடப்பில் போடப்பட்டு, பல தசாப்தங்களாக அதனைக் கற்பதற்கான ஆர்வமும் பெருமளவு குறைந்து விட்டமையும் ஆகும். தற்போது அதன் தேவை உணரப்பட்டு வருகிறது. பாடசாலை ஆசிரியர்களும் சரி, தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் சரி அடிப்படை ஆங்கிலத்துக்கும், ஆங்கில [illegible] செலுத்தி [illegible]. இன்று பாடசாலைகளில் பயில்பவர்களிலிருந்து பல்கலைக் கழக மாணவர்கள் வரை விடுகின்ற சில வாசகப் பிழைகளைப் பின் வருமாறு அவதானிக்கலாம். இவை சிறு வயதிலிருந்தே ஆசிரியர்களால் கவனிக்கப்படாமையினால் ஏற்படும் பழக்க தோஷங்களே:

| சரியானது | பிழையானது |
|---|---|
| two | tow |
| from | form |
| girl | gril |
| boy | doy |
| good | doog |
| kind | king |
| on | no |
| is | si |

வீட்டில் ஒரு ஆசிரியர் தனியே வைத்துக் கற்பிக்கும்போதும், ஆசிரியரும் மாணவரும் எதிரும் புதிருமாக அமர்ந் திருக்கும் போதும் இப்பழக்கம் பிள்ளைகளைப் பற்றிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பாடசாலையிலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்களிலும் சரி ஆங்கில ஆசிரியர்கள் தமது வழமையான பாடப் புத்தகத்தை வாசித்து விளங்கப்படுத்துவதோடு நில்லாமல் மாதத்தில் இரு தடவையாவது ஒவ்வொரு வகுப்புப் பிள்ளைகளையும் சிறு பிரிவுகளாகப் பிரித்து அவர்களிடையே வாசிப்பு, சொல்வதெழுதல், கவிதை சொல்லல் போன்ற விஷயங்களில் போட்டிகளை வைத்து புள்ளிகள் இட்டு ஊக்குவிப்பது அவர்களிடையே ஆர்வம் அதிகரிக்க உதவியாக இருக்கும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியில் அதிகாரங்கள் குவியக் கூடாது; இலங்கையின் நிலைமைக்கு அதுவே காரணம்



## தமிழக நிதியமைச்சர் அன்பழகன் தெரிவிப்பு

சென்னை, டிசெ. 15

மாநில அரசுகளின் ஆதரவால்தான் மத்திய அரசு நிலைக்கிறது. கூட்டாட்சிக் கொள்கையின்படி மத்தியில் அதிகாரங்கள் குவிந்துகொண்டே போகக் கூடாது. இதனால்தான் இலங்கையில் இப்போதைய விளைவு ஏற்பட்டது என்று தமிழக நிதியமைச்சர் க. அன்பழகன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

நாங்கள் பிரிவினை கோரவில்லை. உன்னோடு சேர்ந்து வாழ்வதற்கு இப்போது எங்களுக்குத் தடையில்லை. ஆனால், நீ எங்களை அடிமைப்படுத்துவதை நாங்கள் ஏற்கமாட்டோம். இதுதான் தி.மு.கவின் அடிப்படை நிலைப்பாடு.

பிரிவினையை மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை திருமாவளவன் போன்றவர்கள் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால் தெரியவரும். நமக்கு குழி பறித்து நம்மை வீழ்த்துகின்ற சக்திகள்தான் சுற்றி இருக்கின்றன. இன்றும் தமிழன் என்று சொல்லிக் கொண்டு தமிழகத்தில் கருணாநிதி ஆட்சி நடத்துவதா என்று கேட்கின்றவர்கள்தான் உள்ளனர்.

இப்போது மத்திய அரசு, மாநிலங்களை மதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மத்திய அரசு 100 இற்கும் மேற்பட்ட முறை மாநில அரசுகளைக் கலைத்தது. ஆனால், இப்போது அது முடியாது.

**இந்தியச் செய்திகள்**

மாநிலங்கள் நினைத்தால் மத்திய அரசைக் கவிழ்க்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மத்தியில் அதிகாரங்கள் குவிந்துகொண்டே போகக் கூடாது. இதனால்தான் இலங்கையில் இப்போதைய விளைவு ஏற்பட்டது

மாநிலங்களில் வட்டார உணர்வு காரணமாகத்தான் ஏதேனும் ஒரு வகையில் தெலுங்கானாப் போராட்டம் தொடர்கிறது. அவர்கள் ஏற்கனவே சம அந்தஸ்துடையவர்களாக இருந்த காரணத்தால் அந்த உணர்வு மேலோங்கி தெலுங்கானா கேரப் போராடுகின்றனர். இது தவறு என்று வாதிட முடியாது.

மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பது இன்று இல்லாவிட்டாலும் நாளை நடைமுறையில் கொண்டுவர வேண்டியது என்பது எனது நம்பிக்கை. மாநில அரசுகளின் பெருந்தன்மையால் தான் மத்திய அரசு நிலைக்கிறது. இப்போதும் காலம் மாறுகிறது.

- இப்படி அவர் கூறினார்.

# மஹிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத் கோருகிறது இந்திய கம்யூ.

சென்னை, டிசெ. 15

தமிழில் தேசிய கீதம் பாட இலங்கை அரசு தடை விதிப்பது குறித்து ஆராய்ந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கூறியுள்ளார்.

தமிழில் தேசிய கீதம் பாட இலங்கை அரசு தடை விதிப்பது குறித்து ஆராய்ந்துள்ளதற்குக் கண்டனம் தெரிவித்து தா. பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை இனவாத அரசு, இலங்கையின் தேசிய கீதத்தை இனிச் சிங்கள மொழியில் மட்டுமே பாட வேண்டும் என்றும்; தமிழில் பாடக் கூடாது என்றும் அறிவிப்பது குறித்து ஆராய்ந்துள்ளது. இது சிங்கள, தமிழ் மக்களிடையேயான நல்லிணக்கத்தை மேலும் பாதிக்கும் வகையில் உள்ளது.

மஹிந்த அரசின் ஜனநாயக விரோதச் செயல்களைக் கண்டித்து அனைத்துத் தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும்- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலித் தடை குறித்து வைகோ வழக்கு: பதிலளிக்க மத்திய அரசுக்கு நோட்டீஸ்

சென்னை, டிசெ. 15

விடுதலைப் புலிகள் இயக்கத் தடை நீடிப்பை உறுதி செய்து மத்திய தீர்ப்பாயம் வெளியிட்ட உத்தரவை இரத்து செய்யக் கோரி வைகோ தாக் கல் செய்த வழக்கில் பதி லளிக்குமாறு மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

புலித் தடை நீடிப்பு குறித்த தீர்ப்பாய உத்தரவை இரத்து செய்யக்கோரும் வைகோவின் மனு மீது விசாரணை நடந்தது.

தமது மனுவைத் தீர்ப்பாயம் நிராகரித்தது சரியல்ல என்று நீதிமன்றத்தில் வைகோ வாதிட்டார்.

வைகோ மனு மீதான வழக்கில் 3 வாரத்தில் பதில் அளிக்க மத்திய அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு விவகாரத்தில் கூட்டுக் குழு விசாரணை கிடையாது

## சோனியா திட்டவட்ட அறிவிப்பு

'ஸ்பெக்ட்ரம்' அலைவரிசை ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட மாட்டோம் - என்று சோனியாகாந்தி திட்டவட்டமாக கூறினார்.

காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டம் டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்தது. கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு -

காங்கிரஸ் கூட்டணி அரசு மீண்டும் அமைந்ததில் இருந்தே நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதில் எதிர்க் கட்சிகள் மும்முரமாக உள்ளன. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சி (பா.ஜ.க.) அதில் தீவிரமாக இருக்கிறது. இதை இந்திய மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் சரியான நீதியை வழங்குவார்கள்.

நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் முழுவதையும் வீணாக்கிய எதிர்க் கட்சியினரை மக்கள் மன்னிக்கவோ, மறக்கவோ மாட்டார்கள். எங்களுடைய அரசை பொறுத்தவரை எதையும் நாங்கள் மறைக்கவில்லை. யாருக்காகவும், எதற்காகவும் நாங்கள் அச்சப்படவில்லை. நாடாளுமன்றப் பொதுக்கணக்கு குழு, சி.பி.ஐ. போன்ற விசாரணைகள் நடைபெறும்போது மற்றவை எதற்கு என்பதே எங்களுடைய கருத்து.

ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விவகாரத்தில் பா.ஜ.கவின் இரட்டை வேடத்தை மக்களிடம் காங்கிரஸார் விளக்கிக் கூற வேண்டும்.

இந்த விவகாரம் குறித்து முதலாவதாக, பொதுக் குழு ஆய்வு நடைபெறுகிறது. இரண்டாவதாக, சி.பி.ஐ. விசாரணை நடைபெறுகிறது. மூன்றாவதாக, நிர்வாக நடைமுறைகளில் நிகழ்ந்த முறைகேடுகளை விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். விசாரணைகளைக் கண்டு மத்திய அரசு பயப்படவோ, வெட்கப்படவோ இல்லை - என்றார்.

# ஊழலை எதிர்த்து இந்தியா முழுவதும் பேரணி நடத்த பா.ஜ.க. கூட்டணி முடிவு

டில்லி, டிசெ. 15

ஊழலை எதிர்த்து இந்தியா முழுவதும் பேரணி நடத்த பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் திட்டமிட்டுள்ளன.




2 ஜி அலைக்கற்றை ஒதுக் கீட்டில் நடைபெற்ற முறைகேட்டை விசாரிக்க நாடாளுமன்றக் கூட்டு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் மட்டுமின்றி இடதுசாரிக் கட்சிகளும் வலியுறுத்தின. இதனால் நாடாளுமன்ற கூட் டத் தொடர் முழுவதும் முடங்கிப் போனது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் காந்தி சிலை அருகே தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல் தலைவர் எல்.கே. அத்வானி, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், மாநிலங்களவை எதிர்க் கட்சித்தலைவர் அருண்ஜேட்லி, தேசிய ஜனநாயக கூட்டணி ஒருங்கிணைப்பாளரும் ஐக்கிய ஜனதா தளத் தலைவருமான சரத் யாதவ், சிவசேனை, சிரோன்மணி அகாளிதளம் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரண்டு தங்கள் கோரிக்கையை வலியுறுத்தினர்.

# எம்.பிக்கள் அமளியால் புதியவரலாறு படைத்தது இந்திய நாடாளுமன்றம்!

## ரூ.1 கோடி 76 லட்சம் ஊழல் விவகாரத்தால் 23 நாள்கள் கூட்டத்தொடர் அடியோடு முடக்கம்

டில்லி, டிசெ. 15

முக்கிய அலுவல்கள் ஏதும் நடைபெறாமல் டில்லி நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் நிறைவுபெற்றது. இது நாடாளுமன்ற வரலாற்றில் முன்பு எப்போதும் நடைபெறாத புதிய பதிவாகும்.

2 ஜி அலைக்கற்றை ஊழல் முறைப்பாடு தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் இந்தக் கூட்டத்தொடரில் 23 அலுவல் நாள்கள் இருந்தும் ஒரு நாள்கூட அலுவல்கள் முழுமையாக நடைபெறவில்லை.

நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் கடந்த நவம்பர் 9 ஆம் திகதி தொடங்கியது. முதல் நாள் மட்டும் மக்களவையில் சில அலுவல்கள் நடைபெற்றன. மாநிலங்களவையில் அது கூட நடைபெறவில்லை.

இப்போதைய உறுப்பினர் ஒருவர் இறந்ததால் மாநிலங்களவை முதல் நாளே ஒத்திவைக்கப்பட்டது. இரண்டாவது நாளே ஊழல் விவகாரத்தால் அவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஊழல், ஆதர்ஷ் குடியிருப்பு ஊழல். இவற்றையெல்லாம் விட பல்லாயிரம் கோடிக்கான அலைக்கற்றை ஊழல் என எதிர்க்கட்சிகள் ஊழல் பிரச்சினையை முன்வைத்து அவையில் அமளியில் ஈடுபட்டன.

இதைத்தொடர்ந்து தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்த ஆ.ராசா இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

எதிர்க்கட்சிகளின் நெருக்கடியைத் தொடர்ந்து நவம்பர் 15 ஆம் திகதி அமைச்சர் ராசா இராஜினாமாச்செய்தார்.

இந்த நிலையில் நவம்பர் 16 ஆம் திகதி தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ராசா இராஜினாமாவால் திருப்தியடையாத எதிர்க்கட்சிகள் 2 ஜி அலைக்கற்றை ஊழல் முறைப்பாடு தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தின.

நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணையைத் தவிர வேறு எதையும் ஏற்க மாட்டோம் என்று எதிர்க் கட்சிகளும் கூட்டுக் குழு விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஆளும் கட்சியும் பிடிவாதமாக இருந்ததால்தான் நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்ந்து முடக்கப்பட்டன. தங்கள் கோரிக்கை ஏற்கப்படாத வரை அவை நடவடிக்கைகளை நடத்த விடமாட்டோம் என்று எதிர்க்கட்சிகள் அறிவித்தன.

இந்த நிலையில் ஏற்கனவே அறிவித்தபடி குளிர்காலக் கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) நிறைவு பெற்றது.

திகதி குறிப்பிடாமல் அவையை ஒத்திவைப்பதாக மாநிலங்களவைத் தலைவரும் குடியரசுத் துணைத் தலைவருமான ஹமீத் அன்சாரி வருத்தத்தோடு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணத்தை வெல்ல இலங்கை அணிக்கு அதிக வாய்ப்பு

கொழும்பு, டிசெ.15

அடுத்த உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் கிண்ணத்தைக் கைப்பற்ற இலங்கை அணிக்கு அதிக வாய்ப்பிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு முன்னோடியாக 'சிக்ஸர் சைட்' உள்ளூர்ப் போட்டித் தொடரை இன்று ஆரம்பித்து வைத்த அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கையிலுள்ள இளம் வீரர்கள் சர்வதேச அணிகளுக்குச் சவாலாக இருக்கிறார்கள். அவர்களின் திறமையை மேலும் வலுப்படுத்த கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முழுமூச்சாக முயற்சித்து வருகிறது.

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் கிண்ணத்தை வெல்வது எமது கனவாக உள்ளது'' என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(த)

# மூத்த வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே அணியின் மோசமான தோல்விக்குக் காரணம்

## - டானியல் விக்டோரி



இந்தியாவுக்கு எதிரான தொடரின் மோசமான தோல்விக்கு மூத்த வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே காரணம் எனக் குற்றம் சுமத்தியுள்ளார் நியூஸிலாந்து அணித் தலைவர் விக்டோரி.

இந்தியா வந்த நியூசிலாந்து அணி டெஸ்ட் (0-1) மற்றும் ஒரு நாள் தொடரை (0-5) மோசமாகத் தோற்றுத் திரும்பியது. தவிர, இந்தியாவுக்கு எதிரான தொடர்களில் இது அந்த அணிக்கு மிக மோசமான தொடராக அமைந்தது. இதுகுறித்து அணியின் தலைவர் விக்டோரி கூறியது-

இந்தியாவுக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்டில் தோல்வியடைய, அது ஒருநாள் தொடரிலும் தொடர்ந்து விட்டது. இது எங்களை மிகவும் வேதனைப்படுத்தி விட்டது. ஏனெனில் அனைத்து நியூஸிலாந்து ரசிகர்களும் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று நினைத்து இருந்தனர். ஆனால் போட்டியின் முடிவுகள் வேறுமாதிரியாக அமைய அவர்களை இது வெறுப்படையச் செய்துவிட்டது.

இந்த தோல்விக்கு நான் உட்பட அணியில் உள்ள மூத்த வீரர்கள் எல்லோரும் தான் பொறுப்பு. இப்போதைய நிலையில் எல்லோரையும் மன்னிக்க வேண்டும். அடுத்து, நமது கட்டமைப்பில் உள்ள குறையா அல்லது வீரர்கள் தேர்வில் குளறுபடியா என்பது போன்ற காரணங்களை ஆராய வேண்டும். அனைத்து வீரர்களும் உலக கோப்பைத் தொடருக்கு முன்பாக சிறப்பான முறையில் தயாராக வேண்டும்.

இதனிடையே, தோல்விக்கான காரணங்களை நியூஸிலாந்துக் கிரிக்கெட் சபை தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. இதுகுறித்து தலைமை அதிகாரி ஜஸ்டின் வாகன் கூறுகையில்-

''உலகக் கிண்ணத் தொடர் தொடங்கவுள்ள நிலையில் விக்டோரியை அணித்தலைவர் பதவியில் இருந்து மாற்றும் எண்ணமில்லை. தோல்வி குறித்து அடுத்த சில நாட்களில் விக்டோரி. பயிற்சியாளர், முகாமையாளர் ஆகியோரிடம் பேசவுள்ளேன்'' என்றார்.

# யாழ்.பாடசாலை அணிகளுக்கு உதைபந்தாட்ட உபகரணங்கள்



யாழ்ப்பாணம், டிசெ.15

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் இளையோர் விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட பாடசாலை அணிகளுக்கான உதைபந்தாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் இணைப்பாளர் ம.பேட்டி பனிஸ்ரார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.ஊதைபந்தாட்ட லீக் தலைவர் இன்ரனிப்பிள்ளை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா.நவரத்தின ராசா கிளிநொச்சி இளையோர் இணைப்பாளர் நிர்மலன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

போட்டிகளில் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு உதைபந்துகள் மற்றும் காலணிகளும் வழங்கப்பட்டன. (த-23-86)

# போட்டி நிரல் தயாரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படவிருக்கும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான நிரல் ஒழுங்கு தயாரிப்பு நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.

எனவே கழகங்களின் பிரதிநிதிகள் இருவரை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கூடைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(த-23)

# உலக செஸ் சம்பியன் போட்டி காலிறுதியில் இந்திய வீராங்கனை ஹரிகா



உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியின் காலிறுதிக்கு இந்திய வீராங்கனை ஹரிகா முன்னேறினார்.

துருக்கியில் உள்ள ஹடாய் நகரில், பெண்களுக்கான உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. இதில் இந்தியாவின் ஹரிகா, உக்ரைனின் மரியா முசிசுக் மோதிய 3ஆவது சுற்று 1-1 என சமநிலை அடைந்தது. இதனால் வெற்றியாளரை நிர்ணயிக்க 'ரை பிரேக்கர்' சுற்று நடத்தப்பட்டது. இதில் ஹரிகா வெற்றி பெற்றுக் காலிறுதிக்கு முன்னேறினார். ஏற்கனவே இத்தொடரின் காலிறுதிக்கு இந்திய வீராங்கனை ஹம்பி முன்னேறியுள்ளார்.

# கைப்பற்றப்பட்டது சூதாட்டப் பணம் இல்லை

## - சல்மான் பட்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கடந்த ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அப்போது சல்மான்பட், வேகப்பந்து வீரர்கள் முகமது ஆசிப், முகமது அமீர் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.

சூதாட்டத் தரகர் மஜித்திடம் கோடிக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஆசிப்பும், அமீரும் வேண்டுமென்றே முறையற்ற பந்து வீசியது கண்டு பிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்த 3 பேரும் அணியில் இருந்து நீக்கப்பட்டனர். சர்வதேச கிரிக்கெட் சபை இந்த நடவடிக்கையை எடுத்தது. சூதாட்டப் புகாரின் போது ஸ்கொட்லாந்துப் பொலிஸார் வீரர்கள் தங்கி இருந்த ஹோட்டல் அறையைச் சோதனை செய்தனர். சல்மான்பட் அறையில் இருந்து இங்கிலாந்துப் பணம் 15 ஆயிரம் பவுண்ஸ் கைப்பற்றப்பட்டது.

இந்த நிலையில் தனது அறையில் கைப்பற்றப்பட்டது சூதாட்ட பணம் இல்லை. அலவன்ஸ் தொகை என்று சல்மான்பட் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது-

நீண்ட சுற்றுப்பயணத்தின் போது வீரர்களுக்கு தினசரி அலவன்ஸ் வழங்கப்படும். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்தத் தொகையை அளிக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். எங்களுக்கு தினசரி அலவன்ஸ் தொகையாக 11 ஆயிரம் பவுண்ஸ் கிடைக்கும்.

அணித்தலைவர் என்ற முறையில் எனக்குக் கூடுதல் அலவன்ஸ் கிடைக்கும். இங்கிலாந்துப் பயணத்தில் எனக்கு 48 ஆயிரம் பவுண்ட்ஸ் அலவன்சாக கிடைத்தது. ஹோட்டல் அறையில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பணம் சூதாட்ட பணம் இல்லை. அந்த பணம் எல்லாம் அலவன்ஸ் தொகையாகும் - என்றார்.

## திறமை....



கௌரவம்: இந்தியாவில் இடம்பெற்ற 'குபுடோ நுன்சாக்கு' பயிற்சிப் பாசறையில் பங்குகொண்ட கராத்தேப் பிரதம ஆசிரியர் சென்சேய் அன்ரோ டினேஸுக்கு 'குபுடோ' நிபுணர் சென்ஸி சிவபாலன் சான்றிதழ் நினைவுச் சின்னம் வழங்குகிறார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணத் தொடருக்கான உத்தேச இலங்கை அணியில் சனத்!

கொழும்பு, டிச 15

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட இடம் கிடைக்காமல் இருக்கும் சனத் ஜெயசூர்ய மற்றும் சமிந்த வாஸ் ஆகியோர், உலகக் கிண்ணத் தொடருக்கான உத்தேச இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளனர்.

ஆசியக் கண்டத்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கான 29 பேர் கொண்ட உத்தேச அணியை, இலங்கைக் கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதில் அனுபவ வீரரும், ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூர்யவுடன், சமிந்த வாஸ் உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வை பெற்றுள்ள இவர்கள் இருவரும், நீண்ட நாட்களாக சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்குக் கூட தேர்வு செய்யப்பட வில்லை. எனினும், உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான உத்தேச அணியில் இவர்களின் பெயர் கள் இடம் பிடித் துள்ளன. இந்த அணி யில் டெஸ்ட் அரங்கில் 800 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ள சுழற்பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரனும் இடம் பெற்றுள்ளார். மற்றும் பல முன்னணி வீரர்களும் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்திய அணி முதலிடத்துக்குத் தகுதியானதே! தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை புகழாரம்

''டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, உலகின் முதல் நிலை அணியாக இருப்பதற்குத் தகுதியானது'' என தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை புகழாரம் சூட்டியுள்ளது.

இந்திய அணி தென்னாபிரிக்காவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதையடுத்து இதுவரை எந்த ஒரு நாட்டுக்கும் அளிக்காத ஒரு அதிகார பூர்வ வரவேற்பை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை நிகழ்த்திக்காட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்த சிறப்பு வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைச் செயலதிகாரி ஜெரால்ட் மஜோலா இந்திய அணியை வரவேற்றார். தென்னாபிரிக்க, இந்திய வீரர்கள் இதில் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்துகொண்டு பேசிய தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைத் தலைவர் நயோகா,

''டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, உலகின் முதல் நிலை அணியாக இருப்பதற்குத் தகுதியானதுதான்.

இந்த அணிதான் கடந்த 2 ஆண்டுகளில் தங்களுக்கு எதிராக விளையாடிய அனைத்து அணிகளையும் வென்றுள்ளது, இதனால்தான், முதல் இடத்தில் இருக்க இந்திய அணிக்கு முழுத் தகுதி உள்ளது.

பல ஆண்டுகள் சச்சின் வழங்கிய அபூர்வ கிரிக்கெட் நினைவுகளுக்காக அவருக்கு நன்றிகளைப் பதிவு செய்கிறேன், நீங்கள் ஒரு உண்மையான ஹீரோ, உண்மையான சம்பியன், இன்றைய கிரிக்கெட்டில் நீங்கள்தான் அதிகம் கொண்டாடப்படுபவர். ஒரு விளையாட்டு வீரராக, ஒரு மனிதராக நான் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன்.

அதேபோல், இந்தியக் கிரிக்கெட் சபையுடனான எமது நட்பு, சகோதரத்துவ முறையில் மேலும் நீடிக்கும் என்று கூறினார்.



நேற்றுமுன்தினம் பயிற்சியின் இடை வேளையின்போது ஹர்பஜன்- சச்சின்.

## உலகக் கிண்ணம் வெல்ல பாகிஸ்தானுக்கு வாய்ப்பு

### அப்ரிடி நம்பிக்கை

உலக கோப்பையை வெல்ல பாகிஸ்தானுக்கும் வாய்ப்பு இருப்பதாக அப்ரிடி நம்பக்கை தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ருவன்ரி - 20, 2 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டியில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து செல்கிறது.

இந்த தொடருக்கான அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி.

லாகூரில் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகிறது. நியூசிலாந்து தொடர் மற்றும் உலக கிண்ணம் குறித்து அப்ரிடி கூறியதாவது:

தொடர் தோல்விகளை சந்தித்து வருவதால் பாகிஸ்தான் அணி பலவீன மாக இருப்பதாக நினைக்க வேண்டாம். உலக கோப் பையை வெல்ல எங்களுக்கும் வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது - என்றார். (23)

# பஞ்சாப் அணியின் தடை குறித்த முடிவுக்கு இந்தியக் கிரிக்கெட் சபை மேன்முறையீடு!

மும்பை, டிச. 15

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் விளையாட, பஞ்சாப் அணிக்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்கு, உயர்நீதிமன்றம் 6 மாத கால இடைக்காலத் தடை விதிக்கப்பட்டமையை எதிர்த்து இந்தியக் கிரிக்கெட் சபை மேன்முறையீடு செய்துள்ளது.

பங்குதாரர்கள் தொடர்பான விதிமுறைகளை மீறி செயல்பட்டன எனக் கூறி, ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கு ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டிருந்தன.

இந்தியக் கிரிக்கெட் சபையின் இந்த அதிரடி நடவடிக்கையை எதிர்த்து பாதிக்கப்பட்ட இரண்டு அணிகளும் மும்பை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தன.

நடிகை பிரீத்தி ஜிந்தாவின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நீக்கத்துக்கும் மும்பை உயர்நீதிமன் றத்தால் இடைக் காலத் தடை தடைவிதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து இந்திய கிரிக்கெட் சபை மேன்முறை யீடு செய்துள்ளது. இந்த மனு மீதான விசாரணை நேற்று மாலை இடம்பெற்றது எனினும், அதுகுறித்த தகவல்கள் வெளிவரவில்லை.

# இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்: தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

செஞ்சூரியனில் நாளை ஆரம்பமாகவுள்ள இந்தியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுழல்பந்துவீச்சாளரான ஜோஹன் போத்தா, இடது கை வேகப்பந்து வீச்சாளரான வெய்ன் பார்னெல், இடது கை துடுப்பாட்ட வீரரான டுமினி ஆகியோர் இந்த அணியில் இடம்பெறவில்லை.

ரயான் மக்லாரன், லொன்வாபோ சொட்சொபே, போல் ஹரிஸ் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அணி விவரம் வருமாறு:-

கிரேம் ஸ்மித், டிவிலியர்ஸ், ஜக்ஸ் கலிஸ், ஆஷ்வெல் பிரின்ஸ், டேல் ஸ்ரெய்ன், மோர்னி மோர்கல், மார்க் பௌச்சர், சொட்சொபே, ரயான் மக்லாரன், போல் ஹரிஸ், ஹஷிம் அம்லா, அல்வீரோ பீற்றர்சன்.

# மனைவியைப் பிரிந்துவிட்டேன் - வோர்ண்

''தமது முன்னாள் மனைவியை விட்டுப் பிரிந்துள்ளமை உண்மைதான்.'' என ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான வோர்ண், ஏற்கனவே ஊக்க மருந்து உட்கொண்டமை மற்றும் கிரிக்கெட் சூதாட்டம் போன்ற பிரச்சினைகளிலும் சிக்கியவர். அதுமட்டுமன்றி, பிரிட்டன் தாதி ஒருவருக்கு ஆபாச 'எஸ்.எம்.எஸ்.' அனுப்பியமையால் துணை அணித்தலைவர் பதவிகூட பறிபோனது.

இவை இவ்வாறிருக்க, 'மொடல்' அழகிகளுடன் இவருக்குத் தொடர்பு இருந்தமை காரணமாக, தமது மனைவியான சைமன் கேலகவை விவாகரத்து செய்யும் நிலை ஏற்பட்டது. இருப்பினும், இவர்கள் தங்களது 3 குழந்தைகளுடன், மெல்போர்ணில் ஒரே வீட்டில் இணைந்து வசித்து வந்தனர்.

இந்நிலையில் இவரது புதிய காதலியான, பிரிட்டன் நடிகை லிஸ் ஹர்லியுடன் இணைந்து எடுத்த வீடியோ, புகைப்படங்கள் மற்றும் செய்திகள் லண்டனில் வெளியாகியிருந்தன. இத னால் மனைவியை விட்டுப் பிரிந்துவிட்டார் என வோர்ண் தெரிவித்துள்ளார்.



வோர்ணும் (வயது [illegible]), இவரது புதிய காதலியான நடிகை லிஸ் ஹர்லியும் (வயது-45)

இதுகுறித்து ஊடகவி யலாளர்களுக்குக் கருத்துக் கூற வோர்ண் மறுத்து விட்டார்.

ஆனால், தமது இணையத்தளத்தில் மனைவி குறித்து வோர்ண் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுகுறித்து அதில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

''எனது மனைவி சைமனுக்கும் எனக்குமிடையே பிரிவு ஏற்பட்டுள்ளவை உண்மைதான். எங்களது நெருங்கிய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இது குறித்துத் தெரிவித்துள்ளேன். இது மிகவும் சோகமானது - துரதிஷ்டமானது. குடும்பம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால், மேலும் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. இருந்தாலும், குழந்தைகளுக்கு நல்ல நண்பர்களாகவும், சிறந்த பெற்றோர்களாகவும் தொடர்வோம்.'' எனத் தெரிவித்துள்ளார்.

வோர்ணின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, இவரது புதிய காதலியான நடிகை லிஸ் ஹர்லியும் (வயது-45), தனது 'டுவிட்டர்' இணையதளத்தில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ''நானும் எனது கணவ ரான தொழில் அதிபர் அருண் நாயரும், ஆதாரபூர்வமாக சில மாதங் களுக்கு முன்னர், முறைப் படி பிரிந்துவிட்டோம். எனது நெருக்கமான குடும்ப நண்பர் களுக்கு இது தெரியும்'' எனத் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு ஏற்பட்ட சறுக்கல் காரணமாக, வோர்ண் மீண்டும் அணிக்குத் திரும்ப வேண்டும் என சமீத்தில் பலத்த வேண்டு கோள் விடுக்கப்பட்டது. ஆனால், இவரது புதிய காதலி பற்றிய செய்திகளால், அந்தக் குரலுக்கு தற்போது முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

## ஆஸி. அணி தேர்வுக் குழு மீது சாடல்

பேர்த் நகரில் நடைபெறவுள்ள ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன் றாவது போட்டிக்கு ஆஸ்திரேலிய அணியில் அனுபவமற்ற உள் ளூர் வீரர் மைக்கல் பியர் என்ற இடது கை சுழற்பந்து வீச்சாள ரைத் தேர்வு செய்தமை தவறு என்று முன்னாள் சுழற்பந்து வீச் சாளரான ஸ்டுவேர்ட் மெகில், ஆஸ்தி ரேலியத் தேர்வுக்குழுவைச் சாடி யுள்ளார்.

மைக்கல் பியர் ஆஸ்திரே லிய அணிக்காக விளையாடும் அளவுக்கு இன்னும் தகுதி பெற வில்லை. அவர் 3, 4 போட்டி களில் விளையாடியிருப்பார் அதிலும் ஒரு போட்டியில் 3 விக் கெட்டுகளை வீழ்த்த சிரமப்பட் டுள்ளார். அவரை எப்படி தேர்வு செய்ய முடியும் என்று ஸ்டுவேர்ட் மெகில் கேட்டுள்ளார்.

அதேபோல், முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் சேவியர் டோஹெர்ட்டி இடம்பெற்றிருக் கக்கூடாது என்று கூறியுள்ள மெகில், நதன், ஹரிட்ஸ் அணி யில் இடம்பெறவேண்டும் என் றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தையா அமிர்தலிங்கம் (ஆனந்தன்)



மண்டைதீவு 5ஆம் வட் டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா, சென்னை அண் ணா நகர் மேற்கு 6000 40 இலக்க இல்லத்தில் வசித்தவருமாகிய கந்தையா அமிர்தலிங்கம் (ஆனந்தன்) நேற்று (14.12.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க்ளான செல்வத்தம்பி கந்தையா, கந்தையா- பவளம்மா (செல்லமுத்து) தம்பதியரின் அருமை மகனும், மகாலட்சுமி (பிள்ளை)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுகிந்திரன் மற்றும் சிறீதர் (பொறியியலாளர்- கனடா) நிசாந்தினி (சென்னை வள்ளியம்மை கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நடனவிநாயகம் (கன்டா), கோபாலன் (கனடா), சித்திவிநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, இராசம்மா ஆகியோரின் அருமை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னை, 1758 1ஆம் தெரு, வசந்தா கொலனி, 18ஆம்பிரதான வீதி, அண்ணாநகர் மேற்கு,600040ஆம் இலக்க வீட்டில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று சென்னை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5ஆம் வட்டாரம், மண்டைதீவு.
பாலசிங்கம்-சிறிபாதன் (மருமகன்)

## சைக்கிளில் சென்ற வேளை பீடி புகைத்த வயோதிபர் எச்சரிக்கப்பட்டார்

சண்டிலிப்பாய், டிசெ.15

வீதியால் புகைத்துக்கொண்டு சென்ற வயோதிபர் ஒருவரை ரோந்து வந்த பொலிஸார் வழி மறித்து எச்சரிக்கை செய்து அவரிடம் இருந்த பீடிக்கட்டை பறித்தெடுத்து முறித்து எறிந்தனர்.

மானிப்பாயைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான இவர் வேலை முடிந்து வீட்டிற்குச் செல்லும் போது பீடியைப் புகைத்துக் கொண்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அவ்வீதியால் வந்த பொலிஸார் வயோதிபரை வழிமறித்து எச்சரிக்கை செய்ததுடன் இவரின் பீடிக்கட்டையும் எடுத்து முறித்தெறிந்தனர். (ஒ-115)

## கொக்குவில் தளையாழியில் பெண்ணின் சங்கிலி அறுப்பு

கொக்குவில், தளையாழி சபாபதி வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை சிறிய ரக மோட்டார் சைக்கிளில் வந்தவர் அறுத்துச் சென்றுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதே வீதியில் மூன்று தினங்களுக்கு முன்னரும் அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் பணம், நகை கள் என்பன திருட்டிச் செல்லப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தெல்லிப்பழை மகாதனை நரசிங்க வைரவர் ஆலயத்தின் நிர்வாக சபையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ)


## Jeya Beauty Saloon உரிமையாளர்



ந.நகுலராணி Dip.in. BTHD IN SRI LANKA & INDIA அவர்களால் நடத்தப்படும் அழகுக்கலைக் கருத்தரங்கு. (காலம்: டிசெம்பர் 20, 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு )

இடம்: சொர்ணாம்பிகை மண்டபம்,
527, நாவலர் வீதி, நல்லூர்.

சீட்டுக் கிடைக்கும் இடம்:
திரேசா தளபாட மாளிகை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
பௌசி ரெக்ஸ் பொயின்ட்,
57, முனிஸ்வரா வீதி.
யாழ்ப்பாணம் மற்றும் நுழைவாயில்)
மேலதிகத் தொடர்பு:-0772378724 (107393)


# மரண அறிவித்தல்

## வேலர் தம்பையா சண்முகவேல்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பிரதேச சபை, முள்ளியவளை)



அல்வாய், கிளிவிட்டியைப் பிறப்பிடமாகவும் "தாரணி", அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலர் தம்பையா சண்முகவேல் கடந்த 09.12.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிடர் தம்பையா - பாக்கியம் தம்பதியரின் இளையமகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகனும் இரவீந்திராதேவியின் அன்புக் கணவரும் திருமதி தாரணி சிறீதரன், உதயணன் (DIP IN PE), யாழினி (முதலாம் வருடம் , கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் சி.சிறிதரனின் (ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) மாமனும் நதீஸ்மனின் ஆசைப்பேரனும் காலஞ்சென்றவர்களான வே.த.தணிகாசலம் (ஓய்வுபெற்ற அதிபர்), வே.த.கந்தாரணியம் (ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர்), நவசக்தீ அருணாசலம், ஏகாட்சரி தங்கராஜா ஆகியோரின் சகோதரரும் மற்றும் பொ.இரவீந்திரநாதன் (ஓய்வுபெற்ற பரிசாரகர்), பொ.ஜெகநாதன், பொ.விஜயநாதன் (சுவிஸ்), திருமதி நிர்மலா வரதராஜா (லண்டன்), காலஞ்சென்ற பொ.ரகுரதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.12.2010 வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்கு வேம்படி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
"தாரணி", அல்வாய்.
குடும்பத்தினர்.
தொ.பே : 0776510113, 0214915681 (105463)


ஐடியலின் இன்னொரு சலுகை

## நம்புங்கள் இணையுங்கள் ஐடியல் அக்கடமி வெற்றி நிச்சயம்

| | | | |
|---|---|---|---|
| சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய் |

அடுத்த வருடம் O/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் எமது கல்வி நிறுவனத்தில் இணைந்து கல்வியைத் தொடர்ந்தால் அவர்கள் 90 வீத வரவினைப் பதிவு செய்து கொண்டு பரீட்சையில் சித்தியடையத் தவறினால் அந்த வருடக் கட்டணம் முழுவதும் திருப்பி மாணவர்களிடம் கையளிக்கப்படும்.

கணித ஆசானும், நிர்வாகியும்,
V.N.பத்மநாதன்
(சி/573524)


## பிரதேச செயலகம் - தீவுப் பகுதி தெற்கு, வேலணை

## விசேட மகாசபைக் கூட்ட அறிவித்தல்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்

மேற்படி நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கான விசேட மகாசபைக் கூட்டத்தினைக் கூட்டுமாறு ஊர்காவற்றுறை மாட்ட நீதிமன்றின் கௌரவ நீதிபதியவர்கள் என்னைப் பணித்துள்ளார்.

இதற்கமைவாக, மேற்படி கூட்டம் நீதிமன்றம் தீர்மானித்த தினமாகிய 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபை மண்டபத்தில் எனது தலைமையில் நடைபெறும். இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக அனைத்து வழிபடுநர் சபை அங்கத்தவர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி கூட்டத்தில் அறங்காவலர் சபைத் தேர்தலில் பங்குபற்றி தேர்தலில் ஈடுபட உரித்துடையவர்கள் தொடர்பான பிரேரணைகள் மட்டும் முன்வைக்கப்படும்.

எனவே, மேற்படி மகா சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு 2004ஆம் ஆண்டில் தகுதியானவர்கள் உட்பட, 2010 ஆண்டு வரையும் சந்தாப் பணத்தினைச் செலுத்தியவர்கள் கலந்துகொண்டு மேற்படி விடயமான பந்தி 03இல் குறிப்பிட்ட பிரேரணை தொடர்பான தங்கள் கருத்துக்களை வழங்க முடியும்.

மு.நந்தகோபாலன்,
பிரதேச செயலர்,
தீவகம் தெற்கு, வேலணை.

திகதி: 2010.12.14

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
19-01-1937

மறைவு
15-11-2010

## அமரர் பொன்னுத்துரை அருளம்மா

கடந்த 15.11.2010 திங்கட்கிழமை மரணமான அன்னாரின் மறைவு செய்தி கேட்டு நேரில் பங்குகொண்டோர், துயர் பகிர்ந்தோர் பல வழிகளிலும் உதவி புரிந்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (15.12.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

625/5, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### யேசுராசா ஜெயக்குமார் (ஜெகன்)



யாழ். முத்தமிழ் வீதி, 6ஆம் ஒழுங்கை கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யேசுராசா ஜெயக்குமார் (ஜெகன்) நேற்று (14.12.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் யேசுராசா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் நகுலாவின் அன்புக் கணவரும் மாலினியின் பெறாமகனும் ராஜினி, நந்தினி, தர்சினி, பிரியதர்சினி, சிவா, சர்மினி, வாசன், நேசன், பிரபா, நிலா, அஜித் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தங்கராசா, ராணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (15.12.2010) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்தமிழ் வீதி,*
*6ஆம் ஒழுங்கை, கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.* (107397)

*தகவல் :*
**குடும்பத்தினர்.**

## புகழ் கல்வி நிலையம் (சுதுமலை)

எமது கல்வி நிலையத்தில் பயின்று 2010 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொண்ட நம் மாணவச் செல்வங்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

| இல. | பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|
| 01. | M.நிலானி | 2 AB | 34 |
| 02. | S.நிரோஜா | 2 AB | 44 |
| 03. | S.தர்ஷிகா | A 2 B | 45 |
| 04. | N.விந்துஜா | A 2 B | 70 |
| 05. | R.அஜந்தா | A 2 B | 76 |
| 06. | K.சுபாஷினி | A B C | 121 |
| 07. | P.துகாயா | 2 AC | 125 |
| 08. | K.அனித்தா | 3 B | 192 |
| 09. | I..சர்மிலா | 3 B | 207 |
| 10. | R.சந்துஜா | 3 B | 290 |

*வாழ்த்தும் :*
*சுதுமலை வீதி,*
*மானிப்பாய்.*
**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள் (2011, 2012)**

★ DAY CLASS, கலை, வர்த்தக வகுப்புக்கள் 15.12.2010 புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு ஆரம்பமாகின்றன. (107395)

## வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# மீள்கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக்கடைகளினை 2011ஆம் ஆண்டுக்கு (01.01.2011-31.12.2011) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 15.12.2010-22.12.2010 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 22.12.2010 பி.ப. ஒரு மணி வரை.
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 22.12.2010 பி.ப. 2.00 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது கேள்விதாரரும் சமூகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்'' எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்'' எனும் முகவரிக்கும் எதிர்வரும் 22.12.2010 பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| இல. | விபரம் | கேள்விப் பத்திரப் பணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப் படக்கூடிய வைப்புப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | |
| 01. | பொதுச் சந்தை | 250.00 | 500.00 | 3,000,000.00 |
| 02. | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 267,000.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | | |
| 01. | ஆவரங்கால் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 15,675.00 |
| | நீர்வேலி உப அலுவலகம் | | | |
| 01. | நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 9,000.00 |
| 02. | நீர்வேலி பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 8,100.00 |
| 03. | நீர்வேலி மீன்சந்தை | 100.00 | 250.00 | 4,500.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | |
| 01. | கோப்பாய் வடக்கு பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 13,500.00 |
| 02. | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2,700.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | |
| 01. | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 31,600.00 |

குறிப்பு :

01. சந்தையிலிருந்து 01 கி.மீ. சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் உப அலுவலகத்துக்கு சமூகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரப் பணம், சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றுக்கு ஒப்பந்தம் எழுதும்போது உள்ளபடி வற் வரி செலுத்துதல் வேண்டும்.
04. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

*வலி.கிழக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*புத்தூர். 14.12.2010* (ஓ/573527)

தம்பையா நடராசா,
தவிசாளர்.

## கைதடிப் பகுதியில் வீட்டில் திருடுவதற்காக வளவில் பதுங்கியிருந்த நபர்கள்

### அவர்களில் ஒருவர் நேற்றிரவு பிடிபட்டார்

கைதடி, டிசெ.15

கைதடி மத்தியில் நேற்றிரவு 8 மணியளவில் திருட்டு முயற்சியில் ஈடுபட முனைந்த ஒருவர் பொதுமக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

திருட்டில் ஈடுபடும் நோக்குடன் வீட்டு வளவில் பதுங்கியிருந்த மூவரை வீட்டார் கண்டு கூக்குரல் இடவே இருவர் தப்பி ஓடிவிட்டனர். ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டார்.

பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட அவர் பின்னர் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இளவாலை யூதா கோயிலடியைச் சேர்ந்த யோசேப் செல்லையா சிறிபாஸ்கரன் என அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யபட்ட பிரஸ்தாப நபர் வழங்கிய தகவலின் பிரகாரம் தப்பியோடியவர்களைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவர்கள் கைதடிப்பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களின் சூத்திரதாரிகளாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஒ-ஐ-288)

## மட்டுவில், நுணாவில், கல்வயலில் டெங்கு பரவும் சாத்தியம் அதிகம்

தென்மராட்சி, டிசெ.15

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோய் ஏற்படக் கூடிய பகுதிகளாக மட்டுவில், நுணாவில், கல்வயல் ஆகிய பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் இருந்து காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் கடந்த 45 நாள்களில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களில் 17 பேருக்கு டெங்குநோய் அறிகுறிகள் உள்ளனவா என்பதை அறிவதற்காக அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அப் பகுதிகளில் அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் அனுசரணையுடன் சுகாதாரத் திணைக்களத்தினர் டெங்கு நோய் ஒழிப்பு புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-207)

### மீள் குடியமர்வு கொடுப்பனவு பெறாதோர் விபரம் சேகரிப்பு

தென்மராட்சி,டிசெ.15

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்து இதுவரை மீள் குடியமர்வு கொடுப்பனவு தொகையான ரூபா 5 ஆயிரம் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களின் விபரங்கள் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் திரட்டப் படுகின்றன.

இதுவரை இக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, இலங்கை வங்கியில் பெறப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-207)

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் பெண் நாயும், பொக்கட் பெனியர் ஆண் நாயும், 45 நாள் பூர்த்தியான அல்சேசன் நாய் குட்டிகளும் பொமேரியன் குட்டிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு- வி.மயூரன், இல.209, பலாலி றோட், கோண்டாவில் தெற்கு, கோண்டாவில்.(ராஜா சினமா முன்பாக)

## திருமறைக் கலாமன்றம்

*கலைத்தூது அழகியல் கல்லூரி*

**கண்டிய நடன பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்**

காலம்
இன்று (15.12.2010)
புதன்கிழமை
நேரம்
மாலை 5.00 மணி
இடம்
கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
20.12.1940

உதிர்வு
17.11.2010

### அமரர் சதாசிவம் பாலசுந்தரம்

*அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர் களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*17.12.2010 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*மடத்தடி,*
*சாவகச்சேரி வடக்கு.* (சி-573525) **குடும்பத்தினர்.**

## யாழ். வைத்தீஸ்வராவின் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்



செல்வி. விஜிதா வீரசிங்கம்
2A, B,- உயிரியல் பிரிவு (மாவட்ட நிலை 34)



செல்வி. கிருசாந்தி பாலச்சந்திரன்
A, 2C உயிரியல் பிரிவு (மாவட்ட நிலை - 106)

கா.பொ.த உ/த பரீட்சை - 2010 உயிரியல் பிரிவில் சாதனை படைத்து மருத்துவ பீடத் திற்கு தெரிவாகி கல்லூரி வரலாற்றில் தடம் பதித்துச் செல்லும் விஜிதா வீரசிங்கம் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று சிறந்த வைத்தியக் கலாநிதி ஆகி சேவை செய்யவும் இவருடன் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற கிருசாந்தி பாலச்சந்திரன் அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழவும் வாழ்த்துவதில் பெரும் மகிழ்வு அடைகின்றோம்.

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. (107371)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இறக்குமதிக்கு 50 சதவீத வரிவிலக்கு

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரச பணியில் சிரேஷ்ட நிலையை வகிப்போருக்கு, சிற்றூர்தி இறக்குமதிக்கு 50 சதவீத தீர்வை விலக்கை அளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபத்தை நிதி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது. இதன்படி, ஆகக்கூடியது 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வாகன இறக்குமதியின் போது, 50 சதவீதம் வரையிலான தீர்வை விலக்கு அளிக்கப்படவுள்ளது.

அரச சேவையில் ஆறு வருடங்களுக்கு மேல் சேவையாற்று வோர் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங் கப்படுவர். பொறியிய லாளர்கள், சட்டத் தரணிகள், வைத்தியர்கள், கணக்காளர்கள் ஆகியோர் இந்த நன் மையைப் பெறவுள்ளனர். இவர்கள் தவிர படைத் தரப்பின் லெப்டினன் கேணல், கொமாண்டோ, விங்க மாண்டர் ஆகியோரும் இந்தத் திட்டத்திற்கு உரித்து டையவர்களாவர்.

பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கு ஒரே வகையான தீர்வை வரியே வழங்கப்படவுள்ளது.

## வெள்ள அகதிகளில்199 பேர் தொடர்ந்தும் முகாம்களில்

கடந்த சில நாள்களாக பெய்த அடை மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோரில் மேலும் 199 பேர் மட்டுமே முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கம்பஹா, கேகாலை, கண்டி மாவட்ட மக்களே இவ்வாறு முகாம்களில் தங்கியுள்ளனர்.

தொடர் மழையாலும், வெள்ளம் காரணமாகவும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதுடன் ஆறுபேர் மரணமடைந்தனர்.மண் சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக 425 வீடுகள் முற்றாக அழிந்ததுடன் 4,750 வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த அடை மழை காரணமாக குருநாகல், கண்டி, கம்பஹா, இரத்தினபுரி, நுவரெலியா, புத்தளம், மொனராகலை, மன் னார், வுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ். மாவட்டம் ஆகியன வெகுவாகப் பாதிக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## 'விக்கி லீக்ஸ் நிறுவுனர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்பதற்காக, இவர் இலத்திரனியல் சாதனம் ஒன்றையும் அணிந்திருக்கவேண்டும் என்றும், தினமும் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து கையெழுத்திட்டுச் செல்லவேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் ரகசிய ஆவணங்களை வெளியிட்டமை தொடர்பாகப் புகழ்பெற்ற 'விக்கிலீக்ஸ்' இணைய தளத்தின் நிறுவனரான ஜூலியன் அசேஞ்ச், சுவீடனில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் சேஷ்டைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வழக்கு ஒன்றின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரம் போட்டித்தன்மை வாய்ந்ததாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நாணயமாற்று வீதம் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும் என்று நாம் தொடர்ந்து நம்புகிறோம்.

நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 2011 ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்டம் வரிமுறைமை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு போன்றவற்றுக்கான மறுசீரமைப் புடன் மேலதிக பற்றாக்குறையைக் குறைப்பதற்குக் குறிவைத்துள்ளது.

உத்தேசிக்கப்பட்ட வரி மறுசீரமைப்பு முறைமையை இலகுவாக்குகின்றது. பல வீதங்களைக் குறைக்கின்றது. அடிப்படையை விரிவாக்குகின்றது.

நிகர வருமானம் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

## மஹிந்தவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரை ரத்துச் செய்யப்பட்டமையானது ஒக்ஸ்போட் யூனியனும் பிரிட்டன் பொலிஸாரும் இணைந்து எடுத்த முடிவுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டது. அதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தலையீடு எதுவும் இருக்கவில்லை.

பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் விமர்சனம் எதனையும் மேற்கொள்ள முடியாது என தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியுடன் பிரிட்டனுக்குச் செல்லவிருந்த இலங்கையின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விஸா ரத்துச்செய்யப்பட்டமை தொடர்பில் தகவல் அளித்துள்ள பிரிட்டன் தூதரகம், தனிப்பட்டவர் களின் விஸா விண்ணப்பம் தொடர்பாக மூன்றாம் தரப்பிடம் கருத்துக்கூற முடி யாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வெளிநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது.

1373ஆம் பிரகடனம் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் பிரகடனங்களை அமுல்படுத்துமாறு இலங்கை அரசு குறைந்தபட்சம் 15 நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பயங்கரவாதிகளின் சொத்துகளை முடக்கும் நோக்கில் இலங்கை அரசு பல நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

## தமிழில் தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொழியான மலே மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுகிறது. மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் தனிநாடான பின்னரும் மலே மொழியிலேயே அதன் தேசிய கீதம் பாடப்படுகின்றது. கனடாவில் தேசிய கீதம் மூன்று மொழிகளிலும், சுவிற்சர்லாந்தில் நான்கு மொழிகளிலும் பாடப்படுகின்றன. தென்னாபிரிக்காவின் தேசிய கீதத்தில் ஐந்து மொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

தமிழில் தேசிய கீதத்தைப் பாடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பது குறித்து குழப்ப நிலை நிலவுகின்றது.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு அமைச்சரவை தடைவிதிக்கவில்லை என்கின்றனர். ஆனால், அது குறித்து அமைச்சரவையில் ஆராயப்பட்டது. சில அமைச்சர்கள் தடைவிதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதை அடுத்து இவ்விடயம் குறித்து ஜனாதிபதி எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டங்களில் ஆராயப்படுமெனத் தெரிவித்தார் என சில அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அரச வைபவங்களில் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு மட்டுமே தடைவிதிக்கப்பட்டது என சில அமைச்சர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழில் தேசிய கீதம் பாடுவது குறித்து இன்னும் குழப்ப நிலையே காணப்படுகிறது. செய்திகளில் குழப்பம் காணப்படுவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது குறித்து ஆராயவில்லை - என்றார். (ஒ-சி)

வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்
ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்
DHL WORLDWIDE EXPRESS
TCN Express
No-2B,Nelson Place, Colombo-6
திருமுருகன் கொம் ஹற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now
FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT
எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு
100% நல்ல சம்பளம்
கல்வித் தகமை: G.C.E.O/L போதுமானது
After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree
IELTS (International English Language Testing System) (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards
Diploma in English [48 Hrs] Advanced Diploma in English [64 Hrs]
100% பயிற்சி 100% வெற்றி
தொழில் புரிபவர்களுக்கும், உயர்கல்வியினைத் தொடரும் மாணவர்கட்க்கும் ஏற்றவிதமாய் நேர அட்டவணைகள் உண்டு
புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.
Quick Learning Course திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 14.12.2010 காலை : 10.00 மணி
18.12.2010 மாலை : 03.00 மணி

உயர் கலைக் கல்லூரி
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு
A/L Day class
ஆரம்பம் 17.12.2010
தமிழ் - சந்திர சேகர்
இந்து நாகரீகம், இந்து சமயம் - சிறீதரன்
புவியியல் - குமரன்
அரசியல் - இளங்கோ
வரலாறு - பத்மன்
நாடகம் - றமேஷ்
அளவையியல் - நீதன்
மனைப்பொருளியல் - றஜித்தா
"அறிவை அறிவால் அறிவோம்"

ICT ICT ICT
புதிய பிரிவுகள் ஆரம்பம் 15.12.2010
Grade- 10/11
நேரம்: 11.00 am
R.Kumaran - B.sc
0776577359

Personal class (கணினி)
* Ms Office 2007, Desk top Publishing, Internet and e-mail, Web Design, Graphic Design ஆகிய கற்கை நெறிகள், உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
* பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு:- கணினி இல்லாதவர்களுக்கு எனது Lap top மூலமாக பயிற்சியளிக்கப்படும்.
ஆசிரியர் KRC T.P:.779672038

A/L DAY CLASS
பௌதீகவியல்
BY. M.கருணாநிதி
* 30 வருட கடந்த கால வினாக்கள்
செய்முறை பரிசோதனைகள்
MON -- FRI 2.00-3.00 P.M. / ஆரம்பம்: 15.12.2010
NEW EDUCATION WORLD
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
புதிய ஆரம்பம் - உள்ளே...

VACANCY
யாழ். நகரில்
386, Clock Tower Road, Jaffna
இல் அமைந்துள்ள பிரபல புத்தக
நிலையம் ஒன்றிற்கு Accounts
Clerk தேவை. பெண்
பிள்ளைகள் விரும்பத்தக்கது.
வயது எல்லை (18-25)
தொடர்புகளுக்கு
T.P.0777277281

Deutsch, Dutch, French, Italian வகுப்புகள்.
மார்ச் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் Dutch புதியவகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை 18.12.2010 ஆரம்பமாகின்றன பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.
Vivekananda Academy,
No.02nd lane Palaly Road, Jaffna.
[அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்]
T.P: 021 321 6928, 021 222 0393, 077 4842464.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகின் மிக நீளமான பூனை

அமெரிக்காவில் உள்ள பூனையொன்று உலகிலேயே மிக நீளமான வளர்ப்புப் பூனையென்ற புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது.


'ஸ்டீவி' எனும் 5 வயதுடைய இந்தப் பூனை அண்மையில் அளவிடப்பட்டபோது அதனது மூக்கு முதல் வால் வரையிலான நீளம் 48.5 அங்குலமாக இருந்தது.

அதையடுத்து அப்பூனை உலக சாதனைப் பூனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நவேடா மாநிலத்தின் ரெனோ நகரைச் சேர்ந்த அப்பூனையின் உரிமையாளர்களான ரொபன் ஹென்ரிக்ஸன் மற்றும் எரிக் பரேன்ஸ்னெஸ் குறிப்பிடுகையில், இப்பூனையைப் பார்த்தவர்கள் அந்தப் பூனையின் நீளத்தைப் பார்த்து திகைத்ததுடன், அதனை உலக சாதனை வெளியீட்டாளர்களுக்கு அறிவித்தால் நிச்சயம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும் என்றும் கூறினார்கள். அதன்பின் நாங்கள் உலக சாதனை வெளியீட்டாளர்களுக்கு அறிவிப்பது என்று தீர்மானித்தோம்.

ஸ்டீவ் மூன்று வருடத்திற்கு முன்பே அபூர்வமான முறையில் நீளமாக இருந்ததை நாங்கள் அவதானித்தோம் என்று கூறியுள்ளனர். ஸ்டீவ்வுக்கு முன்னர் உலக சாதனைக்குரியதாக விளங்கிய பூனை 48 அங்குல நீளமானதாகும்.

அ.ஜானுசா, கொடிகாமம்.



## காத்திருப்பு

உன்னை எண்ணியபடி நான்.....
அந்திசாயும் வேளையில்
நாம்....
காலாற நடந்த நடைகள்
கேசம் கலைத்த காற்று
பகிர்ந்த கருத்துக்கள்
மெதுவாக உண்ட குறுந்தீனிகள்
சண்டையில் முடிந்த விவாதங்கள்
மாறிய சந்தர்ப்பங்கள்
நான் சமைத்து நீ ருசித்த உணவு
இவற்றிற்காக....
ஏக்கத்துடன்.....
காத்திருக்கிறேன்

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

## உயரமான மரம்

உலகின் உள்ள மிக உயரமான பகுதியில் மரம் வளர்வது சீனாவில் தான். தென் மேற்கு சீனாவின் ஹிமாலாயன் மலைப்பகுதியில் 4600 மீற்றர் உயரத்தில் சில்வர்ஃபிர் மற்றும் ஹிமாலயன், ப்ரிச் ஆகிய மரங்கள் வளர்கின்றன.

க.சோபா

## வாசிக்கப் பழகும் ரோபோக்கள்

ரோபோ என்ற சொல் எடுத்தாலே இயக்குநர் ஷங்கரின் எந்திரன் திரைப்படம்தான் தற்சமயம் எல்லோருக்கும் ஞாபகம் வருகிறது. ஏனெனில் இயந்திர மனிதனால் எப்படியெல்லாம் சாதிக்க முடியும் என்பதை கற்பனைக்கு அப்பாற்சென்று நிரூபித்திருக்கிறார் ஷங்கர். இதெல்லாம் நடைமுறைக்கு சாத்தியமா என பலர் கேள்விகேட்கிறார்கள்.

இந்தநிலையில்தான், இயந்திர மனிதன் பற்றி ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்ற விஞ்ஞானிகள், இயந்திர மனிதனின் புத்துாக்கம் பற்றிச் சிந்திக்க தொடங்கியிருக்கின்றார்கள். இதற்கும் நாங்கள் எந்திரன் ரஜனியோடு ஒப்பிட்டுக் கூறினால் தெளிவாகப் புரியும் என நம்புகின்றோம். எந்திரன் ரஜனியிடம் புத்தகங்களைக் கொடுத்தால் அதனை அப்படியே மனதில் படியவைத்துவிடுவதுபோல் காட்சிகள் அமைந்திருப்பதை அவதானித்திருப்பீர்கள். அதேபோல் உண்மையான இயந்திர மனிதர்களுக்கும் படிக்கும் பழக்கத்தை விருத்தி செய்வதற்கு விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள்.

எழுத்துக்களை அப்படியே படித்து விளங்கிக்கொள்வதென்பது எளிதான காரியமல்ல. ஆகையினால் முதலில் குறியீடுகளை ரோபோக்களுக்கு விளங்க வைக்கிறார்கள். அத்தோடு பிரபலமான கடைகளின் பெயர்பலகைகள், வீதிகளின் பெயர்கள் போன்றவற்றைப் படித்து விளங்கிக் கொள்வதற்கு ரோபோக்களை தயார்படுத்தும் முயற்சியில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த விஞ்ஞானி டொக்டர் இங்மர் போஸ்னெர் தலைமையிலான குழு முயற்சித்து வருகிறது.


இந்த முயற்சிக்காக மார்க் என்னும் ரோபோ தயாராகியிருக்கிறது. இதற்கு ஓ.சி.ஆர். தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி, அதாவது பார்வையால் பொருட்களை அடையாளம் காணுகின்ற முறையினை பயன்படுத்தி ரோபோக்களின் அறிவுக் கூர்மையை விருத்தி செய்ய விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள்.

இதுபற்றி விஞ்ஞானிகள் குறிப்பிடுகையில், எழுத்துக்களைப் புரிய வைப்பதென்பது மிகவும் கடினமான முயற்சி. ஏனெனில் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு வளைவுகளைக் கொண்டது. ஆகையினால் அதனை ரோபோக்களால் புரிந்துகொள்வதில் கடினம் அதிகம். ஆகையினால்தான் முதலில் குறியீடுகளை புரிந்துகொள்வதற்கும் பொருள்களை, பிரபல்யங்களை அடையாளம் காண்பதற்குமாக அறிவினை ரோபோக்களுக்கு படிப்பிக்கிறோம். இதனால் எதிர்காலத்தில் மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்று குறிப்பட்டுள்ளார்கள்.

எனவே, எதிர்வரும் சில வருடங்களில் மனிதனுக்கு இணையாக இயந்திரங்களும் உருவெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி மனிதனுக்கு நிகராக இயந்திரங்கள் உருமாறினால் என்னென்ன விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதற்கு எந்திரன் திரைப்படம் நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

ச.நிலக்ஷென், கொக்குவில்.

## உலக சாதனைப் பூசணிக்காய்



அமெரிக்காவிலுள்ள பூசணிக்காயொன்று உலகின் அதிக எடை கொண்ட பூசணிக்காயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விஸ்கொன்ஸின் மாநிலத்தின் ரிச்மொன்ட் நகரைச் சேர்ந்த கிறிஸ் ஸ்டீவன்ஸ் என்பவர் இப் பூசணிக்காயை வளர்த்துள்ளார். இதனது நிறை 1,810 இறாத்தல்கள் (821 கிலோகிராம்) ஆகும். இப்பூசணிக்காயின் அகலம் 15 அடியாகும்.

இதற்கு முன்பு அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தைச் சேர்ந்த நிக் மற்றும் கிறிஸ்டி ஹார்ப்ப என்பவர்களால் வளர்க்கப்பட்ட 1,725 இறாத்தல்கள் எடையுடைய பூசணிக்காய் உலக சாதனையை நிலைநாட்டியிருந்தது.

இச்சாதனையை கிறிஸ் ஸ்டீவன்ஸின் பூசணிக்காய் முறியடித்துள்ளது.

ஸ்டீவென்ஸ் இப்பூசணியின் பெரிய நிறை குறித்து கூறும்போது முறையான சூரிய ஒளி, மழை, மாட்டுக் கழிவுகள், மீன் கழிவுகள், மற்றும் கடற்பாசி போன்றவற்றை உரமாக பயன்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் அதிர்ஷ்டவசமாக இரண்டு ஜோடி சிறந்த விதைகளை பெற்றுக்கொண்டோம். அத்துடன் நாம் என்ன செய்கிறோம் என்பதை அறிந்திருந்தோம். பல காரணங்களால் உலக சாதனைக்குத் தெரிவு செய்யப்படாமல் போகலாம் என்பதால் அதிகாரிகள் அப்பூசணிக்காயின் எடையை அளக்கும்போது எமக்கு பதற்றமாக இருந்தது.

இந்த உலக சாதனை பூசணிக்காய்க்கு 50 சதவீதம் மரபியல் காரணமாகும். ஏனைய 50 சதவீத காரணம் அன்பும், முறையான பராமரிப்பும்தான் எனவும் ஸ்டீவன்ஸன் தெரிவித்துள்ளார்.

நா.பாம்மு, குடமியன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம் வட்டாரம் 07, யாழ்.மானிப்பாய் வீதி, ஆதன இல.118

வட்டாரம் 07,யாழ்.மானிப்பாய் வீதி ஆதன இல.118 இல் அமைந்துள்ள ஆதனமானது கந்தையா சண்முகநாதனும் பெண் பரமேஸ்வரியும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு ஞானப்பிரகாசம் ஜஸ்ரின் மேரியும் பெண் யூஜின் பத்மினியும் என்பவர்களால் 12162 - 2010.06.23 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து ஞானப்பிரகாசம் ஜஸ்ரின் மேரியும் பெண் யூஜின் பத்மினியும் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**திருமதி பு.சிவலிங்கம்**, செயலாளர்
வலி.தென் மேற்கு பிரதேச சபை மானிப்பாய்.

(107358)

## துயர் பகிர்கின்றோம்

*ஊர்காவற்றுறைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின் உயர்த்தி இயக்குநராக கடமையாற்றும் சு.குலேந்திரன் அவர்களின் அன்புத் தாய்*

**திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்**

*11.12.2010 (சனிக்கிழமை)*

*அன்று காலமான செய்திகேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவரின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.*

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
ஊர்காவற்றுறை.

(107365)

சுகாதார வைத்திய அதிகாரியும் உத்தியோகத்தர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் இராசையா கார்த்திகேசு
(இளைப்பாறிய வடமாகாண வருமானவரிப் பொறுப்பதிகாரி)

**தோற்றம்: 01.02.1939**
**மறைவு: 15.11.2010**

*கடந்த 15.11.2010 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தும், அஞ்சலி செலுத்தி இறுதிச் சடங்குகளில் ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் நினைவாக இன்று (15.12.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.*

72, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(107273)

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி கந்தையா

அன்னை மடியில்: 01.02.1928
ஆண்டவர் அடியில் 26.11.2009

திதி: தசமி

வையத்துள் வாழ வைத்த ஐயா!
ஆண்டொன்று ஆனதுவே
உங்கள் பாசமும் புன்சிரிப்பும்
காணாது ஓராண்டு கழிந்தனவே.

என்றும் நினைவுடன்:
**பாசமுள்ள மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

இல.10A, பிரவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(106994)

## நயினை ஆலய கூட்டம்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை மண்டபத்தில் நம்பிக்கைச் சொத்து வழக்கு இல. 02/10 தொடர்பான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனனின் பணிப்புக்கமைய வேலணைப் பிரசேத செயலர் இக்கூட்டத்தைக் கூட்டவுள்ளார்.

குறிப்பிட்ட வழக்கில் ஒரு சுமூகமான இணக்கத்திற்கு வருமாறு நீதிமன்றம் இரு தரப்பினரையும் கேட்டுக்கொண்டதை அடுத்து இக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## ஆனமடுவவில் வர்த்தகர் சுட்டுக் கொலை

கொழும்பு, டிசெ.15

ஆனமடுவ சங்கட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவரது வீட்டுக்குள் வைத்து இனந்தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதின இரவு 10 மணியளவில் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்த முகமூடி அணிந்த இருவர் வர்த்தகரைச் சுட்டுக் கொன்று விட்டுத் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது. இவர்கள் இராணுவச் சீருடையை ஒத்த உடை அணிந்திருந்தனர் என்றும் கூறப்பட்டது.

இரு பிள்ளைகளின் தந்தையான வர்ணகுலசூரிய (37) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

நீரிழிவுநோய்ச் சிகிச்சைக்கான மூலிகைகளைப் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த இவர் அதற்கென 50 ஏக்கர் நிலத்தை வைத்திருந்துள்ளார். இந்த நிலம் தொடர்பான வழக்கொன்று நீண்ட காலமாக நீதிமன்றத்தில் உள்ளது.

இது இப்படியிருக்கையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த கும்பலொன்று 20 லட்சம் ரூபாவைக் கப்பமாகக் கோரியிருந்து. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இக்கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர். (ம-5)

## துப்பாக்கிமுனையில் 12 லட்சம் கொள்ளை

புத்தளம், டிசெ.15

பட்டப்பகலில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி 12 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் அட்டவில்லு குடியேற்றத் திட்டத்திலுள்ள கியூலவத்த என்ற தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த சம்பளப்பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவதினம் பகல் 12 மணியளவில் மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த இருவர் துப்பாக்கி முனையில் மிரட்டிப் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர் எனத் தோட்ட உரிமையாளர் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (சி)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

இரங்கநாதன் பிரபாசங்கர்
(குஞ்சுபபி)

மலர்வு: 16.03.1967
உதிர்வு: 30.11.2006
திதி: தசமி




மெய்யை விட்டு
ஆவி பிரிந்து உம் உடம்பு
பொய்யாகிப் போய் இன்றுடன்
நான்கு வருடம் ஆனதப்பா!
கையேந்த நின்றவனும்
கைவிட்டுப் போன பின்னே
கலங்கி நின்று வாடுகின்றோம்
கவலை என்று தீரும் அப்பா!
என்றும் உங்கள் நினைவில்:

**குடும்பத்தினர்.**
உசன் தெற்கு,
மிருசுவில்.

(சி/573492)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 11 . 12 . 1952



இறப்பு 16 . 11 . 2010

## அமரர் சபாரத்தினம் தவராசா

*கடந்த 16.11.2010இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சபாரத்தினம் தவராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (16.12.2010) வியாழக்கிழமை கீரிமலையில் நடைபெறும். அன்றைய தினம் மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
இணுவிலானன் மேற்கு, உடுப்பிட்டி.

**குடும்பத்தினர்.**
*(சி/575983)*

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 01 . 1928



மறைவு 19 . 11 . 2007

துன்னையூர் சங்கர உடையார் வழித்தோன்றல்

**அமரர் வைத்திலிங்கம் சரஸ்வதி (பாப்பி ரீச்சர்)**

திதி: பூர்வபக்கதசமி (15.12.2010)

*ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்*
*ஆறிடுமோ எம்துயர் - அன்புத் தெய்வமே!*
*மூன்றாண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும்*
*எங்கள் நெஞ்சில் என்றும் நீங்கள் வாழ்வீர்கள்*
*அன்புத் தெய்வமே அம்மா!*
*உங்கள் ஆத்மா ஆண்டவனின்*
*பாதமடைய இறைவனை*
*வேண்டிக் கொண்டிருக்கின்றோம்.*

'தம்பலத்தனை',
துன்னாலை வடக்கு.

*(107124)*

உங்கள் பிரிவால் துயருறும்:
அருமை மகன் - பிரதாபன் குடும்பம் (லண்டன்),
இ.திலகேஸ்வரி (பெறாமகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org